கைலாசநாதர் சூத்திரம் 201

காலாங்கி நாதர்

கற்பவிதி, பூஜா விதி, திட்சாவிதி

சூதமுனி சூத்திரம்



தாமரை நூலகம், சென்னை – 26.

கைலாசநாதர் சூத்திரம்-201

காலாங்கிநாதர்-கற்பவிதி, பூஜாவிதி, தீட்சாவிதி & சூதமுனி-சூத்திரம் 110

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண்	:	142
முதல் பதிப்பு	:	மே 1995
இரண்டாம் பதிப்பு	:	மே 2009
மூன்றாம் பதிப்பு	:	பிப்ரவரி 2013
நான்காம் பதிப்பு	:	ஜுன் 2019

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	கைலாசநாதர் சூத்திரம்
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	ஜுன் 2019
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி
அச்சுத்தாள்	:	16 கி.வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	144
பிரதிகள்	:	1000
நூல் விலை	:	ரு. 75/-
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை -34

பதிப்புரை

ஓலைச் சுவடிகளிலிருந்து புத்தகங்களை வெளியிடுவது கடினமான காரியம். ஏனென்றால் சுவடிகளை எழுதியவர்கள் பிழைகளை விட்டிருக்கலாம். தவிர சுவடிகளிலிருந்து பார்த்து எழுதும்பொழுதும் தவறு நேரலாம். ஒவ்வொரு பாடலையும் திருத்தி முற்றிலும் பிழையில்லாமல் வெளியிடுவதென்பது மிக கடினமான காரியம்.

இருப்பினும் இந்த நூல்களில் காணப்படும் மிக அரிய விஷயங்கள் எப்படியும் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே இந்த நூல்களை வெளியிடுகின்றோம்.

இவற்றுள் கைலாசநாதர் சூத்திரம் 201. மிகப்பழைய ஓலைச்சுவடி. கைலாசநாதர் என்ற பெயர் புதிதாகக் காணப்பட்ட போதிலும் இந்நூலை இயற்றியவர் சட்டைமுனியே என்று நம்புவதற்கு இடம் உள்ளது.

காலாங்கி நாதரைப் பற்றிக் கூறவேண்டியதில்லை திருமூலரின் சீடர். போகமுனிவரின் குரு. இவர் மிகப் பல நூல்களைச் செய்திருப்பதாக கூறிய போதிலும் நமக்குக் கிடைத்திருப்பவை மிகமிகக் குறைவு. அதனால் கிடைத்துள்ள இந்த நான்கு நூல்கள் பொக்கிஷம் போன்றவை.

ஓலைச் சுவடிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவை ஆகையால் பிழைகள் இருந்த போதிலும் அருமை கருதி தமிழகம் இவற்றை ஏற்றுக் கொள்ளும் என நம்புகிறோம்.

எஸ்.பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

கைலாசநாதர் சூத்திரம் – 201

சூத்திர மோது முன்னே
　　சொல்லுகிறேன் கணேசன் காப்பு
சாத்திரம் நிறைந்து பொங்கிச்
　　சராசர மெங்குந் தானாய்
தோத்திரப் பொருளுந் தானாய்ச்
　　சொல்வது மவுன மத்து
போத்திரப் பிறப்புள்ளான
　　பூரணங் காப்புத் தானே. (1)

குருவான பூரணமே சின்மயமே அய்யா
　　குவட்டிலுள்ள சித்தரெல்லாங் கூடிக்கொண்டு
தருவான யெந் நூலில் தீட்சை மார்க்கஞ்
　　சாதகமா யிருநூறு கணித்தாரையா
உருவான வாதத்தில் பத்து நூறு
　　உரவான நிகண்டிலே பன்னிரண்டு நூறு
கருவான கற்பத்தி லொன்று நூறு
　　கைவிட்ட ஞானத்தி லிரண்டு நூறே (2)

நூறான யிருபத்து அஞ்சு நூறுங்
　　நிரவொரு கோர்வையாய் வைத்துக் கொண்டு
தேறான சித்தருடன் வாது செய்தார்
　　திரும்பவர் பாடினார் திருட்டு வாதங்
கூறான வாதத்தில் வழலை மார்க்கம்
　　குழி வெட்டி முடியல்லோ உப்பெடுக்கச் சொன்னார்
வீறான மடபதிகள் கருவை யெல்லாம்
　　வெட்டிட வெளியாய் துறந்து வீசுறேனே (3)

வீசுறேன் சூத்திரத்தைச் சுந்தரமே கேளு
வீதியெல்லாம் வாத மயமாயோட
வீசுறேன் உலகமெல்லாம் பொன்மயமாய்ப் போக
விரைந்து சித்தர்தான் கேட்டு மெச்சவாக
வீசுகிறேன் சித்தரெல்லாம் இணைந்து யெங்கள்
வேதாந்த மூலகுரு மிகவே மெச்ச
வீசுறேன் வாதத்தில் ஆதியென்ன
வெட்டவெளி சவுக்காரம் விளம்பக் கேளே (4)

சவுக்காரம் காய்ச்சும் முறை

கேளப்பா சவுக்காரஞ் செய்யும் வாதங்
கெடியான உள் சரமோ படிதா னெட்டு
நீளப்பா கற்சுன்னம் படிதான் யிரண்டு
நேராகக் கல்லுப்புப் படிதானொன்று
ஆளப்பா அமுரி படி பதினாறுக் குள்
ஆச்சரிய மிதையெல்லாங் கரைத்து வைத்து
கோளப்பா சொல்லுகிறேன் பொளிவை வாங்கிக்
குமிரவே காய்ந்த பின்பு எள்ளெண்ணெய் வாறே (5)

வாத்தெரிக்கத் திரண்டு வரும்பதத்திலே நீ கேள்
மக்களே எடுத்துருட்டு விளாங்காய் போல்
கோத்தரித்த யெண்ணை யெல்லாஞ் சவுக்கார மாகுங்
குருகாதே நெடு காதே உண்டைச் செய்து
பாத்தெரித்துப் பதத்தோடே பாங்காய்ப் பண்ணு
படபடத்துப் பண்ணாதே யிளகிப் போகும்
மூத்தெரிப்பு முதிர்ந்தக் கா லுதிர்ந்து போகு
முறையோடே சவுக்கார வுண்டை செய்யே. (6)

செய்யயிலே சித்தரெல்லா மிப்படியே செய்வார்
சித்திலே இதைவிட்டு வுலகத் தோர்கள்
மைய்யயிலே விளக்கெண்ணை யிலுப்பையெண்ணை
வாகான குருந்தெண்ணை புங்கினெண்ணை
கைய்யிலே இதனாலே சவுக் காரஞ் செய்வார்
காசுக்கு மாகாமல் களகளத்துப் போகும்
வைய்யிலே தப்பு வண்ணாற் காகும்
வாத்தது சிகரகம் --- மக்காள் பாரே. (7)

91/4

பாரப்பா இதையெடுத்து உலக வாதி
பாங்காகக் கட்டியல்லோ சுண்ணத்தில் வைத்து
நேரப்பா தணலி லிட்ட அரக்குப் போலே
நிமிசத்தே கலகலத்து உருகிப் போகும்
சேரப்பா சாத்திரங்கள் பொய்யே யென்பார்
செகத்திலே தேவியுட தீட்சை காணார்
தாரப்பா அவளுடைய பலத்தினாலே
சூட்சமாய் எண்ணையைத்தான் களத்துவாரே. (8)

களத்தியல்லோ வெண்கருவா லரைத்துக் கொண்டு
கைமுறையாய் சுண்ணாம்பில் புடமுந் தீர்த்து
தளத்தியல்லோ சீனத்தின் சுண்ணமூட்டி
சாதகமாய்ப் புடம் போட்டு சுண்ணஞ் செய்வார்
உளத்தியல்லோ யிதை யெடுத்துக் காரமேத்தி
உலத்தி யல்லோ வீர மிட்டுச் சுண்ணாம்பாக்கி
வளத்தியல்லோஉப் பெடுத்துக் காட்டுவார்கள்
மகுத்தான தேவியுட வாதங்காணே. (9)

காணப்பா யித்தனைதான் பாடுபட்டுக்
கைமுறையாய்த் துருக நன்றாய் வெளுப்பேறாது
தோணப்பா உப்பு நன்றாய்ச் சுண்ணாம்பாகத்தோடு
குறிக்கோ செய நீர்க்கோ சுருக்குப்போட
ஊணப்பா விதினாலே சரத்தைக் கட்டி
யொட்டி டியார் இள மரத்தேக் காணுந்
தாணப்பா துரும்பாகுந் துரும்புதானாம்
சொற் பெரிய தேவியுட வரத்திலாச்சே. (10)

வரம்பெத்த வாதியெல்லாம் மகத்தாம் வாதி
வைத்தெடுத்த நல்லெண்ணைச் சவுக்காரம்
உரம்பெத்த கடுஞ் சுண்ண மாகச் சொல்வேன்
ஓடுகிற சித்தரெல்லாம் ஒளித்து யெங்கள்
தரம்பெத்த சவுக்காரம் பாண்டத்தில் வைத்து
சாதகமாங்கல் சுண்ணம் கீழ் மேலிட்டுக்
கரம் பெத்த குழிவெட்டிக் கடுக வைத்து
கைமுறையாய் சட்டி கொண்டு கவிழ்த்துமூடே (11)

மூடியல்லோ மண்போட்டுத் தண்ணீருற்றி
மூன்று தினங்க ளானபின்பு திறந்து பாரு
ஊடியல்லோ இதையெடுத்துக் கழிபோலக் கட்டி
உத்தமனே சுண்ணாம்புக் கல்லில் வைத்துக்
காடியல்லோ தெளித்திடுவாய் வேக வேகக் கக்கி
இது எண்ணையெல்லாம் கருக்கும் பாரே
நீடியல்லோ எண்ணை எல்லாஞ் சுண்ண முண்ணும்
நேராக சவுக்காரம் உருகி நிற்கும். (12)

பாரப்பா கறுத்த தென்று மயக்க வேண்டாம்
பரிவான வெடியுப்புச் செய நீர் தன்னை
நேரப்பா சீனத்தில் ஊற்றிப் பாரு
நிமிஷத்தில் சோறுபோலக் கொதித்து வேகுங்
காரப்பா வெயிலில் வைக்கச் சீனச் சுண்ணம்
கடுஞ்சுறுக்கு கடுஞ்சுறுக்கு எண்ணை யுண்ண
தாரப்பா இதையெடுத்து வெண்கருவால் ஆட்டிச்
சுகமாக வழலைக்கு கவசம் போடே. (13)

போட்டல்லோ ஆவியில் வைத்து காய்ந்தபின்பு
புகழாகச் சுண்ணாம்புப் பொடியில் வைத்து
நீட்டியல்லோ புடம்போடு திரும்பி நன்றாய்
நேராகப் பதினொன்று புடமும் தீர்ந்து
மூடியல்லோ இதையெடுத்துக் கவசம் வாங்கி
மூதண்டச் சுண்ணாம்பின் கைவசஞ்சொல்வேன்
பூட்டியல்லோ கடலினுரைச் சுண்ணம் வாங்கிப்
புகழாகப் பலம் ரெண்டு தூக்குத் தூக்கே. (14)

தூக்கப்பா இந்தெடைக்கு வெடியுப்புத்' தானுஞ்
சேராப் பெரிய உப்பிடைக்குச் சூடன்போடு
தாக்கப்பா சூடனிடைச் சீனக்காரம்
சாதகமாய் சீனமிடைக் கல்லுப்புக் கூட்டி
போக்கப்பா இதுவஞ்சும் வெடியுப்பு நீரால்
புகழ்போலே அரைத்து நன்றாய் வில்லைகட்டி
வாக்கப்பா சுண்ண நீர்க்குள்ளே வைத்து
மயங்காதே கனபுடமாய் மாட்டிப்போடே. (15)

போட்டதொரு வில்லையைத்தான் வெண்கருவாலாட்டிப்
புகழாகக் காசுபோல வில்லை தட்டி
நீட்டதொரு சுரியோட்டில் வைத்து ஊது
நேராக வெளுப்பொடிச் சுண்ணமாகும்
மூட்டதொரு மூட்டிதுதான் சுண்ண மாக்க
முரைகோடி துரைகோடி சுண்ண மாகும்
ஆட்டதொரு சுண்ணத்தை வெண்கருவா லாட்டி
அர்க்கார சவுக்காரத் தப்பி வைய்யே. (16)

அப்பியல்லோ கவசமிட்டு ஆவியில் போடு
அப்பனே மூன்று நாள் சீலைச் செய்து
ஒப்பியல்லோ கரியோட்டில் வாட்டு வாட்டு
ஓகோகோ எண்ணெயெல்லாம் உறிஞ்சிக்கொள்ளும்
தப்பியல்லோ எண்ணையுள்ளே சத்தே நின்றால்
சாதகமாய்ப் பின்னொருக் கால்கவசம் போட்டு
செப்பியல்லோ கரியோட்டி லூதிப் போட
சிவச்சிவா சவுக்காரச் சுண்ண மாச்சே. (17)

சுண்ணமடா சவுக்காரக் கட்டி கட்டி
சொல்லாதக் கருவை யெல்லாம் சொன்னேன் சொன்னேன்
கன்னமடா போடுதற்கு வாதங் கூடக்
கைக்கேற்ற கன்னக்கோல் வழலைச் சுண்ணம்
யின்னமடா சொல்லுகிறேன் சுந்தரமே கேளாய்
இதையெடுத்துக் கடுங்கார மேற்றக் கேளு
முன்னமடா அண்டமது முப்பத் தொன்று
முந்தியதோர் வெண்கருவை யூத்து ஊத்தே. (18)

ஊத்தியல்லோ பீங்கானில் மாணாக் காளே
உத்துநின்று கேளுங்கோ கடுங்காரத்தை
போத்தியல்லோ வீரமொரு காசு போடு
புகழான பூரமொரு காசு போடு
ஆத்தியல்லோ நீர்மை யோர்காசு போடு
அதனோடே அஞ்சு சுண்ணங் காசு போடு
மாத்தியல்லோ பொடி செய்து வெண்கருவில் போட்டு
மத்திப்பாய் குச்சியினால் மத்திப் பாயே. (19)

பத்திச்சுக் கடைஞ்சாக்கால் வெண்ணை போலாம்
அவைச்சவைச்சு மூன்றுமூன்று பாரு பாரு
நத்திச்சுச் சிவமாக உள்ளே நிக்கும்
நேரான சிவத்துடனே ஆண்மை கேளு
வத்திச்சு சல்வன் முதல் காரசாரம்
மகத்தான உபசரமுஞ் சரக்குத் தோச்சுச்
சத்திச்சு வாட்டினால் அச்சுண்ண மாகுஞ்
சவுக்காரமதில் தோச்சி ஆவியில் போடே. (20)

போடப்பா மூன்றுநாள் தோச்சுத் தோச்சுப்
புகழான சீனமெல்லாஞ் சவுக்காரமுண்டு
ஊடப்பா கடுங்கார மேறும் ஏறும்
உத்த அஞ்சு சுண்ணத்தில் வைத்துமூடி
நீடப்பா புடம்போட பூப்போல நிற்கும்
நேரான கோபத்தால் சொல்லி விட்டேன்
ஆடப்பா இதனாட்டு அண்டரண்ட மாடும்
அரகரா சிவசிவா அறிகிலேனே. (21)

அறியாதச் சவுக்காரச் சுண்ணந் தானும்
அரித்தரித்து கட்டியினால் செய்ய மாட்டார்
பிறியாத கோபத்தால் வெளியில் போட்டேன்
பேசாதே சுந்தரா சூத்திரத்தை நீதான்
முரியாதே சித்தர்வந்தால் பிடித்துக் கொண்டு
முச்சாட வொட்டாமல் வேதை போட
மறியாதே சொல்லுகிறேன் அவர்கள்கட்டு
மகத்தான மடந்தோறும் வில்லைக் காணே (22)

உப்புக்கட்டு

இல்லையென்ற உப்பினுட கட்டைச் சொல்வேன்
இன்னொருக்கால் கேளச் சொல்லாரோ
அல்லையென்று முன்போலச் சண்டை யாமோ
ஆதிகுருச் சின்மயந்தான் கோபமாமோ
தொல்லையென்று விடுவோமோ சொல்லுவோமோ
சொல்பெரிய சுந்தரமே கேளுகேளு
கல்லை யென்ற சரிசனத்தில் வேதைப் போட்டு
காட்டுகிறேன் பாட்டர் முன்னே காட்டுகிறேனே. (23)

காட்டுறேன் சின்மயந்தான் மெச்ச மெச்ச
கருணையுடன் மூலகுரு மெச்ச மெச்ச
ஆட்டுறேன் மச்சமுனி மெச்ச மெச்ச
அருகிருந்த கொங்கணர்தான் மெச்ச மெச்ச
மூட்டுறேன் தாம் முதாசன்தான் வேதை
மூதண்டச் சித்தரெல்லாம் ஏங்கி நிற்க
பூட்டுறேன் அண்ட ரெண்டம் பொன்னேயாக
போதிக்கிறேன் குருவே போதிப் பீரே (24)

போதியென்று கேட்டார்க்கு சுந்தரமே அய்யா
போட்ட உப்புக்கு ருவிந்து நீதானுதி
வாதியென்று சிவன்வந்தால் தர்க்கித் தாடும்
மத்தவர்கள் வந்தாக்கால் தள்ளு தள்ளு
ஆதியென்ற கருக்கேழு வர்ணங் கேளு
அணுகையிலே வேதையுட கட்டுங் கேளு
சாதியென்ற செந்தூர முறையுங் கேளு
சமரசமாய் சொல்லாட்டால் சண்ணியாடே (25)

ஆடுகிற உப்பெடுத்துக் கட்டுக் கேளு
அப்பனே சவுக்காரச் சுண்ண மொன்று
நீடுகிற சாரமொன்றுங் கூட்டி யாட்ட
நிமிஷத்தில் சிலமாகும் நேர்ந்து பாரு
ஊடுகிற வீரமொன்று பூர மொன்று
உத்தமனே அமுரிஉப்புக் கல்லுங் கூட்டி
போடுகிற இடையேது பலந்தான் தூக்கிப்
புகழாக அரைத்துயெல்லாங் குழம்பு பண்ணே (26)

பண்ணியதோர் குழம்புக்கு உபாயங் கேளு
பாறையுப்புப் பாக்குப்போல் உடைத்துக் கொண்டு
நண்ணியதோர் நாலுபத்து பலந்தான் தூக்கு
நலமான குழம்பையெல்லாம் பூசிப் போடு
தண்ணியதோர் வாயினுள்ளே காயப் போடு
சாதகமாய் மூன்றுதினங் காய்ந்த பின்பு
ஒண்ணியதோர் அஞ்சுசுண்ணம் பலந்தான் பத்து
உத்தமனே சாரமஞ்சு பலந்தான் கூட்டே (27)

கூட்டியல்லோ வெண்கருவா லரைத்துக் கொண்டு
கூசாதே உப்புமேல் பூசுப் பூசு
நீட்டியல்லோ ஆவியிட்டுக் காயப் போட்டு
நேராகத் தினமேழு காய்ந்த பின்பு
பூட்டியல்லோ உள்ளறமும் உப்பு நேரே
பொடித்து நன்றாய் சிறுநீரில் பிசைந்து கொண்டு
மூட்டியல்லோ பரப்பியதில் உப்பை வைத்து
மூழ்கவே மேலுமிந்தப் பொடியைப் போடே. (28)

போட்டல்லோ சட்டியிலேச் சட்டிமூடி
புகழாகச் சீலை செய்து புடத்தைப் போடு
சாட்டையல்லோ அவன் மது வாய் பேசாமல்
சராசரமாய்ச் சாகுமப் பாதண்ணை வாங்கும்
நாட்டியல்லோ சாரமோடு அஞ்சுசுண்ணங் கட்டி
நலமாக உப்பிலே பூசிப்போட்டு
மூட்டியல்லோ பின்பொருக்கால் புடத்தைப் போட
முழுக் கட்டாய் கட்டுமிந்த லவணங் காணே. (29)

காணப்பா கட்டினுட லவணஞ் சொல்வேன்
கரியிலே வைத்து மெள்ள ஊதும்போது
தோணப்பா பிணம்போலே நின்று காயும்
சுருக்காக ஊதிடவே கரிதான் உண்ணும்
பூணப்பா உத்ததுபோல் நேட்டுப் பாயும்
புகழாக சேர்ந்தவை போல் பொருமிப்போகும்
வீணப்பா சலம்போல் உருகி வைத்து
வெளுப்பாக பளபளத்து விரியும் பாரே. (30)

பாரிந்த குணங்கண்டா லாகாது உப்பு
பருவத்தைச் சொல்லுகிறேன் சுந்தரமே அய்யா
நேரிந்த உப்பெடுத்து உருக்கிப் பாரு
நிர்மலம் போலக் கரியில் நின்று ஆடுமாடுஞ்
சாரிந்து உருக்கையிலே கெம்பிச் சானால்
சலியாதே பின்பொருக்கால் புடத்தைப் போடு
காரிந்து வரமத்தில் மாயி பாதங்
கருணையினால் உப்படங்கி கட்டுந்தானே. (31)

தானென்ற உப்பெடுத்து உருக்கிப் பாரு
தவள நிறமாக வது மணியாய் நிற்கும்
வானென்ற சூதத்தின் மணியோ வென்பார்
மாரசத்தின் வீரத்தின் மணியோ வென்பார்
கோனென்ற முத்தினுட மணியோ வென்பார்
கொடுங் கவன மோடுகிற மணியோ வென்பார்
தேனென்ற வயிரத்தின் மணியோ வென்பார்
சிவசிவா னாதாக்கள் மயங்கு வாரே (32)

மயங்கிய தோருப்பெடுத்து வேதை யாட
மகத்தான கடுங்காரம் உப்பி லேத்தி
தியங்கிய தோர் அஞ்சு சுண்ணக் குகையிலூதி
தவள நிறமாகவுந்தான் சுண்ணமாகும்
முயங்கிய தோர் சுண்ணத்தில் வீரங்கூட்டி
முறையாக மத்திக்கச் சிவந்து போகும்
நயங்கிய தோரித னோடே சவாது காரம்
நலமாக மத்திக்க நன்றாய்க் கேளே (33)

கேளப்பா மடலத்துத் தம் பலத்தை, வாங்கி
கெடியாக விதைப் பூசி யுருக்கி நீதான்
நீளப்பா ருதம்போலச் சத்தே யாரும்
நேரான கடினமல்ல இறுகிச் சத்தாகுந்
தாளப்பா நிமிளைக்கு பூசி யாட
தங்கம் போல மெதுவாகும் தானே யாகுஞ்
சூளப்பா அண்டோட்டில் பூசியாட்ட
சுகமாக வங்கம்போல் சத்து மாமே. (34)

ஆமப்பா இப்படியே பூனாகத் தோடு
அழைத்துமே உருக்க நல்ல சத்தேயாகுந்
தாமப்பா சுண்ணோ டொட்டில் பூசி யாட்ட
சரிகை வெள்ளிபோலது சத்தாய் நிற்கும்
ஓமப்பா இது அஞ்சு உபரசத்துக் காதி
ஒவ்வொன்றுங் காசிடைதா னெடுத்துக் கொண்டு
சேமப்பா தங்கமது காசு கூட்டி
சிறக்கவே ஆறையுந்தான் உருக்கிடாயே. (35)

உருக்கயிலே சூதமிடச் சுந்தரமே கேளு
உப்புரெண்டு சூதமஞ்சு அண்ட நீரால்
தருக்க வொன்று அரைக்கையிலே சவ்வு போலாம்
சாதகமாய் உருட்டியிந்த சூதந்தானும்
பருக்க யிலே அஞ்சுகாசு இடையே போடு
பதறியுள்ளே வாங்கியது மணிபோ லாடும்
செருக்க யிதையெடுத்து வைத்துக்கொண்டு
செப்புறேன் குருமுறைக்குச் செப்புறேனே. (36)

செப்புறேன் தினமேலேப் பூசக் கேளு
சிறப்பான பூரமோடு வீரச் சுண்ணம்
ஒப்புறேன் வெண்கண்டர் வழலைச் சுண்ணம்
ஒவ்வொன்றுங் காசிடைதான் கருவா லாட்டி
அப்பிறேன் மணிமேலேக் காயக் காய
அடலாணை அஞ்சு சுண்ணக்குகையில் வைத்து
நப்பிறேன் குகை யிலிட்டுச் சீலை செய்து
நலமாகக் கசபுட ந்தானாட்டு நாட்டே. (37)

நாட்டியதோர் புடமாறில் பூசைப் பண்ணி
நலமாக யெடுத்துப் பார் குருவாய் நிற்கும்
நீட்டியதோர் இதன்பேரு பரையாங் குருத்தான்
சின்மயமே வாதமடா திறந்து போச்சு
மூட்டியதோர் வேதையெட்டும் இதிலே யாடும்
மூன்றுயுகம் விரித்தாட முடி வெய்யாது
ஒட்டியதோர் சங்கவரை தொந்த மென்று
உத்தமனே முடிவை யின்னங் கண்டிலேனே. (38)

கண்டிலே னென்றுசொன்ன குருவினாட்டு
கயிலாசச் சின்மயந்தான் அடியேனுக்கு
ஒண்டியில்ல எனையழைத்து உபதேசித்தார்
உத்தமனே யித்தனை நானோதிவித்தேனய்யா
தண்டியிலே மச்சருட வேதை போட்டேன்
சாதகமாய் மூலருட வேதை போட்டேன்
அண்டிலே னிதனாலே கிளித்தா ரோடு
ஆறுடைய மார்பிருந்து குருத்தா னென்னே. (39)

குருவிலொரு குன்றி இடைஎடுத்துக் கொண்டு
கொளுத்துகிறேன் தாம்புரத்தை அண்டம்பொன்னாய்
கருவிலே மடலத்துத் தம்பலந்தான் ரெண்டு
கைமுறையாய் வீரமது பலந்தான் மூன்று
தருவிலே சூதமது பலந்தானாலு
சாதகமாய் குருவோடே பொடித்துக் கொண்டு
திருவிலே பஞ்சிலிட்டுத் திருத்து நன்றாய்
சேர்ந்த ஆவின் நெய்யிற் சிறக்கத் தோயே. (40)

தோய்த்ததோர் உதிரியெடுத்து தாழியிலே வைத்துச்
சுகமாகக் கடலரசி போலக் கட்டி
வாய்த்ததொரு ஆள்மட்டுங் கூடு கட்டி
வச்சுடுவாய் சுதுவரத்தை கட்டை மேலே
ஒய்ச்சதொரு திரிகொளுத்தி அவித்துத் தூபம்
ஓட்டியல்லோ தகடெல்லாங் கறுத்துப் போகுங்
காய்ச்சதொரு கனல் காட்ட நூறுமாத்தாங்
கண்டீரோ தாம்புரத்தின் கரு வைத்தானே. (41)

கருவாக யெடுக்கெடுக்க கோடி துறையாடும்
உருவான பாஷாணந் தொட்டுப் போட
கைமுறையின் பரிசனத்தின் கோடி துறையாடும்
ஓடுமே சங்கவரை தேர்ந்தது தானுந்
திருவாக சந்திக்க சகலமுமாம் வேதை
தேகமோ வாசிதனை சுருக்காய் சித்தியாகுங்
குருவாக யெனையீன்ற சின்மயத்தின் வாக்கு
கோடான கோடிதுறை கரை காணேனே. (42)

காணாது குருவினிலே வீரம்போட்டுக்
கால் பணந்தான் வாய்நீரால் மத்திச்சுக் கொண்டு
பூணாது தங்கமது பலத்தில் பூசிப்
போடு நீ புடமொன்று பொலிந்து நீராய்
தோணாது குருவிதுதான் சுந்த்ரமே அய்யா
தொட்டெடுத்த சரக்கெல்லாம் சத்தேயாகும்
ஒண்ணாது உபரசத்தைத் தொட்டுப் போட
ஓடுமே கொடியுருக்கி ஒத்துப் பாரே. (43)

பாரப்பா இக்குருவில் வீரம்சீனம்
பாய்ச்சியல்லோ அழுக்கிட்டால் சுண்ணங் கோடி
நேரப்பா இக்குருவில் சவாது காரம்
நேராக வீரமிட்டால் உருகி யாடும்
சீரப்பா இக்குருவில் காணி கொள்ள
சணத்திலே சட்டைதள்ளிச் சித்தி யாகுஞ்
சாரப்பா வெகுசுறுக்குத் தங்கச் சுண்ணம்
சதாசிவன் போல நின்றாடுந் தாயினாட்டே. (44)

தாயான தங்கத்தில் வீரங் காரந்
தாக்கியல்லோ சவாதிட்டு மத்தித் தப்பா
ஓயான பாறையுப்புப் பூசி நன்றாய்
உருக்கிடடா மணிபோலக் கண்விட்டாடும்
பாயான ஒன்பதிலே நூற்றுக் கொன்று
பாச்சடா ஆயிரத்தி ரெண்டுமாத்துக் காணும்
வாயான உப்பெடுத்துக் கார மேத்தி
மச்சரவே யூதிநன்றாய்ச் சுண்ணம் பண்ணே. (45)

பண்ணிய தோர் சுண்ணயிடைச் சாரங்கூட்டி
பருவமாய் ஆட்டயிலே செலமு மாகுங்
கண்ணிய தோர் சலத்துள்ளே பூரம் போட்டுக்
கைமுறையாய் வாரியிட்டு ஊது ஊது
தண்ணிய தோர் பூரமது தவள நீராஞ்
சரக்கேது மலையேது யெல்லாம் சுண்ணம்
புண்ணியமே செய்தோர்க்கு யெந்நூல் கிட்டும்
புகழக்கோடி யுருக்கினமும் நீத்தினமும் மாமே. (46)

ஆமப்பா பூரநீர் ஆட்டைச் சொல்ல
அலைகடலு மையக் காப்புக் காப்பாபோதா
ஓமப்பா பூரத்தில் வீரஞ் சீனம்
உத்தமனே புகழிட்டு மத்தித்தே
சேமப்பா தாளகத்தில் பூசிப் பாரு
சிமுட்டு முன்னே கொக்கிறகு போலேயாகும்
நாமப்பா பாத்ததில்லைச் சுண்ண வேகம்
நாட்டா தணல்மேலே சுண்ணந்தானே (47)

தானென்ற தாளகத்தில் சகலச் சுண்ணம்
சதகோடி யுருக்கினமும் வேதை கோடி
வானென்ற குளிகைமுதல் கோடா கோடி
வைத்தெடுக்க தாம் புரமோ கோடா கோடி
தானென்றத் தியகாண பரிசை வேதை
கணக்கில்லை கரையிலை காணத் தானும்
ஊனென்ற உபசரத்தின் கோடா கோடி
உரைக்கரிது தாளத்தின் உறுதி தானே. (48)

உறுதியென்ற தாளகத்தில் வீரஞ் சீனம்
உத்தமனே புழகிட்டு வங்கத் தாட்டி
பெறுதியென்று போடபோட வங்கம் சீறும்
பேசாதே சொல்லரிது வங்கத் தாண்மை
அரிதுயென்ற வங்கத்தில் சாரங் கூட்டி
ஆட்டயிலே வாருதிபோலச் செலமுமாகுஞ்
சுருதியென்ற செயநீரை சூதத் தூத்தி
சுடவைக்கச் சூதமது தோசை யாமே. (49)

தோசையென்ற சூதத்தில் காரங்குத்தி
துடியாக உருக்கிடவே மணிபோலாமே
ஆசையென்ற குளிகை யெல்லாம் இதிலேயாகும்
அண்டரண்டம் போதிக்க குருவுமாகுங்
காசையென்று வெள்ளியிட்டு குருவே செய்தால்
கரையேது வரையேது வெள்ளி யாட்டு
வோசையென்ற பொன்னிட்டு குருவே செய்தால்
மலையெல்லாம் மதுவெல்லாம் மண் பொன்னாமே (50)

பொன்னான செய நீரால் தோய்த்து எடுத்துப்
புகழாக வாட்டியதை உருக்கிப் பாரு
ஒண்ணான உபரசங்கள் தோய்த்து வாட்ட
ஒகோ கோ ஈயம்போல் உருகி யாடும்
மண்ணான ஒவ்வொன்றில் கோடா கோடி
மதிபோல விரிந்தாடும் மதி கொள்ளாதே
பண்ணான அந்தந்த வரணத் தோடே
பார் மக்காள் மணிபோல உறுகி நிற்கும். (51)

கொள்ளாத ஒவ்வொன்றால் சுண்ணங் கோடி
கூட்டுகிறச் செந்தூரங் களங்கங் கோடி
துள்ளாத மெழுகோடு செயநீர் கோடி
தனித்தனியே கட்டுகிற குளிகை கோடி
துள்ளாத காயச்சித்தி யனந்தங் கோடி
தொடுகிற போலப்பரி சினத்தின் வேதைகோடி
விள்ளாத ஒவ்வொன்றில் அனந்தங் கோடி
வேரேது தூரேது வங்கத் தாட்டே. (52)

ஆட்டான வங்கத்தில் வீரஞ் சீனம்
அப்பனே புழகிட்டு ஆட்டிக் கொண்டு
நீட்டாடே நிமிளையிலே பூசிக் கொண்டு
நேரான அஞ்சு சுண்ணக் குகையி லூதி
பூட்டான நிமிளையிது சுண்ண மாகும்
பேரானகோடியாள் முதல் நாதம் புலிபோல் பாயும்
மூட்டான நிமிளைத் தொட்டால் சுண்ணங் கோடி
மூச்சாட வொட்டாமல் ஆடும் பாரே. (53)

பாரப்பா பரிசமுதல் சத்தான கோடி
பறக்கிறதோர் குளிகையென்றா லெக்கோயில்லை
நேரப்பா தாம்புரமும் பரிச வேதை
நிறை நிறையாய் அங்கமெல்லாங் கோடிக் கோடும்
ஆரப்பா கரைகண்டார் கொங்கணர் தான்பார்த்து
ஆடினார் நாலுயுகம் அவர் காணாமல்
சீரப்பா என்னுடைய சூஸ்த்திரத்தைப் பார்த்து
திரட்டினார் மூன்று காண்டந் திரட்டினாரே, (54)

திரட்டினார் என்னுடைய சூத்திரத்தைப் பார்த்து
செய்த தொரு சித்தருட பேரைக் கேளு
திரட்டினார் மச்சமுனி அஞ்சு காண்டஞ்
சிகமறியக் கோரக்கர் அஞ்சு காண்டந்
திரட்டினார் மூலகுரு ஒன்றே காண்டம்
சிதம்பரத்தில் பதஞ்சலிதான் ஏழுகாண்டந்
திரட்டினார் காலாங்கி ரெண்டு காண்டஞ்
சிவசிவா சித்தர்சொன்ன கரை காணேனே. (55)

கரைகாணா நூலாகவிருந்து தப்பா
காரணமா மிந்த நூல் பார்த்தே சித்தர்
வரைகாணா சாத்திரங்கள் கட்டிப் போட்டார்
வாய்வாத மல்ல அல்ல மருவிப்பார்த்து
துறைகாணார் என்னுடைய சூத்திரங்கள் மக்காள்
சொல்லாதே யாருக்குஞ் சிஷ்யனுக்குச் சொல்லு
பாரைகாணாள் சின் மயந்தான் அடியேனுக்கு
பக்குவத்தில் கைக்கொடுத்த பரிசு தானே. (56)

பரிசான நிமிளையுடன் சுண்ணத் தோடே
பாச்சடா வீரமோடு சீனந் தானும்
உருசான புழுகிட்டு மத்தி யப்பா
உறுதியாய்ச் சாரத்தின் மேலே பூசு
கரிசான கசிவெடுத்து முன்னே நீதான்
கருமணலிற் பொதிந்து நன்றாய் பொரித்துப்போடு
வரிசான சாரமது சுண்ண மாச்சு
வார்த்தரைத்துவெண்கருவால் வில்லைகட்டே. (57)

கட்டியல்லோ அஞ்சுசுண்ணக் குகையில் வைத்துக்
கனலிலிட்டு ஊதிடவே கடிய சுண்ணம்
ஒட்டியல்லோ யிதைத்தொட்டு நாமதேவர்
உகாந்த வரையாடியல்லோ முடிவு காணார்
யேட்டியல்லோ காரத்தில் சாரங் கூட்டி
மெழுந்து தடா செய நீர் தான் எதோயெதோ
அட்டியல்லோ ஒன்றுமில்லை துமந் தொட்டு
அறுபத்து நாலுமுக மாகும் பாரே. (58)

பாரிந்தச் சுண்ணத்திலாடும் வேதை
பணபேதி செணபேதி சத்தபேதி
நேரிந்த சத்தான நிமிஷம் பேதி
நிமைக்கு முன்னே மலைபழுக்க நின்ற பேதி
காரிந்த வேதைக்கு ஒன்று மொவ்வாக்
கைமாத்து நூற்றின்மேல் அன்பதாகும்
மூரிந்த வாதமல்ல சார வாதம்
ஒடுங்காத பூரணம் போல் ஓடுந்தானே. (59)

ஓடுகிற சாரத்தில் வீரஞ் சீனம்
உத்தமனே புழகிட்டு ஆட்டிக் கொண்டு
தேடுகிற துரிசின் மேல் பூசிப் போட்டு
சணத்திலேசுக் காணாச் சியலை போல
ஆடுகிற அஞ்சுசுண்ணக் குகையிலூது
அரகரா சிவசிவா அண்டம் போல
நீடுகிற துரிசி யல்லோ அனாதி வித்தை
நிர்மலமே இதன் போக்கு நிலைகாணேனே. (60)

காணாத துரிசியினால் சிங்கிகோடி
கைமுறையாய்ச் செந்தூரச் சுண்ணங்கோடி
தோணாத சொரூபமொத்து குளிகை கோடிச்
சொல்லட்டங் காத்திரால்களுஞ் செய் நீர் கோடி
பேணாத வேதையிதிற் சொல்ல வென்றால்
புத்திக்குஞ் சித்திக்கும் எட்டாதையா
ஆணாத துரிசியி தில் பூர்த் தொடுப்பு
ஆருக் காந்தீக்ஷை யானோர்க் காமே. (61)

ஆமிந்த வேழ் அங்கஞ் சின் மயத்தின் வாக்கு
ஆதியிலே சிவனூலில் பிறந்த வித்தை
ஓமிந்த நூல்பார்த்துச் சித்தர் கோடி
உழைஞ் சுழைஞ்சு வெகுநூலாய்க் கட்டிப்போட்டார்
வாமிந்த வாமத்தில் பத்து தீட்க்ஷை
மகுத்தான சிவனுக்கு பத்து தீட்சை
சேமிந்த தீட்சை விதிசொன்ன வேட்டை
சித்தரெல்லாங் கிழித்ததினால் திறந்திட்டேனே (62)

திறந்திட்டேன் வாதத்தில் வழலை யாக
செகமறிய வாதத்தில் ஆதி யுப்பு
பிறந்திட்ட ரண்டாலே கட்டினங் களாச்சு
பேராக இதிலடக்கங் கார சாரங்
கறந்திட்ட வன்னமென்ன காரஞ் சூதங்
கைமுறையாய் செய்தாரங் கெந்தி கெந்தி
நிறைந்திட்ட வித்தல்லோ புடத்துக் காதி
நேராக அஞ்சையுந்தான் அறிந்திட்டாயே (63)

அறிந்து கொள்ளு வாதமங்க மிம்மட்டாச்சு
அப்பனே காய சித்தியை...
நெறிந்துமுன்னே வாதத்தில் வழலைசொன்னேன்
நேராக காயத்தில் வழலைக் கேளு
பிரிந்து நின்று அங்குஷ்ட விரலினாலே
பேரான அண்ணாக்கி லப்பிறள் யேத்து
அரிந்து நின்று பழகியல்லோ பின்பு நீ தான்
மருந்தோடே செய்யுகிற வரிசை கேளே (64)

கேளப்பா கரிசாலை சாத்தி னோடு
கெடியாக நெய்கலந்து வைத்துக்கொண்டு
தாளப்பா பெருவிரலால் தோய்த்துக் கொண்டு
சாதகமா யண்ணாக்கி லேத்து வாங்கு
நீளப்பா சங்கிலிபோலக் கபந்தான் வீழும்
நிலையாக மண்டலந்தான் வாங்கு வாங்கு
நாளப்பா உதயத்தே வாங்கித் தீரு
நாளொன்றுக் கொருநேரம் நாடிப்பாரே (65)

நாட்டியல்லோ வழலைதன்னை வாங்கும் போது
நலமாகக் கடுக்காயை உண்டு வாநீ
மூட்டியல்லோ இருபது நாள் கடுக்காய் உண்ண
முதிர்ந்து நின்ற ஆமமெல்லா முடியத் தள்ளுங்
காட்டியல்லோ காயசித்தி யென்பதுக்குள் நன்று
கைகடத்தா லாகாது கடின மெத்த
ஆட்டியல்லோ கடுக்காய்க்கு மலம் போகாட்டால்
ஆகாது வாத பித்த தேக மாகும் (66)

ஆமப்பா சில பேர்க்கு போகா மலச்சிக்கு
மடவாகக் களியாட்டால் காயசித்தியில்லை
ஓமப்பா சிவதை தனைபாலில் போட்டு
யுரக்காய்ச்சி எடுத்துவைத் திடித்துக் கொண்டு
சேமப்பா கடுக்காய்க் குப்பாதி கூட்டித்தின்
முன்னூறு வறு கடிதான் சிரக்கும் பேதி
தாமப்பா களியாட்டால் கடுக்காய்க்குச் சமனாய்ச்
சாதகமாய் கூட்டியுண்டு தள்ளி யேரே (67)

தள்ளிவிட்டு கடுக்காயை மிளகை யுண்ணு
சாதகமாய் அஞ்சுமுத லேத்தி ஏத்தி
பள்ளி விட்டுப் பிராணாயம் பண்ணும்போது
பாடாத கருவையெல்லாம் பாடுறேன் யான்
கொள்ளியிட்ட அண்டத்தின் மால மேற்கும்
குறியான முக்கோணம் நன்றாய்ப் பாரு
அள்ளியிட்ட வாசிரெண்டு முன் பின்னாக
ஆடுதடா ஆடுதடா அறிந்து பாரே. (68)

அறிந்துபா ரொருமிகாணஞ் சுழியே நிற்கும்
அதுக்குள்ளே வங்குசிங்கு ரெண்டு நிற்கும்
நெறிந்துபார் சிங்கத்தின் ரெண்டெழுத்து மாச்சு
நேராக இதன் பேரு நந்தி நந்தி
பிறிந்துபார் வனம்போலப் பிரேத மாச்சு
பிறக்கையிலே அவன்புகுந்தால் பிறக்குஞ்சீவன்
இருந்துபார் இதுரெண்டால் இறப்போடு பிறப்புமாக
இதையெல்லாம் பாரார்கள் சித்தர் தானே. (69)

தானென்ற நந்தியிலே வங்கென்று வாங்கி
சாதகமாய்ச் சிங்கென்று கும்பித் தேற
வானென்ற நாலுதளி லெழைத்துத் தானும்
வந்துடா வாதசித்தி ஞானசித்தி
கோனென்ற சுழிமுனையுங் குப்பென்று ஏறும்
பொற்கொடிபோல் தளதளத்து கூசுங் கண்தான்
ஊனென்ற உப்புக்குள் நாடி யெல்லாம்
உருவாகத் தெரிந்து கொள்ளும் பாங்காயூணே (70)

பாங்கான பிராணயம் பண்ணும்போது
பரிவான பிராணத்தில் பான்மை தங்கில்
தாங்கான உதரத்தி லுந்தியிலே வாழுஞ்
சாதகமாய் மருந்துகொண்டால் சேட்டிச் சேறும்
ஒங்கான லெக்ஷியத்தை யதிலே வைத்து
உத்துப் பார் மூச்சையுள்ளே வாங்கி நிற்கும்
ஆங்கான மலமது பிரிந்து போகும்
அதுக் கேத்த கற்பமினி அறிந்து கேளே. (71)

கேளப்பா கடுக்காய்த்தான் பலமும் நாலு
கெடியான திப்பிலி யுஞ் சுக் கோடொக்க
நாளப்பா சீரகமும் நன்றாய் ஓமம்
நலமான யிந்துப்பு நறுக்கு மூலம்
வேளப்பா வகையொன்று பலந்தானொன்று
விரவியிடி கடுக்காயின் சமூலத்தாலே
தூளப்பா செய்தல்லோ வெந்நீர் கொள்ள
சுகமாக பேதிக்கும் அபானம் போமே. (72)

போகுமே கீழ்நோக்கி அபானம்சாடி
போட்டுண்ண அன்னத்தில் பொடி நீகேளு
வாகுமே மிளகோடு திப்பிலியுஞ் சுக்கும்
மருவியதோர் சீரகமு முந்திலுப்புந்
தார்குமே கரு வேப்பிலையி னோடு
வகையொன்று படலந்தா னொன்று
ஆகுமே காயமது பலமுங் கால்தான்
அப்பனே சூரத்து நேட்டி யோனே (73)

உண்ணயிலே அபானமது கீழே நோக்கும்
ஒத்துப்பார் லட்சியத்தை ஒன்றுமில்லை
நண்ணயிலே வாசியைத்தான் மூலத்தூணி
நடக்கயிலு மிருக்கயிலும் நலமாய்ப் பாரு
பண்ணயிலே சஞ்சாரம் சமாதி யாகும்
பாய்ந்ததோர் நோய்க ளெல்லாம் பறந்துபோகும்
விண்ணயிலே சுழிமுனையில் ஏறுச் சானால்
வேதாந்த சமாதியிலே யிருத்துந் தானே (74)

தானென்ற மூலமுன்னே சித்தி யானால்
சகலசித்து மாடலாந் தாய்தான் சொல்வாள்
வானென்ற ஈசனங்கே வார்த்தைச் சொல்வார்
வந்துதடா ஞானசித்துக் குளிகை போட்டு
கானென்ற வாறுதல மாடி நிற்கக்
கைமுறையாய் வாசியென்ற கருவைக் கேளு
கோனென்ற மூலம் சுவாதிட்டானம்
குறிக் கேளு ஆறிதழுங் கோடு நாலே. (75)

நாலான கோணத்தின் பிரமன் வாசம்
நகாரமடா அவ்வெழுத்து நன்றாய்க் கேளு
காலான தவ்விடத்தே நங்கன் றூணு
கன்னியடா சரஸ்வதி வார்த்தைச் சொல்வாள்
கோலான ஆறிதழின் னெழுத்துத் தோணுங்
கொடியதொரு செனனமெல்லா மிவளா லாச்சு
சேலான செனனமில்லை யூணிப்பாரு .
செந்துமேல் மணிபூரம் சிறக்கும் பாரே. (76)

பாரப்பா மணிபூரம் பிறைபோல் நிற்கும்
பாங்காக பத்தி தழுஞ் சூழ்ந்து நிற்கும்
நேரப்பா மாலோடு லெட்சுமியும் நிற்பாள்
நிலையாக மங்கென்று நேரேப் பாரு
தாரப்பா காயசித்தி கற்ப சித்தி
தாரகமாய்ப் போக்குவித்து தனமும் மீவாள்
ஊரப்பா அதுகடந்தால் அனாகதத்தின் வீடு
உத்துப்பார் முக்கோண முறைக்கக் கேளே. (77)

கேளப்பா சூழவிது பன்னிரண்டு இதழ்தான்
கெடியான அட்சரங்கள் நிக்கும் நிக்கும்
நீளப்பா ருத்திரனும் ருத்திரியும் நிற்பார்
நேராகக் கோடி ஆவிபோ லேகாந்தி
ஆளப்பா வென்று சொல்லி சிங்கென் றூணு
அஷ்டாங்க சித்தி யிதிலாட லாகும்
நாளப்பா சங்கார கர்த்தன் கற்தன்
நம்பினார் சடத்தை யென்று மழித்திடாரே. (78)

அழித்திடார் அவர்மேலே விசுத்தி வீடு
அறுகோணம் பதினாறும் இதழாய் நிற்கும்
ஒழித்திடாம யேசுரனும் யேசுரியும் நிப்பாள்
உத்தமனே வாசிநின்றுப் பரிந்து வீடு
தழித்திடார் சத்தமோடு பொசிப்புத் தாகஞ்
சண்டாள கோபமங்கே யிருந்த வீடு
வழித்திடா வங்கென்று வைத்து ஊது
வாசியெல்லா முள்ளடங்கி வெளி போகாதே. (79)

போகாத வீட்டின் மேலாக்கினை தானையா
புகைபோலே வட்டமாய் இரண்டிதழாய் நிற்கும்
வேகாத சபையது அங்கிஷா வென்று
யிருக்கு மடாயி ரண்டிதழின் நடுவே கேளு
தாகாத சதாசிவனு மணியும் நிற்பாள்
தாரகத்தின் லட்சியந் தானங்கே யாகுஞ்
சாகாத யிடமதுதான் அங்கென் றாணு
சதாசிவன்றான் வார்த்தை சொல்வார்தாய் சொல்வாளே (80)

சொல்லுவாள் வாதசித்தி சூட்ச மெல்லாம்
சுகமான ஞானத்தின் துறையுஞ் சொல்வாள்
கொல்லுவாள் வாமத்தைப் பழித்த பேரைக்
கூப்பிடுவாள் வாமத்தில் கூடினோரை
மல்லுவாள் பிள்ளைகளை மேலே யேத்த
மனமான திரோதாயின் மாய்கை நீக்கி
அல்லுவாள் கணமெல்லாம் மைந்தா வென்பாள்
ஆதியென்ற மனோன்மணிக்கு அடுத்தவரறே (81)

ஆறான வாக்கினைமேல் சந்திர வீடு
வட்டமடா சத்தியெட்டுஞ் சுற்றி நிற்பார்கள்
கூறான சத்தியெட்டும் பேருஞ் சொல்வேன்
கோடி சத்தியா யிளையுஞ் சமணை யோடுந்
தாறான யுன் மனை முனமா னுங்கை
சாதகமாயாவி யோடு வியோ மருப்பி
பேறான நிஷ்டைக் கனையோ டெட்டு சத்திப்
பிறந்தவர்கள் செய்தொழிலை பேசுறேனே. (82)

பேசுறேன் அணிமாவும் மகிமா வோடு
பிலத்ததொரு கிரிமாவும் லகிமாவோடு
மாசுறேன் பிறத்தியோகம் பிறகாமி யோடும்
அப்பனே ஈசவத்துவம் வண்ண வவுத்துவம்பண்ணு
ஓசிறேன் இதுவிட்டு அங்கங்கள் செய்யும்
உத்தமனே தொழிலிதுதான் உரைத்துப்பாரு
தூசுறேன் இதிலெட்டு அகத்தியாகஞ் சித்து
சுருக்கடா யோகத்தின் சித்திதானே (83)

தானென்று அஷ்ட சத்தி சூழ்ந்து நிற்க
சம்புவல்லோரவி போல நடுவே நின்றாள்
வானென்ற தன்மைய தனைத் தொட்டேசம்பு
வாங்கினார் அதின்ரெண்டில் சத்தியொன்று
கோனென்ற பராசக்தி சம்பு வென்று
குறியாக நின்றதினம் அம்மா வாசி
வேனென்ற தினந்தொட்டு விட்டார் சத்தி
விண்ணுலகில் புவி தனையாய் விளங்குவாரே (84)

வாறான யோகத்தில் கூற வேணும்
மைந்தனே சம்பு வுண்டுக விடுகு மார்க்கங்
கூறான யிதுகுறி தாயே ரகத்துக்கு
குருடனைப்போல் கண்மூடி வாசி பார்த்தால்
பேறான தொன்றுமில்லைப் பேய் பேய்க்கும்
பெருக்காது சித்தி யொன்று பேணிப்பாரு
தாரான சம்புனுட் களையைக் கண்டால்
தாரையாய் ஓடுமடா அமிர்தந் தானே. (85)

தானான அமிர்தமுண்டால் காய சித்தி
தப்பாது மண்டலத்தில் மருந்து வேண்டாம்
வாறான இவ்வளவும் யோக மார்க்கம்
வந்தக்கால் வெட்டெட்டு சித்தியாகும்
கோனான யோகத்தில் அமிர்தமுண்ணக்
கோடியிலே யொரு வரடா கூர்ந்துகேளு
ஊனான காயத்தைச் சித்திப் பண்ணி
ஓடினார் வெகுகோடி யுரைக்கி றேனே. (86)

உரைக்கிறேன் உலகத்தே கடுக்காய் தொட்டு
உண்டல்லோ கற்பங்கள் ளேறி யேறி
நிறைக்குறேன் கைகடந்து சித்தர் கோடி
நேராக நாலோடே பிழைத்தார் கோடி
திரைக்குறே னாலஞ்சு கற்ப முண்டு
செடத்தினுள்ளே நோய்களெல்லாம் போனபின்பு
தரைக்குறேன் பெண்ணோடு சையோகித்தால்
தப்பாதுச் சயரோகஞ் சண்ணும் பாரே. (87)

பாரப்பா கற்பமுண்டான் பத்தியத்தை விட்டு
பயனோடு பழவகைகள் தின்றா னானால்
நேரப்பா நீர் கட்டு மலமும் கட்டும்
நிலையான தோளோடு கைகால் சோரும்
தாரப்பா தும்பைச்சார் கொள்ளக் கொள்ள
துளித் துளியாய் இறங்கிறது துறந்துவீழும்
ஊரப்பா கற்பமுண்டு புளித் தின்றாக்கால்
உதரத்தில் பெருவயிறு ஆகுந் தானே. (88)

ஆகுமே கற்பமுண்டோன் கிழங்கு வகைத் தின்றால்
அவனுட ம்பில் சோகைமுத்திப் பாண்டுவாகும்
வாகுமே மாங்கிஷங்கள் மீறித் தின்றால்
மயக்கமோடு சுரத்தாலே மரணமாகுந்
தாகுமே தாகத்தில் மோரு கொண்டால்
சண்ணு மடாகுணம் வலி தப்பாதப்பா
போகுமே பச்சையுப்புத் தின்றா னானால்
போச்சுதடா கண்கள் இரண்டும் புகைந்துகாணே (89)

காணப்பா இப்படித்தான் கற்ப முண்டு
கைதப்பி யிறந்தவர்கள் கோடாகோடி
பூணப்பா இதையறிந்து தெளிந்து கொண்டுப்
புகழாக அடிதொடுத்து கற்ப முண்டு
தோணப்பா பிழைத்தவர்கள் கோடா கோடி
சுகமாக பிழைத்தவர்கள் குளிகை கட்டி
ஊணப்பா சாறணையை விட்டுத் தீந்து
உலகத்தே ஓடினவர் கோடி யாமே. (90)

ஆமப்பா விக்கினங்கள் வருவ தேது
அறையிறேன் சுந்தரமே நன்றாய்க் கேளு
ஓமப்பா வாலையுட தீட்சை கேட்டு
உண்டிடுவாய் கற்பத்தை உச ரொட்டாது
யோமப்பா திரிபுரையும் புவனை கேட்டு
பொலிவாகக் கற்பத்தை உண்பார் உண்பார்
நாமப்பா ஒளிக்கறியோஞ் சித்தி யில்லை
நலமான அஞ்சுவித தீட்சை கேளே. (91)

கேளாமல் தீட்சை அஞ்சு கலப்பமுண்டு
    கெட்டோர்கள் கோடான கோடி யுண்டு
வாழாமல் வாசியிலே மூலம் பார்த்து
    மயக்கத்தே யலைந்தவர்கள் கோடாகோடி
நீளாமல் மதியளவும் பார்க்க வுண்ணி
    நிலையாமல் கெட்டோர்கள் கோடாகோடி
தாவாமல் மதிதாண்டியம் பறமேக் கேளு
    சாத்திரேன் குருபதத்தின் தண்மை தானே (92)

தண்மையென்ற குருபத்தின் தாமரைப் பூப்போல
    சகஸ்திரத்தின் யெட்டிதழாய் நிற்கும் பாரு
உண்மையென்ற நடுவேதான் சிவசத்தி யொன்றாய்
    உருவமற்று அருவமற்று ஒளியாய் நிற்குங்
கண்மையென்ற ரவிகோடி மதிகோடி யாகுங்
    கண் கூசுங் கண்கூசுங் காணுங் காணே. (93)

காணப்பா தத்.... சூடி நிற்குங்
    கைமுறையாய்த் தனுமத்தின் தெரிசினையைப்பாரு
ஆணப்பா... ஆதி பீடம்போல்
    ஆகுதடா அண்டமெல்லா முருவித் தாண்டி
வீணப்பா வாதிகளின் வாய்ப்பேச்சாலே
    வெறுங்குருக்கள் பணம்வாங்கவிந்தைப் பேச்சு
ஊணப்பா வேதை சொல்லி குரு காட்டமாட்டார்
    ஒரு கோடி சாத்திரத்தைப் படிப்பார் பாழே. (94)

பாழான சாத்திரத்தில் ஞான முண்டோ
    பணியாத மூடருக்கு வாதமுண்டோ
காணாத குரு டருக்கு சித்தி யுண்டோ
    கொடியதோர் பாதகருக்கு குளிகை யுண்டோ
தேளான பாவிக்கு மோட்ச முண்டோ
    தேவியுட பூசைவிட்டால் ஞான முண்டோ
நாளான அம்பரத்தைப் பாரார் பாரார்
    நாய்போல கோடிசென்மம் எடுக்கும் பாரே. (95)

பாரப்பா கோடிசென்மஞ் சுக்கிலத் தாலே
    பரிவாக நாய்ச் சென்மமாக வந்து
நேரப்பா யெந்நூலைக் கண்டு பார்த்து
    நிச்சயமாய் வைத்திருந்தோர் பதத்தைப்போற்றி

காரப்பா தொண்டுசெய்து கைகொடுத்தா ராகில்
கருணையுடன் தாராட்டால் காரு காரு
ஊரப்பா சித்தர்சொன்ன வாத மல்லால்
ஒரு சொல்லுந் தவறாத சித்தர் தானே. (96)

சித்தியாம் யோகமது யெந்நூலைப் பாரு
தேவிமெச்சுஞ் சிவன்மெச்சு மிந்த நூல்தான்
முத்தியாஞ் சீவன்முத்தி முப்பாழுந் தாண்டி
மோக்ஷமில்லை பூரணத்தி லேத்து மேத்தும்
பத்தியாய் நூல்கொடுத்தோன் மனந்தான் நொந்தால்
பாழாச்சு யோகமுதல் வாத மெல்லாம்
அத்தியாங் குருபதத்தைத் தொட்டு மேலே
ஆறுவரை ஞானமெல்லா மறையி றேனே, (97)

அறையிறேன் குருபதத்தின் தத்துவத்தை தாண்டு
அப்பனே சீவனுடைய தெரிசினையைக் கேளு
நிறையிறேன் சிவகளைக் கோடி ஆவி போல்
நின்றுதடா நின்றுதடா நன்றாய்ப் பாரு
அறையிறே னென்றசொல்லு முத்துப் பாரும்
மகத்தான சீவனே சிவனாயாச்சு
யுறையிறே னென்று நின்றா லுறையொட்டாது
உறவல்லோர் தாக்கிமெள்ள யிழுக்குந் தானே, (98)

இழுக்குமடா பரமென்ற பதியினுள்ளே
என்னசொல்வேன் படும்பாடு ஓஓ வென்றால்
அழுக்குமடா மனமேத்த அஞ்சவேண்டாம்
அரகரா அண்ட வெளியாரும் மில்லை
முழுக்குமடா மனமுன்னை முன்பின் பார்த்தால்
மோசமடா ஒரு நினைவாய் யேறுயேறு
பழக்குமடா வெறுவெளியில் ஞான தீபம்
பவத்தைவிட்டுச் சவத்திலே பாய்ந்திடாயே. (99)

பாய்ந்தக்கால் சிவத்துடைய காந்தி கேளு
பருகியதோ ரவிகோடி காந்திதான் கோடி
ஆய்ந்தக்கால் கண்டசிவ மொன்று மில்லை
அப்பனே சுந்தரமே அறிந்துப் பாரு

ஒய்ந்தக்கால் சிவத்தினுள்ளே சித்தி கேளு
ஒப்பான மேருவுக்குத் தெற்கே சொல்வேன்
வாய்ந்தக்கால் மலைதோறும் பூமி தோறும்
மகத்தான லிங்கமுமாய் முளைத்திட்டாரே. (100)

முளைத்திட்ட வல்லோர்கள் கோடா கோடி
மூட்டியல்லோ சுரூபத்தி லேறி நாங்கள்
வளைத்திட்ட மனமங்கே நின்றுதானால்
மைந்தனே குருபதத்தில் நின்று போச்சு
கிளைத்திட்ட அரியல்லோ யேறிச் சப்பால்
கொடியடா செடியடா அருவில் நின்று
அளைத்திட்ட சுரூபத்தி லடங்கிப் போனால்
அம்பரத்தே சேர்ந்தவர்கள் கோடியாமே. (101)

கோடியென்று சொன்னாக்கால் எத்தனையோ கோடி
குறியேது நிலையேது லெக்க மேது
நீடியென்ற சுரூபத்தில் காந்தி சொல்ல
நிகரொன்றுங் காண்கிலேன் நிறைந்த சோதி
ஆடியென்று பாரடா சுந்தரமே அய்யா
ஆடாட்டா சவசித்தரென்ற ஆண்மை போச்சு
ஊடியென்று சமாதியிலே யிருந்து பார்த்து
உரைத்தபின்பு குளிகையிட்டு ஊணியேறே. (102)

ஏற்டா சுரூபத்தைத் தாண்டித் தாண்டி
எட்டாத ஆன்மாவு வரையுமாச்சு
தேறடா ஆனந்த வெள்ளந்தானுந்
திரும்பாமல் முழங்கடா திடமாய் நில்லு
வீறடா அதுமேலே நடன மோசை
வெகுகடின மேறினவர் மீள மாட்டார்
தாறடா இவ்வளவு ஞான வீதி
சமத்துண்டோ பிள்ளைகளே சார்ந்து பாரே. (103)

பாரப்பா சமாதியிலே யிருந்து முன்னே
பழக முத்து நன்றாகப் பழகித் தீர்ந்து
நேரப்பா குளி கையிட்டு பின்பு போங்கோ
நேரான சுரூப மென்ற குளிகை போட்டு

காரப்பா சித்தருண்டு கள்ள சித்தர்
கைக்குளிகைக் கேழ்ப்பார்கள் ஈய வேண்டாஞ்
சேரப்பா சித்தருண்ட குளிகை வாங்கி
திசை தோறு மறிந்தார்கள் திருடர் தானே. (104)

திருடருண்டோ யெனை யாண்ட பூரணமே அய்யா
சிவசிவா சின்மயமாங் கண்டத்துள்ளே
திருடருண்டோ யெனக் கேட்ட சுந்தரமே அய்யா
சித்தருட னற்ப மெல்லாஞ் சொரூப மில்லை
திருடருண்டோ சுரூபமென்ற குளிகைக்கேதான்
திறமாக வார்த்தை சொல்லி உபசரித்து
திருடருண்டோ ஞானத்தோ ரென்றுசொல்லி
சிறப்பாக கேழ்க்கிறேன் தாவென் பாரே. (105)

தாவென்று கைகொடுத்தால் வாயி லிட்டுச்
சணத்திலே ஆனந்தத் துள்ளே செல்வார்
கூவென்றார் வெகு கோடி குளிகை யீந்து
கொள்ளையிட்ட வெளிக்குள்ளோசை காணப்பா
கோவென்ற மூலகுரு துடந்து வாங்கி
கொடுங்கீற திபேத்ததொகு குறி கேளாயே
ஆவென்று அலையாதே மவுனத் துன்னி
அறிவோடே ஏறியல்லோ அழைத்துக் காணே. (106)

காணடா சித்தருக்கு சேஷ்ட னாவாய்
கைமுறைக்கு குளிகை யிட்டு அறிவோ டேறி
ஊணடா அங்கங்கே உறுதியாக உத்துபார்
வெட்ட வெளிஒளி கண் கூசும்
பூணடா திரி குணத்தின் லத்தாக முனி
பொய்யாத சிலம்பொலியைக் கேளு கேளு
ஆண்டா வென்று சொல்லி ஊனைப் பெற்ற
அவளுடைய பிறக்குலமு முத்தியாமே. (107)

முத்தியாய்ப் பிரம்மகுலத்து உதித்தோ ரானால்
மோசமில்லை எந்நூலைப் பார்த்தா லெய்துஞ்
சத்தியாஞ் சத்திரியச் சென் மத்தோர்கள்
சாதகமாய்த் தேம்பு பண்ணி ஏறுவார்கள்
மத்தியாம் வசியர் குலத்துதித் தோரானால்
மயங்கி யல்லோ வியாபாரம் போலச் செய்வார்
பத்தியாஞ் சூத்திரர்க்குயெந்நூல் கிட்டில்
பண்ணுவார் காய சித்தி பண்ணுந்தானே (108)

தானென்ற காயசித்தி பண்ணித் தீர்ந்து
சாதகமாய் குளிகைக் கட்டிச் சாறணையைத் தீர்த்து
வானென்ற விதியிலே ஆடிப் பார்த்து
வருமளவும் பட்டணத்தை யிருக்க நன்று
வேனென்ற மலையிலே போனா ரானால்
வேண்டாத சித்தரினால் விக்கினங்க ளுண்டு
பானென்று பானமுண்டு மாயியைத் தான்சுற்றி
பதராமல் கற்பமுண்டு பரிந்து யேறே. (109)

ஏறென்று சொன்னதினா லேறு வாரோ
யென்மக்காள் விட்டகுறை வந்தா லேத்தந்
தாரென்று சாத்திரத்தைப் பார்த்து விட்டு
சூழண்டலைந்தவர்கள் கோடா கோடி
வீரென்று பல நூல்கள் பார்த்துப் பார்த்து
விதியளவாய் மதிமயங்கி வீழ்ந்தவர்கள் கோடி
கூரென்று யெந்நூலைப் பார்த்தோரெல்லாங்
கோடான கோடி சித்தர் கூடினாரே. (110)

கூடினதோர் சித்தரெல்லாம் சினமேற் கொண்டு
கூப்பிட்டுச் சுந்தரமே வைத்துக் கொண்டு
ஊடினதோர் கற்பமுண்டு நூல் கொடுத்த தாரு
உன்னுடைய சாதியென்ன வென்று கேட்டு
ஆடின தோர் குளிகையென்ன கட்டினவனாரு
ஆதியிலே யோகத்தில் அறிந்திட்டாயோ
நீடினதோர் மூலத்தின் ஒளியைத் தொட்டு
நிறைய அறுதலமும் நிறையக் கேளே. (111)

நிறையாறுஞ் சொன்னாக்கால் பதியில் கேளு
நேசமுடன் சொன்னாக்கால் குருபதத்தை கேளு
வரையாறு மிதுகடந்து கண்டதுண்டோ
மைந்தரே சொல்லுமென்று வார்த்தைப் பேசு
கரையாறுங் கண்டதில்லை யென்றா னானால்
கை கொடுத்து சூத்திரத்தின் கருவைச் சொல்லு
அறையாறு முடிப்பெருக்கும் நம்முடைய மரபு
ஆதரிச்சு வாதமுறை ஆதிகேளே. (112)

ஆதியென்ற கருவையுட வழலைச் சொன்னால்
ஆமடா மைந்தனென்று முதுகு தட்டி
ஓதியென்ற யோகத்துக் காதி யென்ன
உத்தமனே வாசியென்று சொன்னானால்
சாதியென்ற ஞானத்துக் காதி யென்ன
சாதகமாய் மனமடங்கி அறிவே னென்றால்
வாதியென்றா லறிவாதி மைந்தனே கேள்
மதுவுண்ண வாவென்றால் வாவா வென்னே (113)

வாவாநீ யென்றழைத்து சமாதிக் குள்ளே
வைத்தல்லோ யண்டத்தில் கேசரியைக் காட்டி
வாவா நீ யென்றழைத்து ஞானவீதி
வெளியான அறுவரையும் நன்றாய்ச் சொல்லி
வாவா நீ யென்றழைத்து ஒளியினுள்ளே
மயங்காதே மயங்காதே யென்று சொல்லி
வாவாநீ யென்றழைத்து மேரு தொட்டு
மரபான நம்முடைய மரபைச் சொல்லே. (114)

சொல்லியல்லோ நம்முடைய வேடம் போட்டு
சுந்தரமே கம்புளியுஞ் சட்டை கட்டி
அல்லியல்லோ பிரம்போடு படிக மாலை
அப்பனே தூளிதமு யோக வேஷ்டி
மல்லியல்லோ உப்பினுட சாரந்தான் கையில்
மைந்தனே தன் காவிக் கடையம் போட்டு
தில்லையல்லோதச தீட்சை செப்புக் காதில்
தேச மெல்லாங் கேசரத்தில் திரியச் சொல்லே. (115)

திரியயிலே இப்படித்தான் யெந்நூலைப் பார்த்த
சித்தருடன் வெகு கோடி சேருவார்கள்
அறியயிலே துருசு நிலை அணுப்போல ஓடி
அண்டமென்ற சித்தண்டம் பேரண்டமூட்டி
பரியயிலே அவனோடு பதங்கச் செப்பி
பாகான சாகரங்கள் நிறைந்து நிற்பர்
கரியயிலே கையிலாச வர்க்க மென்றால்
கைகாட்டி கைகாட்டி யழைப்பார்தானே. (116)

அழைக்கிறதோர் நம்முடைய மரபிற் சென்று
அந்தந்த அண்டத்திலுள்ள தெல்லாந்
தழைக்குறதோர் குளிகைக்கு சாறணையைத்திரு
சணத்திலே பேரண்டந் தாண்டியோடும்

இளைக்கிறதோர் குளிகை யல்ல கமலியின் வேகம்
என்மக்கா ளட்டமாசித்தி வேகம்
முளைக்கிற தோர் கவனத்தில் முளையைத் தீர்க்க
மூதண்ட சொரூபமென்ற குளிகை தானே. (117)

தானென்ற சித்தனையும் எப்படித் தான்னெய்யுந்
தனக்குமோ விட்டகுறை வந்தா லெய்யும்
வானென்ற சற்குருவைக் காத்தா லெய்யும்
வாசினையாய் மனமுரைத்து பார்த்தா லெய்யுந்
தேனென்ற மொழியுடையாள் சொன்னா லெய்யுந்
தேவியுட பாதம் போற்றிச் சேவித்தா லெய்யுங்
கோனென்ற சிவபதத்தை போத்தி யெய்யுங்
குறையாது .... நெறியுங்காணே. (118)

காணப்பா ஆதியென்ற வமுதத்தைக்
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கவடு நீக்கி
யூணப்பா பொற்சிலைப்போல் வயசுப் பெண்ணை
உத்தமனே நெறியல்லா தவளாய் பார்த்து
ஆணப்பா மன்மதன் போல் ஆன பிள்ளையைப் பார்த்து
அவனுக்கு நோய்களில்லா தறிந்து கொண்டு
பூணப்பா பெண்ணுக்கு மாத விடாயானால்
புகழாக பீங்கானில் வாங்கிக் கொள்ளே. (119)

வாங்குடா அவளுடைய அமுரி தானும்
வரியாதோ மன்னனுட விந்து கூட்டி
யோங்கிடா அவனுடைய அமுரிதானும்
ஒருதுளி போகா ... ருகயூத்தி
தாங்கடா நாதவிந்து அமுரி கூட்டி
சாதக மாய் பானத்தில் தினந்தான் விட்டு
ஆங்கடா அஞ்சுபத்து பலந்தான் சீனம்
அப்பனே பொடிசெய்து அதனில் போடே. (120)

போட்டாரே இரண்டுபத்து பலந்தான் பூரம்
புகழாக கலக்கியதை ஆவியில் வைத்து
நீட்டாரே தினந்தோறுஞ் சையோகித்து
நினைவாக சுக்குலத்தை யதிலே வாரு

நாட்டாரே அவனவளும் பச்சரிசி பாலும்
நலமாக நெய்யோடோ பொங்கி யுண்டு
ஊட்டாரே தினந்தோறுஞ் துருசு சாரம்
உத்தமனே பழவகைக ளெல்லா மாமே. (121)

ஆமப்பா சுண்ணாம்பில் கற்பூரங்கூட்டி
அடவாக யிருந்து தாம்பூலந் திண்ண
ஓமப்பா தலைமூழ்க நீரு மாட
உத்தமனே பரிமளங்கள் பூச நன்று
காமப்பால் நாதமோடு அமுரி கூட
கலந்ததைத்தான் தினந் தோறு ம்ரவியில் வைப்பாய்
சேமப்பா இப்படியே வளர்புறயைத் தொட்டு
திரமாக பதினாறு தினந்தான் பண்ணே. (122)

பண்ணியபின் ஆவியில் வைப்பாய் பாண்டத்தோடு
பரிவாகச் சுவரியெல்லாம் உப்பா நிற்கும்
ஒண்ணியே கிண்டியதை பாண்டத் தோடே
உத்தமனே வைத்திருக்கத் திரண்டு உப்பாங்
கண்ணியது அமுரிவிந்து நாதத் தோடு
கற்பூரச் சீனமோடு கலந்த உப்பு
புண்ணியமே செய்வதற்கு படிகம் போலப்
புகழான உப்பாகும் புகழ்ந்து செய்யே. (123).

செய்யடா உப்பையினிச் சுண்ணாம் பாக்க
செப்புறேன் சுந்தரமே நன்றாகக் கேளு
கையடா சவுக்காரச் சுண்ணத்தோடு
கலந்தெல்லாஞ் சவுக்கார புழுகு கூட்டி
மெய்யடா வலு உப்பு மேலேபூசி
வெய்யிலிலே போடநீ சுண்ண மாகும்
பையடா பூப் போல அலந்து நிற்கும்
பாங்கான உப்படிதான் சுண்ண மாச்சே. (124)

சுண்ணமாய் வலுஉப்பு விரிந்த பின்பு
தொடுகுறிபோல் வாதமுறை சொல்லக் கேளு
வண்ணமாய்ச் சுண்ணத்தில் வீரங் கூட்டி
மைந்தனே புழுகிட்டு வைத்துக் கொண்டு

தண்ணமாய் உபரசங்கள் சரக்குக் கெல்லாந்
தடவியல்லோ நன்றாகப் போடு போடு
கன்னமாய்க் கடுஞ் சுண்ண மாகுமாகுங்
கலங்காதே ஒன்றெடுத்து நீத்தினத்தை வாட்டே. (125)

வாட்டடா அனல்வேண்டாம் நீத்தினத்துக் கெல்லாம்
ஆவியினுள்ளே போடுவது நீறிப் போகும்
ஊட்டடா ஒவ்வொன்றில் கோடா கோடி
உத்தமனே நீத்தினமுங் கோடா கோடி
வீட்டடா ஒவ்வொன்றி லாட வென்றால்
நிலையாது ஏகாந்த வரை நெட்டே யோடும்
பாட்டடா ஒருதுறையைப் பார்த்த படியென்றால்
பரவிய தோர் வேலை நிறம் பத்தாதே. (126)

பாத்தந்த நீத்தினத்தை விட்டு நீதான்
பரிவான வர்ணமாம் உருக்கினத்தைக் கேளு
ஊத்தாத உப்பு நீருக்குள்ளே நீதான்
உறுதியாய் வீரமிட்டுக் காரஞ் சேர்த்து
ஆத்தாத சவ்வாது கூடக் கூட்டி
அப்பனே மத்திச் சுவைச்சுக் கொண்டு
மூத்தாத உபரசமுஞ் சரக்கில் பூசி
முதுகனலி லுருகிடவே உருகும் பாரே. (127)

பாரடா உருக்கினதோர் சரக்கை நீதான்
பரிவான மீது தப்பா தப்பா
ஆரடா ஒவ்வொன்றின் முடி வைப்பார்த்து
அளவிட்டு சில உப்புக் காணார் காணார்
போரடா ஒவ்வொன்றி லாகும் வேதை
புகழாகச் சொல்லுகிறேன் கேளு கேளே (128)

கேளப்பா லோகத்தில் சரக்கைப் பூசி
கெடியான வெய்யிலிலே போடு போடு
தாளப்பா சணத்திலே தருத்தி லோகந்தான்
திரும்பிப் பார்க்குமுன்னே தங்க மாகும்
நாளப்பா மாத்தேது யிருபத் தஞ்சு
நலமான வீரத்தி லாடு மாடும்
வேளப்பா எரித்தச்சிவன் தேவிக்குச் சொன்னார்
வேதாந்தத் தாயெனக்கு விளம்பி னாளே. (129)

விளம்பியதோர் பரிசனத்தி லாடும் வேதை
வெயிலிலே பழமடா வேக மெத்த
தளம்பியதோர் வாதமெல்லாம் வலுவாம் வாதந்
தன் மரபு சிஷ்யனுக்குச் சொல்லு சொல்லு
குளம்பியதோர் மனமுடைந்தோர்க் கீந்தாயானால்
குடுத்தவர்க்கு நாகம் வருங் கூறினேனான்
அளம்பியதோர் உப்பான சுண்ணத் துள்ளே
அப்பனே சமபாகஞ் சாரங் கூட்டே. (130)

கூட்டியல்லோ அரைக்கையிலே செய்நீர் ஆகும்
குறையாம லாதிசத்தி கொடுத்தாளப்பா
நீட்டியல்லோ செய்நீரில் சரக்குத் தோய்த்து
நேராக வெய்யிலிலிட மெழுகு மாகும்
மாட்டியல்லோ மெழு கென்றால் பரிசை வேதை
அன்பதடா மாத்தாகு மறிந்து பாரே
பூட்டியல்லோ உபரசத்தில் பூசிப் போடப்
பொன்னுக்குப் பொன்னாகும் புகழ்ந்து கொள்ளே. (131)

கொள்ளடா கற்பூரச் செய்நீர்க் குள்ளே
கொட்டியல்லோ வாரியிட்டுக் குகையினுள்ளே
தள்ளடா ஆவியின் முன்னே தணலாய்வெந்து
சாதகமாய் வெந்நீராய்ப் பொருமி நிற்கும்
அள் ளடா நீரோடே வீரங் கூட்டி
அப்பனே புழு கிட்டுச் சீனம் யோடு
உள்ளடா உபரசத்தில் சரக்கில் பூசி
உப்போடே வெயிலிலிடச் சுண்ண மாமே. (132)

ஆமப்பா சுண்ணத்தில் வீரங்கூட்டி
அந்தந்த வினத்தின்மேல் பூசிப் போட
ஓமப்பா சுண்ணாம்பா யாகுமப்பா
உத்தமனே இப்படித்தான் தொந்த மேத்த
தாமப்பா சங்க வரைச் சுண்ணாம் பாக்கி
தனித்தனியே ஆடவென்றாலு காந்தம் வேண்டும்
வேமப்பா அண்ட ரெண்டஞ் சுண்ணம் பட்டால்
வேறு வெளி போலாமிந்த வேகத் தானே. (133)

தானென்ற கற்பூரஞ் சுண்ணத் தோடு
 காரமிட்டு சாரமிட்டு வீர மிட்டு
ஊனென்ற விந்துவிட்டு பத்தாச் சப்பா
 உத்தமனே சரக்குகளை தொட்டு ஆடும்
கோனென்ற உபரசங்க ளெல்லாம் ஆடும்
 கொடியதோர் நவலோகந் தொட்டுப் போட
வானென்ற ஆடயினுள்ளே தங்க மாகும்
 மாத்தேது முப்பத் தஞ்சு மாச்சே. (134)

ஆச்சடா பூரமென்ற நீத்தி னோடே
 அப்பனே சாரமது சமனாய்க் கூட்டி
ஒச்சடா ஆடியிலே செய் நீ ராகும்
 உத்தமனே தாளகத்தை துவைச்சுப் போடு
போச்சடா மஞ்சளெல்லாம் ஆவிதா னுண்டு
 புகழாகச் சங்கு போலப் பொருமி நீறும்
ஆச்சடா மால்தேவி சுன்ன மானால்
 வாதமென்ற பாத்திரத்தின் வகை சொல்வேனே. (135)

சொல்லுறேன் தாளகத்தின் சுண்ணத் தோடு
 சுகமாகக் காரமிட்டு வீரம்மிட்டு
அல்லுறே னென்று சொல்லி அரைத்துக் கொண்டு
 அப்பிரக மென்ற நவநீ தத்தில்
மல்லுறேன் என்று பிசறிக் குகையிலிட்டு
 வளமாக உருக்கிடவே சத்தாய் நிற்குங்
கொல்லுறேன் என்றுசொல்லி குத்தை செத்து
 கொடுஞ் சுறுக்குத் தேவியுட நாதந் தானே. (136)

தானென்ற அப்பிரக சத்தைப் பாரு
 சவுடு திரையத் துருகுந் தண்ணீர்போல்
வேனென்ற ஈயம்போல் மெதுவா நிற்கும்
 வெளுப்பென்றால் சருகை வெள்ளிசெத்துப்போகுங்
தானென்ற சத்துக்கு நாலுக் கொன்று
 காட்டியல்லோ தங்கத்தை உருக்கி நன்றாய்
பானென்ற கிண்ணியைப் போல் கோடிப் பண்ணி
 பராபரையின் முன்வைத்துப் பணிந்து போற்றே. (137)

போற்றியல்லோ கிண்ணியிலே சூதம் வார்த்து
புகழாக அடித்தூரில் சீலை செய்து
மாற்றியல்லோ ஆவியில் வைத்து காயும்போது
மைந்தனே கரு ஊமத்தைச் சாறுவார்த்து
ஊற்றியல்லோ சாறுசற்றே கொதிக்கும் போது
உருண்டல்லோ சூதமங்கே குளிகை யாகும்
வாற்றியல்லோ சூதமது சகலத் துக்கும்
மதவானைக் கிண்ணியிலே மாண்டவாறே. (138)

வாறான சூதத்தை குளிகை யாக்கி
மைந்தனே பரிச்சுண்ணஞ் சவ்வாது காரங்
கூறான குளிகையின் மேல் பூசி நீயுங்
குகையிலிட்டு உருக்கையிலே சாகுஞ் சூதந்
தாறான பச்சை ரசமொன்றுக்கு நூறு
தவளை போல முழங்கிக் தள்ளி யாடும்
வீறான செய்ந் திரந்தா னென்றார்
பெருவிரு-க்குப் பரிசனத்தில் வேதை யாமே. (139)

வேதையாங் குளிகையிலே சாறணையைத் தீர்த்தால்
மேலான குளிகை யென்ற சுரபியாகும்
பாதையாங் குளிகையிலே தங்கங் கூட்டி
பரிவான கெந்தியிட்டால் செந்தூரிக்கும்
போதையாங் கோடிக்கு யொன்றே யோடும்
பொன்மாத்து அறுபத்து நாலு காணுந்
தாதையா யெனை யீன்ற மாயிக் கீசன்
சாத்தினார் சாத்திரத்தைப் பாடினாரே. (140)

பாடினேன் வடமொழியைப் பிரித்துப் பார்த்து
பரிவாக ஒவ்வொன்றாய் பண்ணிப் பண்ணி
ஆடியென்ன சூத்திரத்தை அநேக வேதை
அரகரா யெந்றாலு முடிவு காணேன்.
ஓடினேன் குளிகையிட்டு அண்ட மெல்லாம்
ஒருகோடி நூல்பார்த்தேன் இதுக் கொவ்வாது
மூடினேன் சூத்திரத்தை சுந்தரமே அய்யா
முக்கியமாய்ச் சிஷ்யருட முறையைச் சொல்லே (141)

சொல்லடா சூதமென்ற செந்தூரத்தை
சுருக்காக நீ மூன்றுதினங் கொண்டாயானால்
கல்லடா உன்தேகஞ் சாவே யில்லை
கவுனமடா அண்டரெண்டங் கடந்து ஆடும்
நில்லடா குருபதத்தை நிறையங் கொண்டு
நிமிஷத்தில் சினத்து நினைவா லூட்டும்
அல்லடா அறிவோடே மேலே வாங்கு
மனந்தீர்க்கு முபாயமிது மக்காள் காணே (142)

காணப்பா கடுக்காயின் மிளகைத் தொட்டு
கைமுறையாய் உண்ணயிலே முறிஞ்சு தானால்
பூணப்பா மெடுத்தால் தங்க கற்பம்
புகழாக உண்டாலே தீருந் தீருந்
தோணப்பா உதரத்தில் நோய்கள் வந்தால்
சுகமாக அப்பிரக கற்பங் கொள்ளே
ஆணப்பா மலசலமுங் கட்டிச் சானால்
அறுத்துவிடுநாற் கரந்தையென்ற கற்பங் கொள்ளே. (143)

கொள்ளடா அண்டம் பயந்து வீங்கிச் சானால்
கோடிதான் யிரும்பினுட கற்பங் கொள்ளு
தள்ளடா கண்மயங்கி மறைஞ்சு தானால்
தயங்காமல் கற்பூரச் சத்தைக் கொள்ளு
உள்ளடா கடிவிஷம்போல் உடம்பில் வீழ்ந்தால்
உத்தமனே விழுதியுட வேரி னோடே
அள்ளடா சூதகற்பம் வைத்துக் கொண்டால்
அணுகியதோர் பதினெட்டுக் குட்டம் போமே (144)

போமடா கற்பத்தில் வந்த தோஷம்
போக்கெல்லாம் போகவொரு கற்பஞ் சொல்வேன்
ஓமடா அப்பிர கச்சத்துத் தானும்
ஒருபலத்தி லரைப்பலமுந் தங்கம் போட்டு
ஆமடா செய்சூதந் தங்கயிடை போட்டு
அடவாக உருக்கியல்லோ எடுத்துக் கொண்டு
தாமடா கந்தகந்தான் ரெட்டி பூட்டி
சாதகமாய் குகையிலே சமைத்தி டாயே. (145)

சமைத்ததொரு செந்தூரம் பத்துக் கொன்று
தாக்கினால் ஒன்பதிலும் பத்துப் பத்தாம்
அமைத்ததொரு செந்தூரங் குண்ணி யுண்ணில்
அழிஞ்சதொரு கல்ப்பமெல்லா மடவாத்தேறுங் குரு
குமைத்ததொரு கல்ப்பத்தால் முறிந்த தோஷம்
கோடி விதமானாலுங் குலாவித் தீருந்
நமைத்ததொரு உலகத்தோர்க் காகச் சொன்னேன்
நம்முடைய நூல் பார்த்தோர் நல்லோர் தானே. (146)

தானென்ற நல்லோர்க்கு எந்நூல் கிட்டுஞ்
சண்டாளப் பாவிக்கு யெந்நூல் கிட்டா
கோனென்ற சாத்திரமே சுந்தரமே அய்யா
குறிப்பாக துறைசொல்வேன் கூர்ந்து கேளு
வானென்ற ஞானமுன்னே யிருநூறு சொன்னேன்
மருவியதோர் வாதத்தில் பத்து நூறு
ஊனென்ற நிகண்டதுவும் பனிரண்டு நூறு
உசத்தியாய்ச் சொச்சமுண்டு உன்னிக்காணே (147)

காணப்பா யிதன்பிறகே காயசித்தி சொன்னேன்
கைமுறையாய் நூத்தொன்று கண்டு கொண்டு
பூணப்பா யிருபத்து அஞ்சு நூறு
புகழாக கொச்சமுடன் பாடினேன் யான்
தோணப்பா இதைவிட்ட நம்முடைய மரபு
சொன்னதொரு சாத்திரங்கள் ஒன்று மில்லை
வீணப்பா அலையாதே கோபத் தாலே
விளம்புகிறேன் சூத்திரத்தை யிருநூற் றொன்றே. (148)

ஒன்றாகச் சாத்திரமுஞ் சூத்திரமுங் கேளு
இருபத்து அஞ்சு நூறு இதமாய்ச் சொன்னேள்
நன்றாக சிஷ்யன்வந்து வணக்கஞ் செய்தால்
நலமாக சூத்திரத்தைக் கொடுப்பீர் நீங்கள்
பண்டாக சூத்திரத்தைச் சடத்தே வைத்தால்
பாரேழு குளிகையிட்டு ஓடிப் பேசு
கண்டாகச் சொல்லி விட்டேன் சூத்திரத்தைப்
காட்டாதே சித்தருக்கு கள்ளர் தானே. (149)

கள்ளரடா சித்தரெல்லாஞ் சூத்திரத்தை வாங்கி
கைமுறையாய்க் கையிலே ஒளிப்பா ரய்யா
உள்ளதடா தங்களுட நூலைப் போல
உப்போடு வழலைரெண்டு மொளித்தா ரில்லை
வெள்ளடா சட்டைமுனி யென்று சொல்வார்
வேளிச்சேர் உலகமெல்லாம் வாத மென்பார்
அள்ளடா யிப்படித்தான் சொல்ல லாமோ
அறையிறேன் கையிலாசத் தென்பார்காணே. (150)

காணடா கயிலாசத் துறைந்தா லென்ன
கைமுறையாய் மூடர்களே யென்று சொல்லு
ஊணடா தீட்சைவிதி யானத் தாலே
ஊமையைப் போல் இருந்துவிட்டு ஓங்கிழிகச் சொல்லி
பூணடா சிவன் வந்து யெதுத்தால் வேதை
போடுறேன் வாதத்தில் துடியைப் பாரே. (151)

துடியே சூத்திரத்தில் குருவைத் தொட்டு
சூழ்நிலை அண்டமெல்லாம் மணிபோ லாட்டி
கெடியான மேருமுதல் மலைக ளெல்லாங்
கேளடா சுண்ணாம்பா யூதிப் போட்டு
முடியான வீரமிட்டு வேதைப் போட்டு
மூவுலகும் பொன்னுலகாய் முடிப்பேன் பாரு
அடியான வழலைக்கொண்டு ஆடி ஏறி
ஆடுறேன் ஆடுதற்கு வாவா வென்னே. (152)

வாவென்றே யெனையழைத்து சித்த ரய்யா
வாய்க்கொழுப்போ சட்டைமுனி வலுமை தானோ
போவென்று சொன்னாக்கால் நாங்கள் போறோம்
பொன்மலைமேல் கல்மலையோ பொருந்து மப்பா
கோவென்று யெனையாண்டு சூத்திரத்தைப் பார்த்தார்
கொத்தோடே அருமையாய் கூடுறோம் நாம்
தாவென்று கேட்டாக்கால் வருமோ அய்யா
சட்டைமுனி போலவுந்தான் குருக்காணேனே (153)

குருவான மூலகுரு கயிலாச மூர்த்தி
கொள்ளையிட்டார் வாதமெல்லாங் கூகூகூகூ
கருவான வழலையைத்தான் வீதியிலே போட்டார்
கண்கெட்ட குருடருக்கு காணுங் காணுங்

திருவான உப்பினுடக் கட்டைச் சொன்னார்
சிவசிவா ஒருநூலில் காணோங் காணோம்
உருவான அகண்டமாய் நின்ற மூர்த்தி
உத்தமனே உங்கள் குலம் பிறித்த வாறே (154)

வாறான சித்தரெல்லாந் தோத்திரமேச் செய்து
வையுமென்பார் தீட்சையைத்தான் மனசு கந்து
தாறான பூரணமே அடியேன் தானுஞ்
சமுசியமாய் வந்துவிட்டேன் கேழ்க வேண்டி
ஆறான பேரண்டத் துள்ளே அய்யா
அடுமைபடைத் தடுமைபடைத் தாடு போவே (155)

போவென்று வேட்சித்த பூரணமே அய்யா
போகட்டோ பேரண்டப் பத்தி மட்டும்
வாவென்று அழைத்துடனே சிஷ்யர் கோடி
வந்துடுமே எந்தவகை தீட்சை சொல்வேன்
மாவென்று மவுனமுதல் தேசமுஞ் சொல்லு
மாயியுட திசதீட்சை வளமுஞ் சொல்லு
தேவென்று அடிவணங்கி நின்றா னானால்
சேவிச்சால் சூத்திரத்தை யீந்து பாரே. (156)

ஈந்தல்லோ அங்கங்கே மன முண்டாக்கி
யெடுப்பான சிஷ்யரைத்தான் அங்கங்கே வைத்து
ஆய்ந்தல்லோ சாத்திரமுஞ் சூத்திரமுங் காட்டி
அடியான அலுத்தன் கைவசமே பண்ணு
வாய்ந்தல்லோ வழலையடி தப்பிச் சானால்
வாதமோ ஞானவரை வாயா தப்பா
காய்ந்தல்லோ போகாமல் வைத்த பயிரெல்லாங்
கருணையுட வழலைதான்காட்டு காட்டே. (157)

காட்டியல்லோ அப்போது குருவைச் செய்து
கைவிட்ட உப்பெடுத்து ஆடச் சொல்லி
மூட்டியல்லோ சாதினையைத் தீர்த்துக் காட்டி
மோசங்கள் வாராமல் புத்திச் சொல்லி
பூட்டியல்லோ புருவ மையத்தே காட்டி
புகழான வீதியுட வரிசை சொல்வேன்
நீட்டியல்லோ சூத்திரத்தைக் கையி லீய்ந்து
நினைவோடே பாரென்று நிறுத்திடாயே. (1[illegible])

நிறுத்தியபின் அப்பிரக சத்துப் போல
நேரான தாளகத்தின் சுண்ணத்தாலே
கருதியதோர் கருத்தையெல்லாங் கருவாய்ப் போட்டு
கடுகமுன்போல மருந்திட்டு குகையில் வைத்து
மருத்தியதை துருத்திகொண்டு ஊது ஊது
மைந்தனே ஈயம்போல் சத்தாய் நிற்கும்
ஒருத்தியதோர் காந்த உசத்தி மேத்த
உத்தமனே தங்கமிட்டு கிண்ணி பண்ணே. (159)

பண்ணியதோர் கிண்ணியிலே நாகம் போட்டு
பரிவாகச் சூதமிட்டு சீலையும் போட்டு
அண்ணியதோர் வாலுகையில் ஏத்திக் கொண்டால்
அப்பனே செந்தூர மாகு மாகுந்
தண்ணியதோர் நவலோகச் சத்து நூத்தொன்றுத்
தாக்கடா தன் மாத்து நாற்ப தாகும்
ஒண்ணியதோர் இனங்கண்டு செந்தூரித்தால்
ஒருகோடி செந்தூர முருகும் பாரே. (160)

பாரடா காந்தசத்து தங்க நேரே
பாச்சியல்லோ தங்கமிடச் சூதம் போட்டு
நேரடா உருக்கியதை வாங்கிக் கொண்டு
நிறைக் கோக்க கெந்தகத்தைக் கூட்டி நன்றாய்
காரடா வாலுகையி லேத்தி மூடி
சமரசமாய் காந்தமது செந்தூரிக்கும்
ஊரடா யிருந்தா லென்கட்டி வாழ்ந்தோர்
உத்தமனே குண்ணியிடை கொள்ளுகொள்ளே (161)

கொள்ளடாக் காயமொன்று காயசித்தி யாகுங்
கொப்பிளிச்சு சட்டையொன்று கழற்றிப்போடு
உள்ளடா மேனியெல்லாந் தங்கமாகும்
உறுதியாய்க் கோரக்கர் கொண்ட மார்க்கம்
அள்ளடா செந்தூர நவலோகத்தில்
அப்பனே ஐந்நூற்றுக் கொன்றுப் போடு
தள்ளடா மாத்திதிலே முப்பதாகுந்
சாதகமாய் பூனாகத் தாண்மை கேளே. (162)

கேளடா பூனாகஞ் சிவந்த தானால்
கெட்டியாய் எடுத்துவந்து பாலில் போட்டு
நாளடா யிதையுலத்தி நீ தான் கேளு
நலமாக பலம்பத்து எடுத்துக் கொண்டு
தோளடா தாளகத்தின் சுண்ணந்தானுஞ்
சிறப்பாக காசுகொண்டு தூக்கிக் கொண்டு
வாளடா வீரமிரு காசுப் போட்டு
மாட்டடா காரமஞ்சு காசு தானே. (163)

காசினிடை சவ்வாது கூடப் போட்டு
கைமுறையாய் மத்திச்சுப் பிசிரி நன்றாய்
மாசினிடை யத்தகுகைக் குள்ளே வைத்து
வளமாக ஊதிடவே யீய மாகும்
வாசியிடை பூனாகம் ஈயமானால்
வாச்சுதடா குளிகை சாரணைக் கெல்லாம்
பேசுமடா யினியேது காய சித்தி
பேரான வாதசித்தி பிறக்குங் காணே. (164)

பிறக்குற தோர் பூநாக சத்தில் தங்கம்
பேராக நாலிலொன்று கூட்டு நீதான்
நிரக்குறதோர் கிண்ணியைப்போல் வார்த்துப் பார்த்து
நேராகச் செந்தூரஞ் செய்யக் கேளு
உரக்குறதோர் நாகரசக் கெந்தி யாகும்
உத்தமனே காரீயச் சிலையுமாகும்
பிறக்குறதோர் தங்கமோடு லிங்கங் கெந்தி
இதமாக யினம்சேத்து யிட்டுக் கிண்டே. (165)

கிண்டயிலே வெப்பேருஞ் செந்தூர மாகுங்
கெட்டியாக இப்படியே யினங்கள் சேர்த்து
தண்டயிலே செந்தூர மாகப் பண்ணி
சகத்திரத்துக் கொன்றிடவே வேதை யாகும்
பண்டையிலே மாத்தென்ன அன்பத் தஞ்சு
பாரடா பூ நாகச் சத்தின் வேகம்
அண்டயிலே ஓடாது தூர வோடும்
அறையிறேன் வயிரத்தின் குருவைத் தானே. (166)

தானான பூநாகச் சத்தைக் கேளு
சாதகமாய்க் காசிடைதான் உருகும்போது
வானான வயிர மது காசிடைதான் போடு
வாங்கியல்லோ கண் விட்டு ஆடு மாடுங்
கானான வயிரமது ஒன்னோய்த் தாக்க
பழித்துப் பழித்து உள்ளே வாங்கும்
ஊனான ஒன்றுபத்து வாங்கி வாங்க
உருகுமடா ஒன்று வயிரத்தை யூணிப்பாரே (167)

பாரடா வயிரமது மணிபோ லானால்
பரிவாகக் குருமுறையைச் சொல்லக் கேளு
நேரடா சவுக்கார சுண்ணம் வீரம்
நிலையான புழுகோடு சீனங் கூட்டி
தாரடா அருக்கன்பால் தன்னாலாட்டி
சுகமான மணிபோல பூசிப் பூசி
காரடா ஆவி படவே காய்ந்தபின்பு
கடுக ஒரு புடம் போட குருவுமாமே (168)

குருவான சூதம்பத்தில் வயிர மொன்று
கொட்டியல்லோ முலைப்பாலி லரைத்து வாங்கி
அருவான புடம் போடச் சூதம் கட்டும்
அப்பனே கட்டியதோர் சூதமொன்று
உருவான நற்சூதம் பத்தி லிட்டு
உர வரைத்து முலைப்பாலில் உருக்க ஆடுந்
திருவான சூதமது தொந்த மேறுஞ்
சேர்த்தரைக்க நூறுதொந்த மேற்குங்காணே (169)

காணடா அன்பதாந் தொந்தம் தொந்தம்
காட்டிப் பரிமேலே நூற்றுக் கொன்று
தோணடா கருக்கையிலே ஆவியு மாகுஞ்
சொல்லரிது சொல்லரிது தங்கச் செம்பு
பூணடா பரிச் செம்பு பத்துக் கொன்று
பூட்டடா பரிமேலே செம்பாப் போகும்
ஊணடா படிப்படியே நூறு தொந்தமேறும்
உத்தமனே நூறுதொந்தத் தொன்று வாங்கே (170)

வாங்கியொன்று நாகமது பத்திலிய
மகத்தான கழங்காகு மைந்தா பாரு
ஓங்கியொன்று நாகத்துக் கழங்க தானு
முளப்போட நூத்தொன்று செம்பு மேலே
தாங்கியது அறுபத்துநாலு மாத்துச்
சாதகமாய் நவலோகத் திப்படியே ஆகும்
வாங்கிவந்து சுறுக்கேத்து ஆவியி னுள்ளே
வாலையுட நாதமடா பணிந்து போற்றே. (171)

போற்றியல்லோ வயிரத்தில் கட்டுஞ் சூதம்
புகழாக குளிகைக்கு யேத்த நன்று
ஆற்றியல்லோ கற்பத்துக் காதி சித்தி
அப்பனே வயிரம்போல தேகமாகும்
ஆற்றியல்லோ செய்சூதங் குருவே செய்தால்
மரந்தொட்டு மண்வரைக்கும் வேதையாகும்
ஆற்றியல்லோ வாதந்தில் சூதஞ் சூதம்
வயிரமல்லோ தேவியுட நாதந் தானே, (172)

நாகமடா பூநாகம் பூமி நாகம்
நலமாக சுரபிவில்லை சஞ்சீவி யப்பா
வாதமடா இதிலெடுத்து ஆட ஆட
வாசரமாங் கோசரமாங் மன மொட்டாது
பாதமடா குளிகைக்கு முன்னே பூசு
பாச்சடா பூ நாகக் குளிகை போய் போய்
வேதமடா சொன்னபடி சின்மயமுஞ் சொன்னார்
வேதாந்தத் தாயும் அந்தப்படி சொன்னாளே. (173)

சொன்னாளே சிறுபிள்ளை வயதோ கொஞ்சஞ்
சொல்திறமாய் பேசறியாள் மவுனி யப்பா
யென்நாளோ எவ்வுகமோ யானோ காணேன்
இப்படியே சிறுபெண்ணாய் இருந்தாளாத் தாள்
தன்னாளோ வயசுபத்தில் சந்திர வீட்டில்
தாயார்க்குக் குடியிருப்பு தாக்கிப்பாரு
பன்னாளோ ஆவிகோடி பாடி விரிப்பாள்
பாலையடா சித்தருக்குத் தெய்வந் தானே (174)

தெய்வமடா குலதெய்வம் சித்தர்க் கெல்லாம்
சிறுபிள்ளை சிறுபிள்ளை தேவி தேவி
வைவமடா நாங்களெல்லாம் சிரிப்பாளாத்தாள்
மணிவீட்டைப் போலேயல்லோ அண்ட மெல்லாங்
கொய்வமடா வென வழிப்பாள் நிமிஷத் துள்ளே
குறையாமல் படைத்திடுவாள் கூர்ந்துகூறு
சைய்வமடா கொடுஞ் சைவம் பானம்வேணுஞ்
சத்தித்த மானந்த சத்தி தானே. (175)

சத்தியல்லோ நூறுபங்கில் சிவநாத மொன்று
சார்வாக இருந்துகொண்டு உலக மெல்லாம்
முத்தியல்லோ கொடுத்தார்கள் சித்தர்கள்
மோசமில்லை யுன்னுள்ளே மூடிப் பாரு
பத்தியல்லோ கண்டுமெச்சி வார்த்தை சொல்வாள்
பாரடா சதாநித்த மனத்தை யூணி
அத்தியல்லோ அத்திவள் வார்த்தைக் கேட்டுதானால்
அறுபத்து நாலு சித்து மாடலாமே. (176)

ஆடலாம் பூனாகச் சத்துஒன்றில்
அப்பனே நாலிடை தானாகம் போட்டு
ஓடலாம் உருகிடவே கட்டுங் கட்டு
ஒரு நொடியில் செந்தூரக் களங்க மாகும்
கூடலாம் வங்கத்தில் வூட்டி யாட்டு
நாலு யுகங் கொடுத்து ஆடலாகும்
நாடலாம் இப்படியே காரீய மூட்ட
கொள்ளையென் வெள்ளிவித்த கொள்ளைதானே (177)

கொள்ளையென்று பூ நாகச் சத்துப் போல
கூட்டியல்லோ மயூரத்தினிற்குத் தன்னை
வள்ளையென்று பிசரியிட்டு உருக்கும் போது
வருமடா யியம்போல் மயூரச் சத்து
அள்ளையென்ற சத்தோடு தங்கம் கூட்டி
அப்பனே கிண்ணியைப்போல் வார்த்துக் கொண்டு
நள்ளையென்ற சூதமதில் விட்டு நீதான்
நலமாக சுடுசோற்றில் இதனை வையே. (178)

வைத்துடனே சூதமது சீத மாகும்
மருகான கிண்ணியிலே சூதம் விட்டு
கைத்துடனே பரித்தகடு கூடப் போட்டு
கலங்காதே பொடுதலைச்சாறு சற்றே விட்டு
யைத்துடனே சுடுசோற்றில் வைப்பா யானால்
நலமான பொன்னாகும் உருக்கிப் பாரு
வைத்துடனே வெள்ளிக்கு வெள்ளி ரேக்கு
பரிவான ஊமத்தஞ் சாறு குத்தே. (179)

குத்தியல்லோ கொதித்தபின்பு கோட்ட வெள்ளி
கூசாமல் பொன்னிட்டால் பொன்னே யாகும்
மத்தியல்லோ சத்தோடே நாலுக் கொன்று
அப்பனே செந்தூர மொன்பதிலு மோடும்
நத்தியதோர் கற்பங்க ளுண்ணும் போது
நழுவாமல் பத்தியத்தை சொல்லு றேனே. (180)

சொல்லியதோர் வாசினையால் உப்புக் கட்டி
சுகமாக கட்டியதோ ருப்பை கூட்டி
அல்லுறேன் புளிமேலே ஆசை யானால்
அப்பனே புளியாரை நெல்லிக் காயாம்
சொல்லுறேன் சீயக்காய் கொழுந்து மாகுந்
திரமான கொடுக்காயின் புளியு மாகும்
வெல்லுறேன் என்று மனந்திடத்தை யுன்னி
வெருளாமல் கல்ப்பத்தை யுண்ணு உண்ணே (181)

உண்ணயிலே மூலிகையின் கற்ப மெல்லாம்
உத்தமனே பயனோடு பணியார மாகா
அண்ணயிலே யிளநீரும் கரும்பு மாகா
அப்பனே பழவகையி லொன்று மாகா
தண்ணயிலே மூலிகைக் கடந்து மேலேச்
சாதகமாய்ச் சத்தோடுஞ் சூதங் கொள்ளில்
பண்ணயிலே பயரோடு பணியாரம் பழங்கள்
பலப்பல வாந்தின் கையிலே பயமும் போச்சே (182)

போச்சடா பயங்களெல்லாஞ் சூத முண்டால்
போட்டாற வேணுமென்றால் தீனி யெல்லாம்
ஆச்சடா காயமங்கே சித்தி யானால்
அண்டரண்டம் பதமளவுங் காணலாகும்

மூச்சடா ஆடாது வாசி தேசி
முத்தண்ட ரவுத்தினையும் மாச்சு
போச்சடா அல்லஅல்ல சத்தியமாய்ச் சொன்னேன்
பேய்மக்காள் சிஷ்யருக்குப் பிலக்கச் சொல்லே (183)

சொல்லியதோர் மயூரத்தின் சத்துக் கிண்ணி
சுகமாக வாலுகையி லேத்திக் கொண்டு
அல்லியதோர் இனஞ்சேத்து போட்டுக் கிண்ட
அளவத்த செந்தூர மாகு மாகுங்
கல்லியதோர் களங்காகுங் கோடா கோடி
கரையேது ஆயிரத்துக் கொன்றே ஒடும்
வல்லியதோர் மயூரத்தின் மேலுருக்க
மைந்தனே தங்கம் போல வண்ணமாமே. (184)

ஓமடா தங்கம்போல் வண்ண மாகி
உருக்கினால் தங்கம்போல் மெதுவே யாகும்
ஆமடா யிதிலே யொருகாசு தூக்கி
அப்பனே தங்கமொன்று சூத மொன்று
தாமடா மூன்றுமொன்றாய் உருக்கி வாங்கி
தனிமணிபோல் பூசு தற்கு மருந்துகேளே. (185)

மருந்தேது சவுக்காரச் சுண்ணஞ் சுண்ணம்
மைந்தனே வீரமோடு புழுகு சீனம்
மருந்தோடு சுக்கிலத்தா லரைத்துப் பூசி
அப்பனே அஞ்சுசுண்ணக் குகையில் வைத்து
கருந்தேது கனபுடமாய்ப் போடு போடு
காதல்லோ ஈசான பூசை பண்ணு
விருந்தேது மதுவோடு சுத்தி பத்தி
விதமாக பரப்பியங்கே பூசை பண்ணே. (186)

பண்ணியல்லோ எடுத்துப்பார் நிமிளை தன்னை
பாங்கான சுண்ணாம்பாய் குருவு மாகும்
ஒண்ணியல்லோ குரு நிமிளை யுடன் குருவுக்குள்ளே
உத்தமனே வீரமிட்டுக் காரம் போடு
கண்ணியல்லோ சவாதிட்டு மத்திச் சேதான்
காதிலே வைத்திருப்பார் நாதாக்கள் தானுந்
தண்ணியல்லோ இதைத்தொட்டு கல்லைத் தொட்டு
தணலிலே போடயிலே நூறு மாத்தே (187)

மாத்தான நிமிளையை த்தான் வயிரத் துண்டா
மாத்திலே போட்டிட்டு ஆவியில் போட
காத்தான மரமல்லோ லோக மாகி
கண்ணிமைக்குள் தங்கமுமாய்க் காணுங் காணும்
ஊத்தான கேணியிலே கோடா கோடி
ஓடுமடா வேதையினிச் சொல்லப் போகா
ஆத்தான தாணதைத் தொட்டு மனதைதொட்டு
ஆடலாம் மாத்து மெத்த அதிகந்தானே. (188)

தானென்ற நிமிளைச்சத்தில் தங்கக் கட்டி
சாதகமாய் கிண்ணியைப்போல் வார்த்துக் கொண்டு
கோனென்ற கிண்ணியைத்தான் வாலுகையில் வைத்து
கொட்டடா சூதமதில் கட்டிப் போகும்
வேனென்ற கிண்ணியிலே செந்தூரங் கோடி
விதமாக இனஞ் சேர்த்து போட்டா லாகும்
ஊனென்ற தேவியுட நாதச் சத்து
ஒப்பில்லைத் துறைகோடி உரைக்க லாமே. (189)

உரைக்கிறேன் நிமிளையைப்போல் கல்நார் கூட்டி
உத்தமனே உருக்கிடவே சத்து மாகும்
நிறைக்கலாஞ் சத்தோடே தங்கங் கூட்டி
நேராகக் கிண்ணியைப் போல் வார்த்துக் கொண்டு
தரைக்கலாங் கிண்ணியிலே வீரம் போட்டு
சாரநீர் குத்தியல்லோ வெதுப்பும் போது
அரக்கில்லா மெழுகாகும் வீரந்தானும்
அப்பனே பரிசனத்தின் வேதை யாமே (190)

வேதையாங் கிண்ணியுட வித்தை கேளு
விளங்கியதோர் பாஷாணம் வேண்டினது வைத்து
பாதையாஞ் சாரநீர் குத்தி யுள்ளே
பரிவான வாலுகையி லேத்தி யாட்டு
கோதையாஞ் சரக்கெல்லா மெழுகாய்ப் போகும்
குடுத்துப்பார் ஆயிரத்துக் கொன்று நீதான்
மாதையா மாத்து அன்பத் தஞ்சு
மைந்தனே கல்நாரின் வளமை தானே (191)

வளமையென்ற கிண்ணியிலே மெழுகோ கோடி
மைந்தனே சூதமிட்டு சோதிக்க கட்டும்
இளமையென்ற காயசித்தி செந்தூரித் துண்ண
இறுகுமடா நரம்பெல்லாம் எலும்பு போலாம்
அளமையென்ற மேல்த் தோலோ பழுப்பு யேறும்
ஆதியுட உபரசத்தின் கல்நாரப்பா
தளமையென்ற தாம்பூலங் கல்நார் சுண்ணங்
கட்டியல்லோ தந்த மெல்லா மிறுகும் பாரே. (192)

பாரடா கல்நார்ப்போல நீ தான்
பரிவான கெவுரியைத்தான் பிசறியூது
நேரடா சத்தாகும் நாகம் போலே
நிலையான தங்கமிட நாலுக் கொன்று
வாரடா கிண்ணியைப் போல் மாணாக் காளே
மகத்தான சூதமிதில் கட்டிப் போகும்
ஆரடா கெவுரியுட வேதை சொல்வார்
அதுக்குள்ளே செந்தூரம் கோடி யாகும். (193)

ஆயப்பா கெவுரியைத்தான் விரித்துச் சொல்வேன்
அடங்காது சூத்திரத்தில் அறிந்துப் பாரு
ஓமப்பா சூதமதில் சத்தா வேதை
உத்தமனே பரிசுண்ணங் கோடி யாகும்
வாமப்பா லுண்டவர்க்கு யெல்லா மாகும்
வாமம் விட்ட சைவத்துக்கு மண்ணாய்ப் போகுஞ்
சோமப்பா லுண்டவர்க்குச் சித்தி யாகுஞ்
துன்மார்க்கர் காமியென்றால் சொல் பொய்யாமே. (194)

பொய்யாத் தாளகத்தின் சுண்ணத் தாட்டு
போட்டு தடா யேழங்க மென்னச் சொல்வேன்
கொய்யாத் தாளகத்தின் சுண்ணத் தோடுங்
கூட்டடா சீனமொடு புழுகு வீரம்
பையத்தாள் வங்கத்தின் மேலே பூசிப்போடு
ஆவியில் போட்டிடவே சுண்ண மாகுங்
கையத்தான் வங்கத்தில் சுண்ணங் கோடிக்
கரையில்லை செந்தூரக் காடு தானே. (195)

காடான வங்கத்தில் வீரஞ் சீனங்
கைமுறையாய் புழுகிட்டு கலக்கி நன்றாய்
தாடான நிமிளையின்மேல் பூசிப் போட
தணல் வேண்டாம் ஆவியினுள்ளே தானே நீறும்
வாடான நிமிளைத் தொட்டு ஆடவென்றால்
மண்ணேது மலையேது மரங்க ளேது
நீடான செந்தூரச் சுண்ணம் கோடி
நினைவுக்கு மெட்டாது நீட்டிப் பாரே. (196)

பாரடா நிமிளையென்ற சுண்ணத் தோடும்
பரிவான விரமிட்டுச் சீனம் போட்டு
நேரடா புழுகிட்டுமத் திச்சே தான்
நிலையான சாரத்தின் மேலே பூசி
காரடா ஆவியில்வைத்தால் பொங்கி நீறுங்
கடுஞ்சுண்ணங் கடுஞ்சுண்ணஞ்சார வேகம்
ஆரடா யிதனுடைய வேதை சொல்வார்
அற்புதமே நிற்புதமே சார ஆட்டே (197)

ஆட்டான செந்தூரங் கோடா கோடி
அப்பனே செய் நீர் மெழுகு கோடி
நீட்டான சாத்தக் கரையே யில்லை
நிலையான கொங்கணரு மயங்கிப் போனார்
மூட்டான மூட்டி ..... சுகமப்பா
மோகமாய்ச் சொல்லுகிறேன் நன்றாய் கேளு
கூட்டான தாம் புரத்தை .... கொல்லாமல்
கொல்லுமே சாரமென்ற சுண்ணந்தானே. (198)

சுண்ணமென்ற சாரத்தில் வீரஞ்சீனம்
சுகமாகப் புழுகிட்டு காரம் போட்டு
வண்ணமென்ற குரு வண்டு உரமுங் கூட்டி
மயங்காதே காடி நீ விட்டு ஆட்டு
கன்னமென்ற கோலான துரிசுக் கப்பி
காட்டடா ரவிக்குள்ளே கடிய சுண்ணம்
பண்ணமென்ற துரிசியுட பெருமைக் கெல்லாம்
புதியுமுன் பின்னாய்ப் பார்த்திட்டானே. (199)

பார்த்திட்ட துருசியிலே வீரம் சீனம்
பாங்கான புழுகிட்டு வைத்துக் கொண்டு
போர்த்திட்ட பத்துவகை...........
புடமொன்று போட்டால்லோ ஆவியில் வைத்து
கார்த்திட்ட தோட்டோடே மெழுகு மாகுங்
.... புழுகே மலைப்புழுகோ வென்பார்கள்
வாசினைக்கு வேதையேத்திட்ட வேதை யெட்டாது
துரிசவேதை யீசனுல் முடியாது ஆட்டுத் தானே. (200)

தானான சூத்திரத்தை யெழுதி மக்காள்
சாதகமாய் சாத்திரத்தை வகைக்கு ஒன்று
வானான கேசரத்தி லாடும் போது
வார்த்தைவந்தால் சாத்திரமுஞ் சூத்திரமும் பேசும்
கோனான சின் மயத்தின் பிள்ளை நாங்கள்
குறியேது கயிலாச மூர்த்தி வர்க்கம்
வேனான சூத்திரத்தி லிருந்த தொன்று
வேதாந்திக் கருணையினால் விளங்கு முற்றே. (201)

கைலாச நாதர் சூத்திரம் 201 முற்றும்

காலாங்கி நாதர் மறைப்புச் சூத்திரம் – 36

சோதி உருவாய கிலஅண்டம் எங்கும்
துதி பெருகும் பரவெளியாம் சுரூபம் தன்னில்
ஆதி உரு அந்தம தாயளவிலாத
அகில சராசர உயிர்களனைத்தும் ஆகி
பாதி உரு ஓர்பாகப் பெண்ணோ டாணாய்
படர்கின்ற ஞானமெனும் பரையோ டீன்ற
வீதி உருநால் வேத மதங்கள் பொங்கும்
விரிகதிர் மாமுகன் பாதஞ் சிரமேற் கொள்வோம் (1)

கொண்டப்பா மூலபதம் சிரமேற்கொண்டு
கொட்டினேன் வாதநாலாயிரம் தான்
விண்டப்பா மலை நிகண் டெண்ணா யிரம்தான்
விரித்துரைத்தேன் தீக்ஷை விதி எழுநூறப்பா
கண்டப்பா சூத்திரந்தான் னூறு சொன்னேன்
கற்பவிதி வாதமொடுங் கலந்தைந்நூறாய்
பண்டப்பா சொல்லி வைத்தேன் முப்பத்தாறில்
பாடினேன் நூல்மறைப்பு பலவும் தானே. (2)

பல வகையும் காண்டம் ஓரேழுக்குள்ளே
பதிமூவாயிரத்து முன்னூற்று முப்பத்தாறில்
செல தொழிலும் வாதசித்தி யோக சித்தி
சிவஞான சித்தியொடு காயசித்தி
கலகம் இலாக் குளிகை சித்தி கவனசித்தி
காண்பரிய மந்திரசித்தி சொரூபசித்தி
நிலையான அஷ்டசித்தும் அதளில் சொன்னேன்
நினைவிழந்து போகாமல் நேராய்ப் பாரே. (3)

பாரப்பா கருவூரார் மூலநாயர்
பண்பான சட்டைமுனி புண்ணாக்கீசர்
நேரப்பா கும்பமுனி இடைக்காடரப்பா
நிலைபெற்ற உரோமரிஷி பிரமரோடு
காரப்பா சுந்தரரும் கண்ணி சித்தர்
கசிந்துருகும் மச்சமுனி வாசரோடு
சேரப்பா கோரக்கர் நந்திதேவர் தெளிவான
உன் மறைப்பேன் மறைப்போடாமே. (4)

ஆமப்பா மூவாறு சித்தர் நூலில்
அகத்திய மாமுனி நூலின் மறைப்பைச் சொல்வேன்
ஓமப்பா போகா என் பிள்ளாய் கேளு
ஒருவருக்கும் சொல்லாதே உறைத்துப் பாரு
தாமப்பா வச்சிரத்தோடுடைய நாமம்
நான் அறிய அண்டம் என்றார் முடிதான் என்றார்
தாமப்பா ஐம்பூதக் காச்சல் என்றார்
கம்பியுப்புப் பூரம் என்றார் கருவாய்ப் பாரே. (5)

பாரப்பா அண்டோடு நீற்றும் போக்குப்
பாடினேன் ஆயிரத்தின்படியே பண்ணி
நேரப்பா அடிமுடியும் நடுவும் சேர்ந்து
நிலையான வழலையை நீ வைத்துத் தீரு
காரப்பா வழலையினால் வீரம் கட்டிக்
கனகம் அதனால் புடம்போட்டுக் கடு நீராக்கி
சாரப்பா சூதமுதல் எட்டெட்டும் தான்
சவாதோடு தடவி உருக்கொவ் வொன்றாயே (6)

உருக்கவே தாதெல்லாம் மணிபோலாடும்
ஒன்பதிலும் கோடிக் கொன்றோடும் வேதை
வருக்க மிந்தக் குருவிலண்டத் தைலம் பண்ணி
மாட்டிடவே பழுக்கும் என்றார் மகத்தாம் வேதை
பெருக்கவே யெனையாண்ட மூல நாயர்
பேராக நூற்றெட்டுக் காண்டம் சொன்னார்
கருக்கமாய் துருசினதுப் போக்கைச் சொன்னார்
துருசுக்கு ஜெயமில்லாததோ சொன்னாரே (7)

சொன்ன சவுக்காரம் ரெண்டு உப்பு ரெண்டு
துடியானப் பூரம் ரெண்டு காரம் ரெண்டு
வன்னமாம் சாரம் ஒன்று சரக்கொன் பானும்
மணிபோலக் கட்டுமப்பா வழலையாலே
உன்னரிய மூலர் சொன்ன துறைகட் கெல்லாம்
ஊட்டப்பா பச்சையிட்டால் எல்லாம் பொய்யாம்
அன்ன வகைச் சரக்கை யெல்லாம் மணிபோலக்கட்டி
ஆட்டி விக்கும் மூலர்வித்தை ஆதிகேளே (8)

ஆதியென்ற வழலையினால் சாரம் கட்டி
அச்சாரத்திடை வழலையரைக்க நீராம்
சாதியென்ற வங்கமதை உருக்கிய நந்நீர் தனிற்
சாய்க்க மூவேழு தரத்தில் கட்டும்
சோதியென்ற வங்கமதைத் தகடு தட்டி
துடியான வழலையோடு வீரம் பூசி
பேதியென்ற அரசினது பட்டைத்தூளில்
பேசாமல் புடம்போடக் குருவும் ஆமே (9)

குருவெடுத்து பலம் ஒன்று வழலை நீரில்
கொட்டியே யெண்பலமாம் துருசைத் தோய்த்து
திருவெடுத்து ரவியில் இட ஜெயமாய்க் கட்டும்
திறமான வழலை பண்ணை யரைத்துப் பூசி
மருவெடுத்து சீலைசுற்றி வாட்ட நீராம்
வழலை முதல் ஒன்பானும் மணிக்கட்டாம்
கருவெடுத்து துறைக்கெல்லாம் போடவேதான்
கைமுறையாய் தலைக்குருவின் கருவைக் கேளே (10)

கேளுநீ தங்கம் அங்கே உருகும் போது
கெடியானச் சூதவர்ண தைல மாட்டி
வாளுநீ மணியாக வாங்கிக் கண்டர்
மணிக்குமேல் வீரமோடரைத்துப் பூசி
தாளுநீ அண்டோட்டு நீற்றில் வைத்து
தாக்கி ஓர் புடம்போடக் குருவாய் நிற்கும்
ஆளுநீ சூதத்தில் பத்துக் கொன்றிட்டு
அரைக்கு முன்னே மணியாகும் அறிந்து பாரே. (11)

பார்க்கவே சவுக்காரம் வங்கம் ரெண்டும்
படாதிருந்தால் துருசினுக்குப் பிராணன் இல்லை
சேர்க்கவே நிலநிறம் போகாதப்பா
செம்பினது ஊறலுமோ தீராதாகும்
தூர்க்கவே சரக்கிலிடில் செயமாகாது
களிம்பாகி சரக்கெல்லாம் கருத்துப் போகும்
ஏர்க்கவே துருசு முறை கண்டமூலர்
எதிரிலா லோகம் எலாம் பொன் செய்தாரே. (12)

பொன்னான நந்திநூல் மறைப்பைக் கேளு
போக்கோடே வீரவைப்பைப் புதைத்தாரப்பா
மின்னான மூலர் உபதேசம் சொல்லு
வீரவைப்பைக் குருமுகமாய் வைத்துக் கொண்டு
வன்னமென்ற வெங்காரச் சுன்னத்தோடு
மாட்டவே செயசாரம் மகத்தாம் நீராம்
கன்னமென்ற கோலாகும் துருசு வீரம்
கடிய ஜெயபூரமோடு கலந்துப்போடே. (13)

போடப்பா செயநீரில் வீரம் வெள்ளை
புகழான தீபத்தில் தேய்த்து வாட்டி
ஆட்டப்பா மெழுகாகும் பத்துக் கொன்று
அந்தந்த பீஜநீரதனில் கூட்டி
பூட்டப்பா செம்பில் வைத்துப் பூசை செய்து
குடனவால்க் கெதைசெய்த குலம் ஈராறில்
போட்டப்பா அங்குலம் நூல் நடுப்பிடித்துப்
பூசிப்பார் வெள்ளையோடு வீரம் தானே (14)

தானென்ற இருபுறமும் தடவிப் போட
தங்கமாம் ஓர்புறம் தானே வெள்ளியாகும்
கானென்ற நடுவினில்தான் குடவனாகும்
கைமுறையாய் மூன்றுவைப்பு வைத்த வீரம்
கோனென்ற ஐந்துமுறை வைத்து வீரம்
கொள்கினால் இரும்புக் கெதைப் பொன்னதாகும்
வேனென்ற பதினொன்றில் வைத்த வீரம்
விரவி ஓர் புடம் போடச் செந்நெல் பொன்னே (15)

செந்நெல்லோடும் கல்லோடும் மண்ணோடும்
தான்ஊட்டி தீஓட்டில் வறுத்திடவே ஏமம்ஆகும்
அந்தமுறை வெள்ளை வெள்ளையின் மெழுகைப் போட
அகிலம்எலாம் வெள்ளியென்றே அறைந்தார்
நந்திசொன்ன முறை உலகத்தோ ரறியமாட்டார்
சுருக்கானச் சட்டைமுனி மறைப்பைக் கேளு
அந்த சவுக்கார வைப்பில் மறைத்தாரப்பா
அறிவதற்கு கொங்கணர் நூல் அறுபதென்னே (16)

அறுபதுக்குள் அடிமுடியின் இணங்கன் கட்டி
அரைப்படி சேர்த்தெண்ணை அரைப்படியுங்கூட்டி
வறுபதமாய் ரவியில் வைத்துக் கடைய வெண்ணை
உருட்டு விளங்காய் போல் உண்டை உண்டை
குறுபதமாய் ரவிகாணக் காய்ந்த பின்பு
ஏதென்றால் எண்ணைக் கக்கித் திரளும் என்றார்
அறிவான கோபத்தால் சொன்னதாலே
அடிமுறையை மறைத்துச் சூத்திரம் சொன்னாரே (17)

சூத்திரமோ இருநூற்றில் ஒளிக்கவில்லை
சொல்முறையைக் கோபத்தால் மறைத்தாரப்பா
சாத்திரத்தில் நிகண்டு முறை தப்பாதப்பா
சகலதுறைக்காதி யென்ற வழலை மார்க்கம்
பாத்திரம் என்றெனை யழைத்து மூலநாயர்
பக்குவத்தில் கைக்கொடுத்த பரிசிதாகும்
கோத்திரத்தில் சிவயோக முனிவர்கேளு
கூறுகிறேன் கோரக்கர் மறைப்பைத்தானே (18)

மறைப்பதற்குத் துறைதோறும் பீசம் தன்னை
மாட்டாமல் மறைத்து வைத்தார் மைந்தா பாரு
உறைப்பதற்கு அகத்தியர் முன்னூற்றில்சொன்ன
ஒப்பில்லா பீசத்தை முறையாய்ச் செய்து
இறைப்பதற்கு துறைதோறும் இதுவே மாட்டு
இல்லாட்டால் ரசம் எழும்பி ஏகும் ஏகும்
விறைப்பதற்கு சூதத்தைச் சமனாய்க் கூட்டி
வெண்கண்டர் உரம் பூரம் வீரம் சூட்டே. (19)

கூட்டியே வண்டோடு வெண்ணீராலே
குமரவேப் பூசினார் மண்டலத்தில்
நீட்டியே குருவாகும் ரவியிலப்பா
நிலைத்தகுரு புனுகோடு மத்தித்தப்பா
காட்டியே நவலோகம் தடவிக் காய்ச்ச
கனகமாம் கோரக்கர் கண்ட மார்க்கம்
பூட்டியே இன்னுமோர் மறைப்பைக் கேளு
பொறிவெண்பா மூவெட்டாயிரம் சொன்னாரே (20)

மூவெட்டாயிரம் அதனில் துறையோ கோடி
முறைகோடி துறைகளெல்லாம் ரசக்கட்டாகும்
பாவெட்டாய் சூடோரி வித்தை மறைத்துச் சொன்னார்
பகரக்கேள் தாளகம் ஓரைந்தும் கூட்டு
மேவெட்டாய் வெள்ளை யிரண்டரைதான் கூட்டு
வெடியுப்பும் பூனீரும் வகைக் கொவ்வொன்றாகும்
கூவட்டாய் காரம் அரை பொடித்துக் கூட்டி
கொள்கியே எருக்கம்பால் குமிறவாரே (21)

வாரத்தில் ஏழுநாள் ரவியில் வைத்துக்குப்பி
வாயடைத்து வாலுகை வைத்தாறு ஜாமம்
பார்த்து முத்தி யெரித்தெடுக்கப் பதங்கம் ஏறும்
பத்துக் கொன்றிடு இறங்கும் காரம் வீரம்
சாற்றரிய சூடோறி யிதாம் சரக்குக்கெல்லாம்
தடவியிதை வாட்டியே உருக்கிப்பாரு
கோர்த்த ரசம் முதலாக மணிபோலக் கட்டும்
சூடோரி விட்டால் கோரக்கர் நூல் பொய்யாச்சே. (22)

ஆச்சப்பா மச்சமுனி மறைப்பைக் கேளு
அறுபத்து நாலுவகைச் சரக்கு வைப்பில்
ஓச்சப்பா அரைப் பெரிப்பு முறைகளெல்லாம்
ஒளித்து வைத்தார் நந்தி யெண்ணாயிரத்தைப் பாத்து
பாச்சப்பா சரக்கு வைப்பில் பலிக்கும் பாரு
பரமான குரு முறையில் வீரக்கட்டை
ஏச்சப்பா சொல்லாமல் வீரம் என்றார்
எடுத்த செயவீரம் விட்டால் எல்லாம் பொய்யே (23)

பொய்போகா அண்டத்தில் கோஜ பீசம்
போட்டுமே ரவியில் வைக்க மெழுகுமாகும்
மெய்போகா வீரத்தில் மெழுகுபூசி விளக்கினில்
வாட்டிடவே வச்சிரம் போலக் கட்டும்
கைபோக துறைதோறும் மருவ வீரத்தைக்
கலங்காத ஏமம் என்ற தகட்டால் பூசி
வய்போகப் புடம் இடவே பீஜம் நீரும்
வாலைரசம் இவ்விடைக்கு மாட்டிடாயே. (24)

மாட்டியே புடம்போடக் குருவும் ஆகும்
மச்சமுனி நூல்படியே மாட்டு லோகம்
கூட்டியே ஐம்பதுக்கு ஒன்றுதானும்
கொடுத்திருக்க வயதுமோ ஈரெட்டாகும்
ஊட்டியே வாசமுனி மறைப்பைக் கேளு
ஒருவருக்கும் சொல்லாதே உண்மை நூலில்
காட்டியே சாரணையை மறைத்தாரப்பா
கனகம் முதலாக் குரு இடவும் கட்டவாறே. (25)

வாறான இரும்புக்கும் நாகத்துக்கும்
மாட்டவே சரிசூதம் அண்டம் சாரம்
கூறாக அரைத்து நீராலலம்பிக்
கொட்டிடு கூரத்தை யதில் ரசமாய்ப் போகும்
நாறான தொந்தத்தில் பீசம் கூட்ட
நொடிக்குமுன்னே மணியாகும் உருக்கிப் போடு
நீராலே சாரணைகளில்லாச் சூதம்
நீராலும் கட்டாது நெருப்பில் போமே. (26)

போகாத ஏமரச நாகந் தன்னைப்
போட்டிடவே நவலோகம் தங்கம் ஆகும்
சாகாத பிரம்மமுனி ஆயிரத்தில்
சகலதுறைக் காதியென்ற வழலைப் போக்கில்
சோகாத பூக்குருவை மறைத்துச் சொன்னார்
சொல்லாதே ஆருக்கும் சொல்லக் கேளு
வேகாத எழுகாய்ச்சல் பூ நீருப்பு
விளங்கவே படியெட்டு கல் நீருமே (27)

நீராகத் திரண்டமரி படி யீரெட்டாம்
நிலையேழாம் காய்ச்சல் உப்பு படி ஒன்றாகும்
கூறாகக் கலக்கியே கடைய மத்தால்
குமிளிக்கும் நுரையெல்லாம் ஒன்றில் வாங்கி
ஆறான ரவியில் வைக்கச் சுன்னம் ஆகும்
அம்மம்மோ வெகுசுருக்கு அறிய மாட்டார்
சீறான அண்டசலத் தேழுநாள் தோய்த்து
தினகரனில் போட்டிடவே ஜெயமாம் நீரே. (28)

செயமான வழலைப்படா சகல நூலுக்கும்
சிறப்பத ...... மனதுள் கொள்ளே
நயமான இடைக்காடர் மறைப்பைக் கேளு
நாதம் ரசம் செம்பு சுத்தி மறைத்தாரப்பா
அயமான சுத்திமுறை அறையக் கேளு
அப்பிரகம் அருக்கம்பால் புடம்தான் நூறு
பயமான அண்டத்தின் நீரால் ஆட்டிப்
பாய்ச்சியே புடம்போடச் சுன்னம் ஆகும். (29)

சுன்னமென்ற துரு சொன்னப் பிரகமும் நாலு
துடியாகப் பால் புடத்தில் சுன்னம் ஆகும்
கன்னமென்ற செயசாரம் இரண்டு அண்டக்
கடு நீரு அரை இணங்கன் கால்தான் போடு
பன்னமென்ற எருக்கம்பால் புடத்தைப் போட்டு
பனியில் வைக்க செயநீராம் நாகம் செம்பு
வன்னமென்ற தரம் மூவேழுருக்கி வார்க்க
மகத்தான சுத்தியது மனதுள் கொள்ளே. (30)

செய்யவே பச்சோடுங் குணமே ஆனில்
சில தடைச்சு மூச்சு வரும் தளர்ச்சி காணும்
அய்யய்யோ அபயமிடு அசைய ஒண்ணாது
அடைத்துவிடும் மலஞ்சலங்கள் சிறுத்துக் காணும்
தைய்யவே குளிருடனே சரீரமெல்லாம் நோகும்
சடலமெங்கும் அக்கினிபோல் வேர்வை காணும்
பைய்யவே பச்சோடுக் குணமே கண்டுப்
பிரிவாகத் தீருவதற்கு மருந்து கேளே. (31)

மருந்துதான் சேர்ப்பதற்கு வயனம் கேளும்
வளர்நாறு கரந்தையோடு முடக்கொத்தானும்
பொருந்துங் கரிப்பானுடனே விளிவிச் சாரும்
புகழான ஆவின் கோமியம் சமனதாக
அருந்துகிழாம் பழச்சாறும் அல்லிதழ்தான்
அடவாகக் கலக்கியே பிழிந்து கொண்டு
திருந்தவே சிறுப்பதாய் உள்ளுக்குண்ணும்
திரேகம் யெல்லாம் துவளையிடச் செயமாம் பாரே. (32)

பார்த்திடவே பார்வையுட சூட்சங் கேளும்
பாசமாய் உடம்புலர்ந்துங் காசநோய் போலாஞ்
சாத்தியமாய் நாவுலரு மயிருமல் காணும்
சன்னியது காயாத சுவாசம் போலே
வேத்துருவம் மூச்சை முட்டி அடைக்குந் தொண்டை
வேகமுடன் பழமையது பேசொட்டாது
தீர்த்திடுவாய் யிதுதீரத் தீட்க்ஷை கேளும்
தியானமாய் முடக்கத்தான் தன்னை வாங்கே. (33)

வாங்கிடுவாய் நடைபாகல் குப்பைமேனி
வகையான யிலைக்கள்ளி சின்னிச்சாறும்
ஓங்கியதோர் ஆவின்பால் ஆவின் நீரும்
ஊறுதியுள்ள ஆவின் நெய் வகைவகைப்படிதான் காலே
தீங்கில்லாப் பழச்சாறும் அந்தவிதம் சேரவே
கலக்கி ஒன்றாய் வைத்துக் கொண்டு
நீங்கவே துவாலைபோடு மூன்றுநாள் தான்
திறமாக உள்ளுக்கும் சிட்சை சொல்வோம் இன்னங்கேளே. (34)

(இரண்டு பாடல் இல்லை)

காலாங்கி நாதர் மறைப்பு முற்றும்.

காலாங்கி நாதர் கற்பவிதி சூத்திரம் – 82

பூரணமாய் நின்ற திருமூலர் பாதம்
புத்தியுடன் மனதில் வைத்துப் பூசை பண்ணி
காரணமாய்க் கமலரசம் பதாதா கொண்டு
கற்பவிதி சூத்திரத்தைக் கனிவதாக்கு
தாரணையாய் நின்றதிரு வாசியேறி
சகலத்துக் கியான மதில் சார்ந்து கொண்டு
ஓர் மொழியாய் உலகமதில் காராய நின்று
உதகசிவ சக்திக் கணபதி காப்பாமே. (1)

பதியான பரிதலத்தில் பணிந்து நின்று
பார்க்கையிலே திருமுலர் பாதங் கண்டு
கெதியான மோட்சமென நிற்கும் போது
கேசரத்தில் மனோன்மணியாள் கவடை திறந்து
விதியான அமைத்த விதி யெழுத்துங் காட்டி
வீடான நவக்கிரகம் விவரம் சொல்லி
மதியான தவங்காட்டி ரவியுஞ் சொல்லி
மார்க்கமுடன் வாசியுடன் வழி சொன்னாரே. (2)

சொன்னாரே மூலமுதல் ஆறாதாரம்
சுருதி முடியான தொரு மேலாதாரம்
கண்ணான நடுமனையாம் கமல பீடம்
கருணைவளர் பூரணமாம் மவுனபீடம்
முன்னோர்கள் அறிந்து சிவயோகஞ் செய்த
முத்தி தீரு முக்கோண ரவியின் வீடு
விண்ணான வீடறிந்து கண்டு கொண்டு
மேலான அம்பரத்தைக் கண்டேன் பாரே. (3)

கண்டு மனங் கொண்டு கெதிரவிதங் கண்டு
காரணமாய் திருமூலர் கருணை கூர்ந்து
அண்டர் பதங் கண்ட காலாங்கி யென்றும்
அருளைத்து திசதீட்சை அருள் கனிந்து
மண்டலங்கள் மூன்றினுட வழியுஞ் சொல்லி
மார்க்கமுடன் வாசியுட வழியுஞ் சொல்லி
விண்டதொரு மந்திரத்தின் விபரஞ் சொல்லி
மேலான கரு விபரம் விளம்பினாரே. (4)

விளம்பினார் கற்பமொடு வசிய மாற்கம்
வேதாந்த அஞ்சனமும் நாதப் போக்கும்
றுளம்பியதோர் மனந் தெளிய ஞானப் போக்கும்
குருவருளை கருவருளை குன்றிப் போக்கும்
நலம்பெறவே வாசியுட கருவுஞ் சொல்லி
நாலான பூரணமும் நடந்து காட்டி
கிளம்பியதோர் கெவுனமதின் கிருகை சொல்லி
கீழ் மேலாய் நின்றதொரு கெதி சொன்னாரே. (5)

சொன்னதொரு வகையறிந்து மூலம் பார்த்து
சுடரான முச்சுடரில் நின்று தேறி
கண்ணறிந்து விண்ணான சுழினைக் கேகி
காலமறிந்து மேலானக் கலையில் சென்று
முன்னான நடுமனையாம் ரவியின் வீட்டில்
முடங்கி நின்ற காலெடுத்து மேலதாக
விண்ணான கேசரத்தில் நின்று அந்த
வேதாந்த மனோன்மணியைக் கண்டேன் பாரே. (6)

பாரென்று நாமுரைக்க இன்னூல் தன்னைப்
பார்த்தவர்க்கு கெதிமோட்சம் பதி உண்டாக்கும்
கூரென்று குருமொழியைக் கேட்டு மைந்தா
குவலயத்தில் பொருள் தெரியக் கூறுகின்றோம்.
சீரென்ற வாசியிலே மௌனம் வைத்து
திறமாக யிந்நூலை எடுத்துப் பாரு
யாரென்று மனத்தை மெள்ள வயமேப் பண்ணி
ஆசானைப் பத்தியல்லோ அறிந்து பாரே. (7)

அறியப்பா மூவர்களெல்லாம் வெளியானும்
அறிந்த மட்டும் சொல்லுகிறேன் அய்யாகேளு
குறியப்பா நாதமதை விந்தால் கட்டி
கடுரு தியாக வென்று கொண்டாயாகில்
சரியப்பா வாசியது நிலை நின்றாடும்
சதாகோடி மந்திரமும் தானே சித்தி
பரியப்பா நேரிதமாய்க்குள் தீபங் காணும்
பாதாதி கேசமும் தன்னைப் பாரே. (8)

தன்னைப் பார்த் தரிவற்று அமுர்த பற்பம்
சங்கையுடன் சொல்லுகிகிறேன் அங்கமாக
கண்ணைத் தானறிந்து மனைக்கு மனையில் நின்று
கதிர் மதியும் சுழினையது மூன்றுங் கூட்டி
உன்னைத் தானறிந்து பழச்சாத்தாலாட்டி
உருட்டியதை ரவிதனிலே உலர்த்தி மைந்தா
விண்ணைத்தான் நோக்கி ஒரு புடத்தைப் போடு
விரிந்து மலர் பூவதுபோலச் சுண்ணமாச்சே. (9)

ஆச்சப்பா இன்னமொரு கற்பஞ் சொல்வேன்
ஆதியென்ற ரவி மதியும் சுழினைக் கூட்டி
பேச்சப்பா பேசாதே விந்து தன்னால்
பலமாக அரைத்து ஒரு வட்டுப்பண்ணி
காச்சப்பா ரவிதனிலே நன்றாய்க் காய்ச்சி
கைமுறையாய்ப் புடம்போட்டு எடுத்துப் பார்த்தால்
மூச்சப்பா தானொடுங்கி நீறி நல்ல
முகில் பிரிந்த மலரது போல் பற்பமாச்சே. (10)

பற்பமோடு சுண்ணமதைச் செய்து கொண்டு
பாலகனே பரணிதனில் அடக்கம் பண்ணி
கற்பமென்று அண்டரசம் கொள்ளும் போது
கருவான பற்பமொடு சுண்ணம் ரெண்டு
உற்பனமாய் பணவெடைதான் உள்ளே கொண்டால்
உருதியுள்ள தேகமடா கெட்டி கெட்டி
அற்பமென்று நினையாமல் அந்தி சந்தி
அண்டரசம் தன்னுடனே கொண்டு தேரே. (11)

கொண்டு நிதம் தேர்வதால் மைந்தா கேளு
குருவான மூலமது பிரகாசித்து
நின்றதொரு வாசியது மூலத்தேகி
நிர்மலமாம் புருவநடு கமலமீதில்
சென்றுமிக கற்பூரத் தேகத் தேகி
சிவசிவா அத்தீப மச்சுடர்தான் மைந்தா
அண்டர் பதந் தெரிவதற்கு மூலத்தேகு
ஆனந்த மூலமது சோதியாமே. (12)

ஆமப்பா மந்திரத்தின் சித்து கேளு
ஆதியெள்ற திருமூலர் அருளினாலே
ஓமப்பா ஆகாச பஞ்சாக்ஷரத்தைக் கேளு
உறுதியுடன் ஓம் சிவ அரியென்று உறுதியாக
தாமப்பா அய்யுங் கிலியும் சவ்வென்றோத
தயவாக எட்டெழுத்தும் சித்தியாச்சு
நாமப்பா முன்னிலையாய் வாசி கொண்டு
நன்மையுடன் எட்டெழுத்து உருவே செய்யே. (13)

உருவெரு வகையது சொல்லக் கேளு
உறுதியுடன் ஐந்தெழுத்தும் மனதில் வைத்து
திருவெரு மூன்றெழுத்தை ஓது சிவ சிவா
வாசியது தீர்க்கம் வீட்டில்
இருவான ஐந்தெழுத்தும் சிவமதாகும்
கருணையுள்ள மூன்றெழுத்தும் சக்தியாகும்
பருவமுள்ள ஐந்தெழுத்தும் தேகமாச்சு
பாலகனே மூன்றெழுத்தும் உயிருமாச்சே. (14)

உயிரான மூன்றெழுத்தும் செபிக்கும் போது
ஓங்காரம் முன்னேவைத்து உறுதியாக
தைரியமாய் மனதுறுதி கொண்டு மைந்தா
சார்வான புருவநடுச் சுழினை நோக்கி
---- திகை தவமும் மனதாகி
காலான வாசியை நீகமலத்தேத்தி
சைதன்யமாகவே நீ உருவே செய்தால்
சங்கையுடன் அஷ்டகர்மம் சித்தியாமே. (15)

சித்தியுள்ள அஷ்டகர்மம் செய்யக்கேளு
　　சிவாயகுரு திருமூலர் பாதம் போற்றி
முக்தியுடன் அங்குலியும் அயனென்றேதான்
　　மூர்க்கமுடன் மசி மசியென்று உருவே செய்தால்
பக்தியுடன் மாரணத்துக்கு உயிருமாச்சே
　　பதிவான வாசியை நீ மூலத்தேத்தி
சுத்தமுடன் புருவநடுக் கமலமீதில்
　　தூண்டாத தீபமதை தொழுது போற்றே. (16)

போற்றியே பூதிதன்னை கையில் வாங்கி
　　புத்தியுடன் ரேசக பூரகமும் பண்ணி
பக்தியென்ற கும்பகத்தில் நின்று கொண்டு
　　பதிவாகச் சத்குருவின் பெயரைச் சொல்லி
கரத்தில் நன்றாய் ரேசகித்து ஊதிப்போட்டால்
　　கைமேலாய் நின்றிடும் மாரணந்தான் மைந்தா
தேத்தியே இம்முறையை வெளிவிடாதே
　　தெளிந்த மனதறிவாலே திரமாய்ப் பாரே (17)

பாரென்ற குருமொழியை பெற்றுக்கொண்டு
　　பாங்குடனே கற்பமுண்டு கமலத்தேறு
நேரென்ற சாத்திரத்தை மனதில் கொண்டு
　　நிசமான வாசியென்றே குளிகை கட்டி
ஊரென்ற நடுமனையில் அக்குதிரை போட்டு
　　உறுதியுடன் ஆதாரமூலம் பாதுகாரென்று
வாசியினால் சிவயோகத்தில் கருத்து வைத்து
　　வலமான மாரணத்தைக் கருவாய்ப் பாரே. (18)

பாரப்பா மாரணத்தின் பதிவு சொன்னேன்
　　பதிவாக பேதனத்தைப் பகரக் கேளு
நேரப்பா நின்ற நிலை பெற்றுக் கொண்டு
　　நிஜமாகக் கும்பகத்தில் மனதை வைத்து
சேரப்பா சவ்வுங் கிலியும் அய்யென்றேதான்
　　செம்மையுடன் நசிநசி யென்று உருவே செய்தால்
காரப்பா கருத்துரவே நின்றாயாகில்
　　கண்டதெல்லாம் பேதனமாய்க் காணலாமே. (19)

ஆமப்பா பேதனந்தான் என்னவென்றால்
அப்பனே சொல்லுகிறேன் அறிவாய்க்கேளு
நாமப்பா வென்று அகங்கொண்டு மீறி
நாட்டமுடன் இருந்தவரை வேறுகூராக்கும்
காமப்பா கொண்டு வெறிபிடித்த பேர்க்கு
கருதியுடன் பேதனத்தைக் கருதினாற் கால்
தாமப்பா தன்னறிவாய் நின்று பெயரை
க்ஷணத்திலே பேதலிக்குமத் தன்மை தானே. (20)

தானென்ன பேதனத்தைச் சொன்னேன் மைந்தா
சார்வான மோகனத்தைச் சாத்தக் கேளு
கோனென்ற திருமூலர் கடாக்ஷத்தினாலே
குணமாக ஒம்கிலிசவ்வென்றே தான்
வானென்ற வசிவசியென்று உருவே செய்தால்
வரிசையுடன் மோகனமாம் உலகமெல்லாம்
தேனென்ற மாதுருதி கொள்வாளய்யா
செம்மையுள்ள மோகனத்தின் செயலைப்பாரே. (21)

பாரப்பா மோகனந்தான் என்னவென்றால்
பக்தியுடன் இருக்குமப்போதில் மைந்தா
நேரப்பா உன் சமூகம்கண்ட பேர்கள்
நிச்சயமாய் உனது பாதம் பணிவாரய்யா
காரப்பா உன்னுடைய கரத்தினாலே
கருணையுடன் விபூதியை நீ கடாக்ஷித்தால்
வீரப்பா கொண்டதொரு வியாதியெல்லாம்
விட்டகன்று போகுமடா விண்ணைநோக்கே (22)

நோக்குவது பூரணத்தை நோக்க வேண்டும்
உண்மையுள்ள வாசியிலே நிலைக்க வேண்டும்
தாக்குவது வாசியினால் ஆறாதாரம்
தயவான மூலமடா மேலாதாரம்
பார்க்கு மனக் கண்ணாலே முக்கோணத்தில்
பாலகனே ரவியொளியை நன்றாய்ப் பாரு
தீர்க்கமுடன் பார்த்ததினால் என்ன சொல்வேன்
சிவசிவா கர்ப்பூர தேகந் தானே. (23)

தானென்ற மோகனத்தைச் சொன்னேன் மைந்தா
சார்வான உச்சாடனத்தைச் சாத்தக் கேளு
கோனென்ற குருவருளால் விண்ணை நோக்கி
குருவான நவக்கிரகந் தன்னைப் பார்த்து
தேனென்று அனுக்கிரக வீட்டில் சென்று
சிவாயஓம் ஐயுங் கிலி என்றேதான்
ஊனென்ற வங்கு இங்கு சேர்த்து மைந்தா
உறுதியுடன் செபிக்க உச்சாடனமுமாமே. (24)

ஆமப்பா உச்சாடனந்தான் என்னவென்றால்
அகத்தில் நின்ற நோய்களெல்லாம் அகலப்பண்ணும்
நாமப்பா சொல்லுகிறோம் பேய் பூதமெல்லாம்
நலமான உச்சாடனத்தில் மாண்டுபோகும்.
தாமப்பா தன்னிலையில் மனதை வைத்து
தன்மையுடன் வாசியில் நீர் சார்ந்து கொண்டால்
ஓமப்பா புருவநடுக் கமலந் தன்னில்
உன் ரூபம் விளக்கொளிபோல் உறுதியாமே. (25)

உறுதியுள்ள உச்சாடனத்தைச் சொன்னேன் மைந்தா
உத்தமனே வசீகரத்தின் உறுதிகேளு
பருதிமதி சுடர்தனை சுழினைக் கேத்தி
பாலகனே அங்கிலி ஓம் வா வென்றாக்கால்
சுருதியுடன் சகல செந்தும் வசியமாகும்
சுத்தமுடன் தேவரிஷி வசியமாகும்
கருதுகிற மந்திரமும் வசியமாகும்
காலனென்ற யமதூதாள் வசியமாமே. (26)

ஆமப்பா வசீகரத்தைச் சொன்னேன் மைந்தா
ஆகி வசனத்தினுட அருமை கேளும்
தாமப்பா தன்னிலையில் மைந்தா கேளு
தண்மையுடன் வாசிமலர் சாத்திக் கொண்டு
நாமப்பா வென்ற அகம் போக்கும் மைந்தா
நாட்டமுடன் ஓம்கிலி சிவாவென்று
ஓமப்பா ஒருமனதாய் உருவே செய்தால்
உத்தமனே கிறுசனந்தான் உண்மை பாரே. (27)

பாரப்பா கிறுசனத்தைப் பகரக் கேளு
பாரவிந்தலை மீதில் பாய்ந்துதானால்
நேரப்பா கிறுசனத்தைக் கண்டபோதே
நீங்காத விஷங்களெல்லாம் நிலைகெட்டோடும்
வீரப்பா கொண்டதொரு சுரமும் தீரும்
வினையான சகலபிணி வெந்து போகும்
காரப்பா தண்ணீரில் கிறுசனத்தை ஓதி
கண்கழுவக் கண்ணில் நின்ற தோஷம் போமே. (28)

தோஷமென்ற காசமெல்லாம் ஓடும் மைந்தா
சுத்தமுள்ள கிறுசனத்தின் சுருக்கினாலே
நேசமென்ற வித்துவேசனத்தைச் சொல்வேன்
நிஜமான திருமூலர் ரேசத்தாலே
வாசமென்ற புருவமதில் மனதை வைத்து
வகையுடனே ஓம் கிங்கிலி வாவென்றே
பாசமுடன் பதிவாக உருவே செய்தால்
பாலகனே வேசனந்தான் பலிக்கும் பாரே. (29)

தானென்ற வேசனந்தான் என்னவென்றால்
சங்கையுடன் சொல்லு கிறேன் தரணி தன்னில்
ஊனென்ற பெண்களிலே மலடுண்டய்யா
உத்தமனே அந்தரவி தனக்கு மைந்தா
கோனென்ற ... குருவருளால் அயத்த கட்டில்
குருவான விந்தெழுதி விந்துக்குள்ளே
வானென்ற அக்ஷரத்தை எழுதி மைந்தா
மானதமாய்ப் பூசை செய்து வகையைக் கேளே. (30)

வகையென்ற ஸ்திரி புருஷாள் இருவருக்கும்
மார்க்கமுடன் எந்திரத்தை மனதால் மைந்தா
தகையாமல் அமாவாசி தன்னில் கட்டி
சந்தோஷமாக இருங்களென்று சொல்லி
தகையாமல் அனுப்பி விடு கெர்ப்பமுண்டாம்
சிவசிவா பிரும்மரிஷி நீதானய்யா
பகையாகக் கர்ப்பத்தில் நின்ற தோஷம்
போகுமடா வேசனத்தில் பாரு பாரே. (31)

பாரப்பா வேசனத்தைச் சொன்னேன் மைந்தா
பதிவான தம்பனத்தைப் பகரக் கேளு
காரப்பா சுழிமுனையில் மலர்க்கண் சாத்திக்
கமலமென்ற புருவமதில் கனிவாய் நின்று
சாரப்பா ஓம் சிவிகிலியங் கென்று
தன்மையுடன் தானிருந்து உருவே செய்தால்
நேரப்பா தம்பனமும் சித்தியாகும்
நேர்மையுடன் முதுகுபுறம் புடரி பாரே. (32)

பாரப்பா புடரியென்றால் சொல்லக்கேளு
பதிவான புருவமதில் குரு தியாகும்
நேரப்பா உறுதியாம் தம்பனத்தைக் கேளு
நின்ற விஷம் தீருமடா தாதுவெல்லாம்
வீரப்பா கொண்டுநின்ற விந்து கட்டும்
விசையான வாசியது உள்ளே தங்கும்
ஆரப்பா அறிவார்கள் தம்பனத்தின் செய்கை
யாருக்கும் சொல்லாதே அடங்கி நில்லே. (33)

நில்லென்ற அஷ்ட கர்மம் எட்டெட்டுக்கும்
நிஜமான மந்திரந்தான் ஒன்றுகேளு
சொல்லொன்று மில்லாத மௌனபீடம்
சோதியென்ற புருவமடா லாடமீதில்
செல்லென்று வாசியை நீ நிறுத்தி மைந்தா
திருவான நடுமனை ----
மைந்தா குறியான சுழியதிலே
குணமாய்ப் போடே (34)

போட்டதொரு சக்கரத்தை வைத்து நன்றாய்
புனிதமுடன் பூஜித்து மைந்தா கேளு
நாட்டமுடன் உருச்சிலைகள் அடியில் வைக்க
நன்மையுடன் சக்தி வளர்ந்திருக்கும் பாரு
தேட்டமுடன் நவக்கிரகச் சித்துனாலே
சீவகளை உண்டாச்சு தெளிவுமாச்சு
ஆட்டமென்ற ஆட்டமெல்லாம் எட்டெழுத்தும் மைந்தா
ஆதியென்ற அக்ஷரந்தான் மூலமாமே (35)

ஆமப்பா எட்டெழுத்து மூலமாகும்
        ஆதியென்ற மூலமதைச் சொல்லக் கேளு
ஓமப்பா அஞ்செழுத்து சிவமுமாச்சு
        உறுதியுள்ள மூன்றெழுத்து சக்தியாகும்
தாமப்பா சக்திசிவமொன்றாய்க் கூடில்
        சகலகரு மாந்திரீகம் இதுதான் பாரு
காமப்பால் கானற்பால் கொண்டோர்க் கெல்லாம்
        கருவான எட்டெழுத்தும் சித்தியாமே. (36)

சித்தியுள்ள எட்டெழுத்தின் மேலே ஓதி
        சிவசிவா குருபதியில் சேர்த்தாயாகில்
முக்தியுடன் தேகமது சித்தியாகும்
        மூர்க்கமுள்ள வாசியது அகலாதய்யா
புத்தியுடன் ரவிமதியை தினமும் நோக்கி
        பார்மகனே நடுவான சிகார வீட்டில்
நித்தியமும் நினைவாக நேமமானால்
        நின்தேகம் அமுர்தமென்ற தேகமாமே. (37)

ஆமப்பா இன்னமொரு கருவைக் கேளு
        ஆதியென்ற எட்டெழுத்தின் அருமைதன்னை
தாமப்பா தன்னிலையில் மனக்கண் வைத்து
        தயவாக மூன்றெழுத்தை தியானம் பண்ணி
ஓமப்பா பிணியாளர் வந்து நின்றால்
        உத்தமனே பூரித்து உண்மையாக
நாமப்பா பூதியே நீ கடாக்ஷம் செய்தால்
        நாடிநின்ற பிணிகளெல்லாம் நசித்துப் போமே. (38)

போகுமடா போல்அந்த நோய்களெல்லாம்
        புத்தியுடன் பூரணமாயிருந்து கொண்டால்
ஆகுமடா நவக்கிரகஞ் சித்தியாகும்
        ஆதியென்ற மூலமதில் வாசி பூட்டி
பாகுடனே புருவமதில் மலர்க்கண் சாத்தி
        வரிசையுடன் ஓம் கிலியும் சவ்வென்றோத
யேகுமடா பில்லி முதல் விசங்களெல்லாம்
        ஏகாந்த நடுவணையிலிருந்து பாரே. (39)

பாரப்பா சித்துவேகத்தில் தன் சொல்லென
பார்தனிலே மானிடர்க்குப் பகரவென்றால்
தேரப்பா மனதறிவால் தெளிந்து கொண்டு
சிந்தை மனமோன முகத்திரமா நின்று
நேரப்பா நின்றதொரு சல்லிமூலம்
நிஜமான மூலமதே யார்தான் காண்பார்
பேரப்பா பேசாதே மூலந் தன்னை
பெருமையுள்ள மௌனமதாய்ச் சொல்லக்கேளே (40)

கேளப்பா மூலமென்றால் நதிப்பூடு
கெணிதமுள்ள தாமரையின் கொடிதானப்பா
தாளப்பா தாமரை ஓரிதழின் பூடு
தன்னகத்தில் நடுவாகி நின்ற மூலம்
கோளப்பா இல்லாத சல்லி மூலம்
கொடியான மூலமடா முதலாம் மூலம்
ஆளப்பா அந்தரமாய் நின்ற மூலம்
அ டிமுடிக்கும் நடுவான ஆதியாமே. (41)

ஆதியென்ற மூலமதில் பிரம்ம தேவர்
அடங்கினின்ற விஷயந்தான் அறிந்து கொள்ளு
சோதியென்ற குருவருளால் மைந்தா நீயும்
சொல்லாதே தாமரையின் கொடியை வாங்கி
நீதியுடன் நன்மைதான் கீறிக் கொண்டு
நிச்சயமாய் கலசமதில் வேறு மைந்தா
சாதியென்ற ஆவினுட நெய்யிலாட்டி
சவாதுடனே புழுகு பச்சை சரியாய்ச் சேரே. (42)

சேர்த்து நன்றாய் அரைத்து ஒரு குமிழில் வைத்து
சிவசிவா சத்குருவைத் தியானம் பண்ணி
பார்த்திபனே ரேசக பூரகமும் செய்து
பதிவான கும்பகத்தில் மண் சேர்த்து நன்றாய்
கார்த்து நன்றாய் ரவிமதியே சுழினைக் கேத்தி
கருணையுடன் மெச்சி மிக கையில் வாங்கி
சூத்திரமாய் அஞ்சனாதேவி தன்னை
சும சும் சிவம் என்று தொழுது நில்லே. (43)

தொழுதுகொண்டு பணவிடைதான் மையெடுத்து
சோதியென்ற புருவமதில் திலகம் போட்டு
தொழுதுகொண்டு எட்டெழுத்தை உருவே செய்து
சுந்தரம்போல் நீ இருக்கும் பொழுது மைந்தா
தொழுதுஉந்தன் சமூகமதே கண்டோர்க் கெல்லாம்
சூழ்வினையும் பழவினையும் சுத்தமாகும்
தொழுதுநின்ற பிசாசு தலைவிரித்து ஆடும்
தோணாத ஏவல் பில்லி துலைந்து போமே. (44)

போமப்பா சகலபிணி பிசாசுவெல்லாம்
பொருந்திநின்ற மையுன க்குக்கிடைத்தாலே
நாமப்பா சொல்லுகிறோம் வெகு தூரத்தில்
நன்றாகத் தோணுமடா நாட்டம் பாரு
தாமப்பா நவகிரக சித்துனாலே
தன்மையுடன் இன்னமொரு கருவைக் கேளு
நாமப்பா சொன்னமொழி தவறாதய்யா
நடுவான காலாங்கி வாமிதானே. (45)

வாசியென்ற அண்டமடா பேரண்டத்தில்
மார்க்கமுடன் ஞானி அண்டக்கருவே வாங்கி
தேசமென்ற அண்டமதில் ஓட்டில்பூசி
நினைவாக ரவிதனில் காயவைத்து
பாசமென்ற கமலையுட நெய்யால் மைந்தா
பக்தியுடன் தீபமது பதிவாய் வைத்து
வாசமென்ற அண்டமதின் ஓட்டிலே தான்
மையிறக்கி மையெடுத்து வரிசையாக. (46)

வரிசையுடன் மையெடுத்து சவ்வாது கூட்டி
மார்க்கமுடன் ரேசித்து வைத்துக் கொண்டு
வரிசையுடன் சற்குருவைத் தியானம் பண்ணி
வண்மையுட புருவமதில் திலகம் போட்டு
வரிசையுடன் வாசியினால் மூலம் பார்த்து
பக்தியுடன் சிவயோகத்தில் இருந்தாயாகில்
கரிசனமாய் உனதுடைய சமூகங் கண்டால்
கருத்தில் வெகுபயஞ் ஜெனிக்கும் கருவைப் பாரே. (47)

பாரப்பா கர்ப்பவிதி ஒன்று கேளு
புத்தியுள்ள கண்மணியே பதிவாய் நீயும்
யாரப்பா அறிவார்கள் அண்டங்களை
ஆதியென்ற ஞானியடா அண்டந்தன்னில்
நேரப்பா நின்ற கருஞானி அண்டம்
நிசமான அண்டமடா முதலாம் வைப்பில்
காரப்பா அகப்பட்ட அண்டம் வாங்கி
கருவாகக் கூட்டவே வகைதான் கேளே (48)

வகையான கைபாகஞ் சொல்லக் கேளு
மார்க்கமுள்ள அமுரியது படிதானொன்று
தகையாத பசுவின் பால் படிதானொன்று
திசையாத இளநீர்தான் படிதானொன்று
தகரான வெண்ணையுடபால் படிதானொன்று
செம்மையுடன் விதுமோன முப்பாண்டத்திலிட்டு
நகையாத கருஞானி அண்டம்தன்னை
நாட்டமுடன் அதில்போட்டு அவித்திட்டாரே. (49)

அவித்திடவே அண்டமெல்லாம் கட்டிப்போகும்
அப்பனே தானெடுத்து வைத்துக் கொண்டு
குவிந்ததொரு அண்டமதின் தோடு போக்கி
குறியொன்று சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
செவித்ததொரு வெள்ளைமஞ்சள் கருவிரண்டும்
செம்மையுடன் வெவ்வேறே யத்தனமாக
தவித்துமிக வாடாதே பீங்கான் தன்னில்
சாதகமாய் வைத்து மறுசெய்தி கேளே. (50)

செய்தியென்ன மலைநடுகணை வாங்கி நன்றாய்
செம்மையுடன் பீங்கானொன்றின் கருவில் விட்டு
ஆதியென்ற ரவிமுகத்தில் நவனாள் வைத்து
அப்பனே தானெடுத்து பார்த்தாயாகில்
பேதியாதே யிருக்கும் சோதி போலே
பலமான யுக்தியினால் பேதனம் பண்ணி
சோதியென்று சத்குருவைத் தொழுது போற்றி
துருவமென்ற பதிதனிலே இருந்துகொள்ளே. (51)

கொள்ளுகிற விதம் என்ன வென்றால் மைந்தா
குணமாக உதயாதி தன்னிலே தான்
நல்லுறவாய் வெள்ளையென்ற கருவிலேதான்
நன்மையுடன் பணவிடைதான் எடுத்துக் கொண்டு
உள்ளுறவாய்க் கெண்டதின்மேல் மைந்தாகேளு
உண்டையுடன் மாலையிலே சொல்லக்கேளு
சொல்லுகிறேன் மஞ்சளென்ற கருவிலேதான்
துப்புரவாய் பணவிடைதானெடுத்துக் கொள்ளே (52)

எடுத்துநிதம் அந்தி சந்தி கொண்டால் மைந்தா
ஏகாந்த தேகமது இருகிக் கட்டும்
தொழுதுநின்ற வாசியது அடங்காதய்யா
தொடுகுறியில் தீபமது துலங்கும் பாரு
அடுத்து நின்ற விந்துவது ஒடுங்கிப் போகும்
ஆனந்தமதி அமுர்தம் அகுவிப்பாயும்
கடுத்து நின்ற காலனவன் விலகிப் போவான்
கைலாசத் தேகமாய் இருக்கும் பாரே (53)

இருக்கின்ற வெள்ளை மஞ்சள் கருவிரண்டும்
யேகாந்த நாதவிந்துயென்றும் பேராம்
உருக்கமுடன் தினந்தோறும் உண்டு வந்தால்
உறுதியென்ன தேகம் வச்சிர காயமாகும்
பெருக்கமுள்ள நாதவிந்தாலெ டுத்ததேகம்
பேசாதே நாதவிந்தால் கெட்டுப்போச்சு ஊதி
கருத்து மனது ருமையாகக் கொண்டால்
பிரமான பஞ்சாக்கரந்தான் தீர்க்கமாமே. (54)

தீர்க்கமுள்ள மூலமடா ஆறாதாரம்
திருவான நவக்கிரகமான தேகம்
மார்க்கமுள்ள நவக்கிரகந் தனக்கு மைந்தா
மகத்தான அறக்குறகந்தம் ஆதியாகும்
மூர்க்கமுள்ள அதீதமடா சோதி சோதி
முனையான சுழினையடா தீபவீடு
ஏர்க்கையுடன் அத்தீப வீட்டிலே தான்
இருக்குதடா மதியமுர்தம் இருந்து கொள்ளே. (55)

இருந்து கொண்டு வாசியினால் மூலம் பார்த்து
எழுந்ததொரு வாசியானால் புருவத்தேகி
அருந்தவமாய் முக்கண்ணைக் கண்டு போற்றி
ஆதியென்ற நவக்கிரகப் பூசை பண்ணி
திருந்தியத்தோர் பூசையினால் குருவைக் கண்டு
சிவசிவ அடிமுடியோ தொழுதேனப்போ
வருந்திமிகக் கேட்டதினால் மூலநாயன்
மார்க்கமுடன் நாதவிந்து யென்றார் பாரே. (56)

பாரப்பா நாதவிந்து அண்டமாச்சு
பதிவான அண்டமடா பிண்டம் பிண்டம்
நேரப்பா அண்ட பிண்டம் ஒன்றாய்க் கூடி
நிலைத்ததொரு முட்டையென்ற பேருமாச்சு
காரப்பா அண்டமென்ற முட்டைதன்னை
கருக் குருவாய் கண்டு நிதம் கொண்டால்
ஆரப்பா உனக்கீடு சொல்லப் போமோ
அண்டரண்ட பதங் கடந்த சித்தராமே. (57)

சித்தரென்ற சிவதவத்துக்கு உறுதியென்ன
சிவசிவா சிவயோகமே யாகும்
முக்திதனக் குறுதியாக யான் சொன்ன
மூர்க்கமுள்ள கற்பமடா அண்டங்களை
பக்தியுடன் அண்டமென்ற கற்பங் கொண்டால்
பாலகனே நவக்கிரகம் பதிவாய் நிற்கும்
சுத்தமுடன் நவக்கிரகம் பதிவாய் நின்றால்
தோணுமடா அனுக்கிரகம் ஜோதிதானே. (58)

ஜோதியென்ற ஜெகத்ஜோதி ஜோதி
துருவமென்ற புருவநடுக் கமலமீதில்
ஆதியென்ற விந்துவடா கமலத்துள்ளே
அடங்கி நின்ற போதமதை என்ன சொல்வேன்
சாதியென்ற ... க்குறுதியான
சார்வான வீதியடா ஆவி ஆவி
நீதியுட ஆவியடா பிராணனாச்சு
நிஜமான பிராணனடா நாதவிந்தே (59)

விந்தான நாதவிந்து ஒன்றாகக் கூடி
மேலான நவமணி போலத் திரண்டுதய்யா
சந்தான நவமணியே மைந்தா கேளு
தரணியில் காண்பவர்கள் யாருமில்லை
சிந்தாமல் சிதறாமல் அவ்வாசிதன்னை
தீர்க்க முடன் கட்டி ஒரு மணியாய் வாங்கி
பந்தாரந் தமைத்து ஒரு மணியாய் வைத்து
பக்தியுடன் நவகிரகப் பூசை பண்ணே; (60)

பூசையிலே மனதுறுதியாக வேணும்
புத்தியுடன் அமுர்தரசம் கொள்ள வேணும்
நேசமுடன் வாசியிலே நிற்க வேண்டும்
நிலைத்தாலும் நிர்விகற்ப சமாதி வேணும்
வாசமுடன் சமாதியிலே நிலைத்தால் மைந்தா
மணிநாத சிலம்போசை கேழ்க்க வேணும்
பாசமுடன் சிலம்போசை கேட்டாலுந்தான்
பக்தி கொண்டு குருபதியில் பதிவாய் நில்லே. (61)

பதிவான பக்தியதுதான் புருவமத்தி
பாலகனே ஆவியது ஒடுங்கும் வீடு
விதியான ஆவியது ஜொலிக்கும்வீடும்
வோதாந்த ருந்திரனார் பதியைப் பார்த்து
கெதியான பதியிது என்றறிந்து கொண்டு
கேள் மகனே அப்பதியில் நாட்டமாக
மதியான ரவிமதியின் செயலினாலே
மார்க்க முடன் இருந்து சிவயோகம் பாரே. (62)

பாரப்பா இன்னமொரு கருவைக் கேளு
பதிவான தாமரையின் கெழங்கை வாங்கி
காரப்பா தேனதிலே ஊறப்போட்டு
கருணையுடன் எட்டாம் நாள் எடுத்து மைந்தா
தேரப்பா தண்ணீரில் கழுவிப் போட்டு
சிவசிவா ரவிதனிலே காயப் போட்டு
நேரப்பா சுழிமுனையில் மனதை வைத்து
நேமமுடன் குழையளவாய் நறுக்கிக் கொள்ளே. (63)

நறுக்கி நன்றாய் குளிசமது பண்ணிக் கொண்டு
நாட்டமுடன் நறுக்கினதோர் மூலம் வைத்து
இறுக்கி நன்றாய் நவகோணந் தன்னில் வைத்து
இன்பமுடன் சிவதவங்கள் செய்து கொண்டு
பொருத்தமுடன் அக்குளிசம் எடுத்து மைந்தா
பலமான மௌனமதைத் தியானம் பண்ணி
உருக்க முடன் சாம்பிராணித் தூபங் காட்டி
உண்மையுடன் வலதுகையில் அணிந்து கொள்ளே. (64)

அணிந்து கொண்டு பூரணமாயிருந்து மைந்தா
அன்புடனே குருபரனைத் தியானம் பண்ணி
கனிந்து உந்தன் கரமதினால் மேலே தொட்டால்
கடந்ததோர் விஷசுரமும் காணாதோடும்
துணிந்து வரும் பிசாசுகளை உந்தன் கையால்
தூரப்போ வென்று சொன்னால் ஓடிப்போமே
பணிந்து உந்தன் பாதமதை மண்டோர்க்கய்யா
பலபிணியும் விஷசுரமும் பாழாய்ப் போமே. (65)

பாழான முப்பாழை அறியவேண்டும்
பரிதிமதி சுடரொளியே பார்க்க வேண்டும்
காலான வாசியில் சென்று ஏற வேண்டும்
கர்ப்பூரத் தீபதேகங் காண வேண்டும்
மேலான மதியமுர்தம் கொள்ள வேண்டும்
வேதாந்த சாஸ்திரங்களைப் பார்க்க வேண்டும்
நூலான நூல்முறைகள் பார்த்தாலுந்தான்
நுணுக்கமுடன்அறிவு பூரணமாய் நில்லே. (66)

நில்லப்பா பூரணமாய் நின்று கொண்டு
நிஜமாக இன்னமொரு கருவைச் சொல்வேன்
சொல்லப்பா ஜாதிக்காய் ஜாதிபத்திரி
திருவான வால்மிளகு கிராம்பு கூட்டி
மெள்ளப்பா இளவருப்பாய்ச் சூரணித்து
விசையான ஆனந்தமூலி வாங்கி
கொள்ளப்பா நெய்யிலே வறுத்துக் கொண்டு
சூரணமாய் பொடிசெய்து வைத்துக் கேளே. (67)

கேளப்பா முன்பொடிக்கி நாலிலொன்று
கிருபையுடன் மூலிகையைக் கூட்டி மைந்தா
கேளப்பா இருபொடியும் ஒன்றாய்க் கூட்டி
கெணிதமுடன் சர்க்கரையும் கொஞ்சம் சேர்த்து
கேளப்பா அதுக்கு ரெட்டி ஒன்றாய்க் கூட்டி
கிருபையுடன் தான் இடிக்கும் போதிலேதான்
கேளப்பா மெழுகுபோல திரண்டு போகும்
கேள்வியென்ன பூரண லேகிய மாச்சே. (68)

ஆச்சப்பா லேகியத்தில் பணவிடைதான் கொண்டு
அருளான உருவமய்யா பார்க்கும் போது
மூச்சப்பா அறிவு பூரணமாய் நின்று
முனையான சுழிமுனையில் வாசி ஏறி
பேச்சப்பா பேசாத வாசியிலே
பெருகி நின்ற தீபமது கண்ணில் காணும்
காச்சப்பா அத்தீபச் சுடரிலே தான்
கிரியினால் தேகமதில் கசடு போச்சே. (69)

போச்சப்பா வாயுவோடு மூலச் சூடு
பொல்லாத நெஞ்செரிவு பொருமல் காந்தல்
நீச்சப்பா நீர்த்தோஷம் கையில் குத்து
நினைவுகெட்ட வயத்துவலி நீங்கிப் போகும்
மூச்சப்பா முன்னிலையாய் அடங்கு வீட்டில்
முக்திதொடு நவக்கிரகம் பூசை செய்தால்
பேச்சப்பா பேசாதே மௌனங்காணும்
பேறான குருபதத்தில் பலமாய் நில்லே. (70)

பலமாக நவக்கிரகப் பூசை பண்ண
பேருலகி லெல்லாரும் உனது வசமாகும்
நலமான நடுமனையாம் முக்கோணத்தில்
சார்ந்து கொண்டு வாசியினால் மூலத்தேகி
நலமான புருவநடுக் கமலமீதில்
நாட்டமுடன் நின்று கெதி கொண்டாயானால்
குலமான நவக்கிரக வீட்டிலே தான்
குருவான ஆதாரம் தோணும் பாரே. (71)

தோணுமடா ஆதார மூலாதாரம்
துருவமென்ற ஓங்கார மேலாதாரம்
காணுமடா கருணைவிழிக் கண்ணால் பாரு
கமலமென்ற ஆயிர விதழ் மலருக்குள்ளே
தேனுடனே அமுர்தரசம் வடியுமப்பா
தெகுட்டாதே நீ இருந்து கொண்டு தேரு
உன்னுடனே உயிர்சேர்ந்து சித்தியாகும்
உத்தமனே பக்தியுடன் உகந்து காணே. (72)

காணப்பா நவகோணந் தன்னை வைத்து
கருணையுடன் மானசமாய் பூசை செய்து
பேணப்பா மூலமதில் கிங்கிலமென
பிலமாக வாசியினால் மூலம் பார்த்தால்
கோணப்பா இருந்த இடம் கண்ணில் காணும்
குருவான திருமூலர் பாதம்
பூணப்பா கண்டமதில் அங்கொன்று ஊணு
புருவமய்யா முக்கண்ணைப் போற்றிக் காரே. (73)

தூரத்து நீ மனதுறுமையாக மைந்தா
கருணை பெற ரேசக பூரகமே செய்து
போற்றிக் கும்பத்தில் நின்று கொண்டு
புத்தியுடன் மனதறிவால் மைந்தா நீயும்
ஆத்துமத்துக் குயிராக நின்ற மூலம்
ஆதார்ச மூலமடா முக்கோணத்தில்
பார்த்திபனே ஓம் கிலீம் சவ்வென்றே தான்
பதிவாகச் ஜொலிக்க அனல் பத்துந்தானே. (74)

தானென்ற அனல்மீறி முதுகு ஓரம்
தான் ஏறி பாதாதி கேச மட்டும்
ஊனென்ற தேக்மெல்லாம் ஜொலிக்கும் பாரு
உறுதி பஞ்சாக்கினியெனவே உறுதிகொண்டு
கோனென்ற நிருபம பாபச்சுழிமேல் நின்று
குருவான பதினோக்கி நின்றாயானால்
வானென்ற அண்டமதில் தீபங்காணும்
மானசமான தீபமதை மகிழ்ந்து நில்லே. (75)

நில்லப்பா அய்யுங் கிலியும் சவ்வென்றேதான்
நேமமுடன் மனதறிவில் நின்றால் மைந்தா
உள்ளப்பா நினைத்த வண்ணம் தெரிசனமுமாகும்
உலகமதில் நடத்தையெல்லாம் உள்ளே காணும்
சொல்லப்பா ஆதாரமூலம் தோன்றும்
சிவசிவா திருநடனம் செவியில் கேளு
வில்லப்பா அந்த ஒலி சிலம்பிலேதான்
வேதாந்த ஓசையடா நாதந்தானே. (76)

தானென்ற நாதவிந்தாலே..... தேகம்
தன்னறிவே தன்னறியாப் பிண்டந்தான்
ஏனென்ற பாண்டமடா நிலையான அக்கினி
விசையில்லா நீர்க்கு முழியான தேகம்
ஊனென்ற ஆசையிலே ரவியே தேய்ந்து
ஊன்றா மதிபோலாகி உருகிக் கெட்டு
பூனென்ற போக்குவரத்து அறியாமல்தான்
புத்தி கெட்ட சேடமதனைப் போற்றுவீரே. (78)

போற்றுவது பூரணத்தால் போற்ற வேணும்
பொருந்துகின்ற நவக்கிரகம் பார்க்க வேணும்
காத்துநின்ற வாசியினால் சென்றேற வேணும்
கர்ப்பூரத் தீபமதைக் காண வேணும்
ஆத்துமத்து நிலையறிந்து கொள்ளவேணும்
அந்தமிலை போன்றவிடம் அறிய வேண்டும்.
பூத்தமலர் வாசனை போல்புருவமதில்
புத்தியுடன் இருந்து பூசை பண்ணே. (78)

பண்ணப்பா பூசை விதி சக்சரந்தான்
பதிவான நவகோண முக்திமோக்ஷம்
கண்ணப்பா மோகன நல்ல புருவ மத்தி
கருவான ரவிமதி சென்றிருக்கும் வீடு
விண்ணப்பா மேலான பிரம்ம வீடு
மேலான வீடதுதான் முப்பாழாகும்.
முன்னப்பா முன்னாகி முன் பின்னான
முக்திதரும் மணிவீடு மோக்ஷ வீடு (79)

வீடான வீடதுதான் மோக்ஷ வீடு
        வேதாந்த அமுர்தரசம் இருக்கும் வீடு
நாடான நவக்கிரகம் பொருந்தும் வீடு
        நாதாந்தத் திருநடனம் ஆடும் வீடு
கூடான வீடறுந்து குடியிருந்த வீடு
        குடியில்லா திருந்த தொரு குருவின் வீடு
மேலான அண்டம் அண்டம் அண்ட வீட்டில்
        விண்ணொளிவு தன்னொளிவு மேவ முற்றே (80)

கடைசிப் பாட்டு சிதைந்துவிட்டது

காலாங்கி நாதர் கற்பவிதி சூத்திரம் முற்றும்

காலாங்கி நாதர் பூஜாவிதி – 85

ஆதியிலே அமைந்த விதியெழுத்துனாலே
அருள் பெருகும் திருமூலர் பாதம் போற்றி
நீதியுடன் பூசைவிதி தன்னை மைந்தா
நேர்மையுடன் கைமுறையாய் பாடுதற்கு
போதமென்னும் ஞான பூரணமே காப்பு
பூரணமாய் நின்ற மனோமணியே காப்பு
சோதியெனுங் கருணைவிழி வரக் கண்ணான
சுந்தரமாய் நின்றகணபதி காப்பாமே. (1)

ஆமப்பா பூசைவிதி மார்க்கந் தன்னை
அன்பு வைத்து கைமுறைகள் அதிகம் சொன்னேன்
ஓமப்பா கைமுறைகள் அதிகம் சொன்னேன்
உண்மையுள்ள பூசையது நுணுக்கமெத்த
வாமப்பா லகிரியினால் சித்தர்கூடி
வந்தார்கள் திருமூலர் பாதந்தன்னில்
சோமப்பா லுண்டுவந்த கெதியைப் பார்த்து
தொழுதுநின்ற காரணமே தென்றார் பாரே. (2)

என்றமொழி தன்னைஅறிந்து சித்தரெல்லாம்
என்குருவே பூசைவிதி முறைகள் எப்படி
அண்டர் பதந் தெரிவதற்குச் சமமாக
அன்புவைத்துச் சொல்லென்று அடி பணிந்தார்
நின்று பாதம் பணிந்தவகை யறிந்து கொண்டு
நேமமுடன் பூசாவிதி சுருக்கமாக
கண்டுகொண்ட வகையறிந்து சொன்னேனப்போ
கயிலாச சித்தரெல்லாம் வணங்கினாரே. (3)

வணக்கமுடன் பூசைவிதி சுருக்கமாக
வகையுடனே சொன்னவகை தன்னைக் கேளு
இணக்கமுடன் மூலமதில் வாசியூட்டி
ஏகாந்த ருத்திரரைக் கண்டு போற்றி
தனக்குறுதியான ரவிமதியைக் கண்டு
சதாசிவ மனோன்மணியைத் தியானம் செய்து
எனக்குறுதி உனதுபதம் தாயேயென்று
ஏகாந்தமாகவே நீ இருந்து கொள்ளே. (4)

இருந்து கொண்டு நவகோணம் நன்றாய்ச் செய்து
ஏகாந்த நவகோணந் தன்னிலே தான்
வருந்தினதோர் அக்ஷரத்தைச் சொல்லக் கேளு
மறுக்காதே அய்யுங் கிலியும் சவ்வென்றேதான்
அருந்தவமாய் சிவாயநம அஞ்சுங் கூட்டி
ஆக அஞ்சும் மூன்றுமடா எட்டு ஆச்சு
விரிந்ததொரு எட்டெழுத்து எண்கோணத்தில்
விபரமுடன் தானெழுதி நடுவே கேளு (5)

கேளப்பா நடுவான முக்கோணத்தில்
கெணிதமுடன் விந்தெழுதி விந்துக்குள்ளே
சூழப்பா ஓங்காரம்...... போட்டு
சுழித்த நடுச் சுழியெழுதி உயிருமாடக்
காரப்பா கட்டான நவகோணந்தான்
கருணையுள்ள நவக்கிரகமென்று போகும்
மேலப்பா நவக்கிரக மேலாகத்தான்
விந்துவென்று வளையமது மூன்று போடே. (6)

போடப்பா முதல்வளையம் இதழ்தானெட்டு
புகழன்னம் குவளையம் பதினாறாகும்
நாட்டப்பா அதின்மேலே இருபத்தேழு
நன்மையுள்ள இதழ் ஐம்பத்தொன்றுமாச்சு
தேடப்பா இதழ் ஐம்பத்தொன்றிலேதான்
திருவான அட்சரத்தை செப்பக் கேளு
சூடப்பா அட்சரந்தான் ஐம்பத்தொன்று மாச்சு
சுத்தமுடன் தானெழுதி இன்னம் கேளே. (7)

கேளடா நாலுவாசல் கோட்டைக் கட்டி
 கிருபையுள்ள பஞ்சகரத்திற் காவலர்
கேளடா அட்சரத்தைத் தியானம் பண்ணி
 சிவகிளை உண்டாக செபமே செய்து
கேளடா சக்கரந்தான் உறுதியாச்சு
 கிருபையுள்ள நவக்கிரகமான வீடு
கேளடா அவ்வீட்டிற் கெதிரேதான்
 கிருபையுள்ள ரசிதமோர்க்கும்பம் வையே (8)

பாரப்பா கும்பமதில் நூலணிந்து
 பக்தியுடன் கங்கை பூரணமாய் விட்டு
தேரப்பா மாங்குலையும் தேங்காய் சாத்தி
 சிவசிவா நாலாயிரமும் சபாதணிந்து
சேரப்பா அக்ஷதையும் அதனில் சாத்தி
 திருவிருந்த கும்பமதை மைந்தா கேளு
நேரப்பா பச்சரி நிறுத்தி மைந்தா
 நேர்மையுள்ள கும்பமதை வைத்துக் கொள்ளே. (9)

கேளப்பா கழஞ்சி தங்கமதைத் தகடாய்தட்டிக்
 கெட்டியாய் அதனிலொரு விந்துபோட்டு
கேளப்பா விந்துவதின் நடுவிலேதான்
 கிருபையுடன் நீங்கா அஞ்சு சுழியுஞ் சாத்தி
கேளப்பா அத்தகட்டைக் கையிலேந்தி
 கிருபையுடன் சிவசிவாவென்று மைந்தா
கேளப்பா கும்பமதில் உள்ளே போட்டு
 கணபதியை மஞ்சளினால் அருகு சாத்தே (11)

சாத்தியதோர் கணபதிக்குச் சந்தனம் புட்பம்
 சாத்தி நன்றாய் கும்பமதன் அருகே வைத்து
மூர்த்திகரமாய் ஆவதற்கு மைந்தா கேளு
 முக்தி தரும் அக்ஷதையும் ஓமென்று சாத்தி
பார்த்திபனே சுழிமுனையில் மனக்கண் வைத்து
 உறுதியுடன் வாசியினால் மூலத் தேகி
ஆத்துமத்துக் குயிரான குருவைப் போற்றி
 அமுர்த ரசவர்க்கமுடன் பால் பழமும் வையே (12)

வையப்பா தாம்பூலம் கமல மீதில்
மார்க்கமுடன் வசீகரமென்று மைந்தா
கையால்தா னெடுத்து முன்னே வைத்து
கருணை பெற அக்ஷதையும் மலர்கள் வாரி
மெய்யப்பா ஓம் சிவ சிவா வென்றேதான்
விருப்பமுடன் அர்ச்சனைகள் செய்து கொண்டு
செய்யப்பா தேங்காயும் பலிகொடுத்து
சிந்தை மனது ஒன்றாக அறிவில் நில்லே. (13)

அறிவான மனதுடனே சிமசிம வென்று
அப்பனே தூபமுடன் தீபங் காட்டி
குறியுடனே உபசாரம் செய்து கொண்டு
குணமாக மணியோசை சங்கினோசை
விரிவான சேகண்டி ஓசை செய்து
மெத்தவமாய் புத்தியுடன் மைந்தா நின்றால்
நெரியான புருவ நடுச் சுழியைப் பார்த்து
நின்றி லங்கும் கற்பூரத் தீபந்தானே. (14)

தானான தீபமோடு சிலம்பினோசை
தன்னகத்தில் காணுமடா உண்மையாக
கோனான பஞ்சகர்த்தர் சித்தியோடு
குணமாக வசனிப்பார் முன்னே நின்று
தேனான அமுர்தரசம் ஈவாள் மைந்தா
செம்மையுடன் அவள் பதத்தைப் பூசை செய்து
வானான தேகமடா முக்தியாக
உறுதியுடன் வாசியினால் மூலம் பாரே. (15)

பாரப்பா வாசியினல் மூலம் பார்த்து
பத்தி கொண்டு ருத்திரனார் பதியிற் சென்று
நேரப்பா பூரணமாய் மலர்க்கண் சாத்தி
நின்றிலங்கு சுழிமுனையை நீ தான் பாரு
மேரப்பா அண்டரண்ட பதங்கள் தானும்
மேன்புறச் சிவயோகத்தில் இருந்து கொண்டு
காரப்பா கண்டமதில் அங்கென்றூணி
கருணையுடன் சடாக்ஷரத்தை அறிவாய் ஓதே (16)

ஓதுவது சடாக்ஷரந்தான் என்ன வென்றால்
        உண்மையுடன் சொல்லுகிறேன் நன்றாய் கேளு
ஓதுவது ஓம் சிவாய நம வென்று
        உண்மையுடன் நூத்தியெட்டு உருவே செய்து
ஓதுவது புருவ நடுக் கமல மீதில்
        உருக்கான வாசிமலர் கலந்து சாற்றி
ஓதுவது பூரணமே தாயே வென்று
        உண்மையுடன் தோத்திரங்கள் உகந்து செய்யே. (17)

உகந்து நின்ற தோத்திரங்கள் செய்தாயாகில்
        உண்மையுள்ள நவக்கிரகங்களும் உறுதியாமே
அகம் தெளிந்து நவக்கிரகம் தன்னில் நின்று
        அன்புடனே நவக்கிரகம் பூசை செய்தால்
ஜெகந்தெளிந்து திருவருளைக் காணலாகும்
        சிவசிவாசிவ பூசைக் கோடியாகும்
முகந் தெளிந்த குருபரனைக் காணலாகும்
        முக்தி யென்ற வாசியினால் யோகம் பாரே. (18)

பாரப்பா சிவயோகத்தில் இருந்து கொண்டு
        பக்தியுடன் நவக்கிரகப் பூசை செய்தால்
நேரப்பா நின்ற அனுக்கிரகந் நோன்றும்
        நினைவாக அனுக்கிரகத்துள்ளே சென்றால்
    ப்பா அண்டர் பதம் தன்னிலே தான்
        மெய்ஞானத் தீபமடா கண்ணில் காணும்
    ப்பா தீபமதை மனக் கண்ணாலே
        கருத்தினாலே சொர்க்க பதம் காணலாமே. (19)

காணலாம் சொர்க்க பதம் என்ன வென்றால்
        கருவான முக்கோண சிங்கார வீடு
தோணவே அவ் வீட்டில் காணவென்றால்
        சுருவமுடன் நவக்கிரகப் பூசை செய்து
பூணவே மூலமதில் வாசி பூட்டிப்
        புத்தியுடன் ரவிமதியைக் கண்டு தேறி
பேணவே அனுக்கிரகம் கண்டாயானால்
        பெரிதான சொர்க்க பதமதுதான் பாரே (20)

பாரான மூலமதைக் காண வேணும்
பதிவான வாசிதனை அறிய வேணும்
நேரான வாசிதனை அறிந்து கொண்டு
நேமமுடன் சிவயோகஞ் செய்ய வேண்டும்
கூரான சாஸ்திரங்கள் பார்க்க வேணும்
குறியான தொருகுறியைக் காக்க வேணும்
பேரான மூலமடா ஆறாதாரம்
பெருமையுள்ள நவகிரகப் பூசை பண்ணே. (21)

பண்ணப்பா நவகிரகப் பூசை தன்னில்
பதிதான மானதமாம் பூசைகேளு
விண்ணப்பா தானோக்கி மலர்க்கண் சாத்தி
மேலான இடதுகையில் விபூதி வைத்து
நண்ணப்பா விபூதியை நீ அரைத்து மைந்தா
நலமான நவரேகை நன்றாய்க்கீறி
முன்னப்பா நடுவான முக்கோணத்தில்
முதலான விந்து ஓங்காரம் போடே. (22)

போடப்பா ஓங்காரம் அதனுள் மைந்தா
பொருந்தி நின்ற சுழியெழுதிப் போதமாக
நாடப்பா அஞ்செழுத்தில் மூன்றுங் கூட்டி
நன்றாக உருச் செபித்து நாட்டமுண்ணி
கூடப்பா வாசியினால் மூலம் பார்த்து
குருவான பதிநோக்கித் தியானம் செய்து
ஊடப்பா வாசிநின்ற இடத்திலே தான்
உண்மையுடன் ரேசகபூரகமும் பண்ணே. (23)

பண்ணப்பா கும்பமதில் மனதை வைத்துப்
பதிவான சுழிமுனையைப் பத்தியாக
நண்ணப்பா குருவருளால் பார்த்தாயாகில்
நடுநின்ற ரூபமடா தோணுவது காணும்
முன்னப்பா நின்றதொரு தீபங் கண்டால்
முக்தியுள்ள பூசையடா மௌன பூசை
விண்ணப்பா நிறைந்த தொரு மௌன பூசை
வேதாந்த மானசமாம் பூசைதானே (24)

தானென்ற மானதமாம் பூசை செய்து
தன்மையுள்ள பூசையை நீ அந்தமாக
கோனென்ற குருவருளால் மெய்யில் பூசி
குணமாகப் பணவெடை உள்ளே கொண்டால்
தானென்ற ஆணவங்கள் அகன்று போகும்
நாதாந்த தேகமது முக்தியாகும்
தேனென்ற அமுர்தரசம் சித்தியாகும்
சிவசிவா சிவயோகத்திலிருந்து பாரே. (25)

பாரப்பா இன்னமொரு கருவைக் கேளு
பரிவான தகட்டில் நவகோணமிட்டு
நேரப்பா நடுவான முக்கோணத்தில்
நிறைந்துநின்ற சுழியெழுதிச் சிகரம் போட்டு
பேரப்பா அஞ்செழுத்தில் மூன்றுங்கூட்டி
பலமாக நூற்றியெட்டு உருவே ஜெபித்து
காரப்பா அத்தகட்டைக் குளிசத்தூட்டி
கருணையுடன் கைதனிலே கட்டிப்பாரே. (26)

கட்டிநன்றாய் விபூதியை நீ பூசினாக்கால்
கலந்துநின்ற ரோகமெல்லாம் காணாதோடும்
இஷ்டமுடன் தேகம் வஜ்ஜிர காயமாகும்
யேகாதி தோஷமல்லாம் போட்டோடும்
சட்டமுள்ள நவகிரகஞ், சார்புநலே
சகலபிணி விஷமுதலாய்த் தானே தீரும்
திட்டமுள்ள நவக்கிரக தேகமாகும்
திருவான அனுக்கிரகம் குருவின் வீடே. (27)

வீடான நவகோணம் இட்டுக்கொண்டு
விபரமுடன் நடுவான முக்கோணத்தில்
சூடான அக்ஷரத்தின் பெருமை கேளு
சுவுரியென்ற காரியத் தகட்டிலே தான்
வாடாமல் தானெழுதி மைந்தா கேளு
வரிசையுடன் எட்டெழுத்தைத் தியானம் பண்ணி
தேடரிந்து சிசுக்களுக்குக் கட்டினாக் கால்
தேகத்தில் நின்ற பலதோஷம் போமே. (28)

போமப்பா இன்னமொரு கருமானங் கேளு
புத்தியுடன் தாம்பூரத் தகட்டிலே தான்
தாமப்பா தன்னிலையைத் தியானம் பண்ணி
சங்கையுடன் கோணமிட்டுக் கொண்டு
ஓமப்பா அக்ஷரந்தான் எட்டெழுத்தை
உறுதியுடன் தானெழுதி நடுக்கோணத்தில்
ஆமப்பா ஓம் அம்சிங் கென்றே தான்
அழுத்தி மிகத் தானெழுதி அந்தம் பாரே. (29)

அந்த மென்ற சுழுமுனையில் மனக் கண்ணாட்டி
அன்பு வைத்து சடாக்ஷரந்தன்னை உருவேசெய்து
சௌந்தர்யமுடன் அத்தகட்டைத் தியானம் பண்ணி
சுருக்காக மானிடர்க்கு கட்டினாக்கால்
பந்தமென்ற மயக்கமோடு பித்தந் தீரும்
பிசாசு முதல் பில்லி சூனியமும் தீரும்
பந்தமுள்ள காசமுதல் சில விஷங்கள்
பார்க்குமடா நவக்கிரகப் பதிவினாலே. (30)

பதிவாக இன்னமொரு கருமானங் கேள்
பரித்தகட்டில் நவகோணம் இட்டுக் கொண்டு
கெதியாக எட்டெழுத்தைச் சுத்திப் போட்டு
கிருபையுள்ள நடுவான முக்கோணத்தில்
விதியான அக்ஷரந்தான் ஓம் ரீங் கென்று
விபரமுடன் தானெழுதி விண்ணை நோக்கி
மதியான ரவிமதியைச் சுழுனைக் கேற்றி
மார்க்கமுடன் சற்குருவைத் தியானம் செய்யே (31)

செய்யப்பா யெந்திரத்தைக் குளிசஞ் செய்து
திருவானப் பெண்களுக்குக் கட்டினாக்கால்
மெய்யப்பா சொல்லுகிறேன் கெர்ப்ப ரோகம்
மெய்யான தேகமாம் வாய்வு தீர்ந்து
கையப்பா உதவுவதுபோல மக்காள் காரிகைக்கு
கெர்ப்பமுண்டாய்க் கண்ணைக் காண்பாள்
பொய்யப்பா போகாது மெய்யே நிற்கும்
புத்தியுடன் நவக்கிரகம் பூசை பண்ணே. (32)

பண்ணுவது இன்னுமொரு கருமானங்கேள்
பார் மகனே வெள்ளியத் தகட்டிலே தான்
தன்னுறுவாய் நின்ற நவகோணமிட்டு
தன்மையுடன் எட்டெழுத்தைச் சுத்திப் போட்டு
கண்ணு மனக் கனிவதனால் முக்கோணத்தில்
கருணையுடன் சிவசிவா ரீங் என்றிட்டு
உண்ணுவது சடாக்ஷரத்தின் உருவே செய்து
உறுதியுடன் மனதறிவால் தியானம் பண்ணே. (33)

பண்ணப்பா குருபரனைத் தியானம் செய்து
பதிவான எந்திரத்தைக் குளிசமாடி
நண்ணப்பா வயல்களிலே அழுத்தினாக் கால்
நன்றாகக் கொளனரி விலகும் பாரு
பெண்ணப்பா திரளாமல் உரு பேதித்தால்
பெண்களுக்கு கட்டினால் நன்மையாகும்
முன்னப்பா நிறைந்த அனுக்கிரகத்தாலே
முக்தி வெகு அதிசயங்கள் இன்னம் கேளே. (34)

இன்னங்கேள் கருமானஞ் சொல்வேனய்யா
ஏகாந்த திருமூலர் கடாக்ஷத்தினாலே
சொன்னமொழி தவறாமல் மனக் கண்ணாலே
சோதியென்ற ரவிமதியை சுழுனைக் கேற்றி
முன்னமே சொன்னதொரு முக்கோணத்தில்
முக்திதரும் வாசியினால் புருவந் தேகி
கண்ணான நவகிரகப் பூசை பண்ணி
கருணையுள்ள நவக்கிரகக் கடாக்ஷம் பாரே. (35)

பாரப்பா வெள்ளி செம்பு தங்கம் மூன்று
பதிவாக உருக்கியதைத் தகடாய்த் தட்டி
நேரப்பா அத்தகட்டில் நவகோணமிட்டு
நேர்மையுடன் எட்டெழுத்தை நினைவாய் நாட்டி
யாரப்பா அறிவார்கள் நடுக்கோணந் தன்னில்
ஆதியென்ற விந்தும் ஓங்காரம் போட்டு
கூறப்பா ஓங்காரம் தன்னில் மைந்தா
குறியாய் சுழியதிலே குணமாய் போடே. (36)

ஏத்தியதோர் ரவிதன்னை உசரயேத்தி
யேகாந்தப் புருவமதின் சுடரில் நின்று
பார்த்திபனே அஷ்டகர்மம் ஆடவென்றால்
பதிவாக சிமகிவகிலியென் றெழுது
ஆத்துமத்தின் செயல் அதனால் அஷ்டகர்மம்
அடங்கி விளையாடுதற்கு இதுவே மூலம்
சாத்தியதோர் மூலமதை வெளியிட்டாக்கால்
தன்னுடலைக் காணாமல் தவிப்பார் பாரே. (37)

பாரப்பா திருமூலர் கடாக்ஷத்தாலே
பதிவான நந்திகுரு வாதம் கண்டு
நேரப்பா கையால் தொழுது நின்றேன் அப்போ
நீ மகனே ஆரெனவே என்றார்யானும்
மேரப்பா மேருகிரி அண்டந் தாண்டி
விளையாடும் திருமூலர் பிள்ளை யென்றேன்
தேரப்பா மனந்தேற்றி திருநீரிட்டு
திருவான அமுர்தரசம் ஈந்தார் தானே. (38)

தானான அமூர்தரசம் ஈந்து நல்ல
தன்மையுடன் உமதுடைய பேரேதென்றால்
ஊனான மூலமதில் கால் கொண்டேகி
உறுதியுடன் ருத்திரரைக் கண்டு போற்றி
கோனான குருபதியில் தீபங் கண்ட
குழந்தையென்ற காலாங்கி யென்றேனப்போ
தேனான அமுர்தரச வசனமாக
செப்பினார் அஷ்டகர்மம் செயல்தானே. (39)

தானான பெரியோர்கள் அஷ்டகர்மம்
சங்கதியைப் பாரார்கள் தன்னைப் பார்ப்பார்
வின்னான அயப்பொடியை உச்சாடிப்பார்
விபரமுடன் நிற்குணத்தை மோகஞ் செய்வார்
கோனான பூரணத்தை வசியஞ் செய்வார்
கொள்கின்ற இறப்பிறப்பை மாரணிப்பார்
பூனான கோலமதை பேதலிப்பார்
பொருந்தி நின்ற வாசியை நித்தம்பனஞ் செய்வாரே. (40)

செய்யப்பா தன்னகத்தில் தானே நின்று
சிவசிவா அஷ்டகர்ம தீர்க்கஞ் செய்வார்
மெய்யப்பா வாசியினால் மூலம் பார்த்து
விசையான நாலோடெட்டும் தம்பிப்பார்
நைய்யப்பா வென்றதொரு நமன்தான் போவான்
நல்வினையும் தீவினையும் நமன்தானப்பா
மெய்யப்பா மையமென்ற மூலம் பார்த்து
மார்க்கமுடன் ஆதார நிலையைப் பாரே. (41)

பாரப்பா ஆதார மூலமான
பதிவான ஒரெழுத்து உகாரமாச்சு
நேரப்பா உகாரத்தால் வாசியாச்சு
நிஜமான சோடசமாச்சு உயிருமாச்சு
தேரப்பா மனந்தேறி தெளிவதாச்சு
சிவசிவா உற்பனமும் ஒடுங்கினமாச்சு
மேரப்பா அண்டர்பதம் தெரியலாச்சு
வேதாந்த சிவயோகம் விளங்கலாச்சே. (42)

ஆச்சப்பா இன்னமொரு கருவைக் கேளு
ஆதியென்ற தைலமதில் சவாது கூட்டி
பாச்சப்பா ரெண்டு மூன்றாங் கட்டி மைந்தா
பத்தியுடன் சிமிழில் வைத்து பதிவாய் நீயும்
காச்சப்பா மூல அனல் சுழினைக் கேத்தி
கருணையுடன் புருவமதில் திலகம் போட்டு
மூச்சப்பா வாசியினால் சுழினை பற்றி
மூர்க்கமுடன் சிவயோகத்திருத்து பாரே. (43)

இருந்து நிலையாததினால் மைந்தா கேளு
இன்பமுடன் உன் சமூகம் கண்டோர்க் கெல்லாம்
விரிந்து நின்ற வியாதியெல்லாம் ஓடிப்போகும்
மெய்யான பூதகணம் விடுபட்டு ஓடும்
தெரிந்து கொண்டு அந்தநிலை தன்னிலேதான்
சிவசிவா கர்ப்பூரத் தீபம் பார்த்து
வருந்தி மிக சற்குருவைத் தொழுது கொண்டால்
வந்துதடா அஷ்டாங்க பரிசை தானே. (44)

தானென்ற வசியமது சொன்னேன் மைந்தா
சார்வான அஞ்சனத்தைச் சாத்தக் கேளு
ஊனென்ற உந்தியிடா மூலம் வாங்கி
உண்மையுடன் கருக்கி நன்றாய் எடுத்துக் கொண்டு
தேனென்ற நாதமதால் ஆட்டி மைந்தா
சிவசிவா சவாதுலே கூடச் சேர்த்து
நானென்ற ஆணுவத்தை நீக்கி நல்ல
நாட்டமுடன் மத்தித்துச் சிமிழில் தாங்கே (45)

தாக்கி நன்றாய் மூலமதில் வாசி கொண்டு
தன்மையுடன் புருவமதில் திலகம் பொட்டு
நோக்கி நன்றாய் சற்குருவை தியானம் பண்ணி
நுண்மையாய் மேல்கீழும் தன்னைப் பாரு
தாக்கியதோர் வாசியிலே அண்டரண்டாம்
தோணுமடா வெகு நிகழும் காணலாகும்
பாக்கியமாய் அன்னிதியைப் பார்க்க வேண்டாம்
பதிவான கர்ப்பூரத் தீபம் பாரே. (46)

பாரப்பா அஞ்சனத்தின் விவரம் சொன்னேன்
பதிவான மாற்றமதின் செயலைக் கேளு
நேரப்பா மாதுரதி பூக்குங் காலம்
நிஜமான பூவடங்கும் மூன்றாந் திங்கள்
காரப்பா அப்பூவின் பிஞ்சு வாங்கி
கருவொன்று சொல்லுகிறேன் நன்றாய்க்கேள்
சேரப்பா வெல்லமதில் ஆவியைச் சேர்த்து
செம்மையுடன் மாது தனக்கு ஈந்து பாரே. (47)

பாரான மாது தனக்கு ஈந்தாயானால்
பக்குவமாய் காய் வெதும்பி நிலத்தில் விழும்
சீராக அக்காயை வாங்கி மைந்தா
சிவசிவா கருக்கி நன்றாய் வைத்துக் கொண்டு
பேராக்கி வந்ததொரு சீலை தன்னை
பெருமையுடன் கருக்கு நன்றாய் கூடச் சேர்த்து
நேராக்கி இருவகையும் கூட்டி மைந்தா
நிஜமான காரெள்ளுத் தயிலத் தாட்டே. (48)

ஆட்டி நன்றாய் மையாக்கி வைத்துக் கொண்டு
அப்பனே அதுக்கு நிகர் சவாது கூட்டி
கூட்டியே மத்திச்சு சிமிழில் வைத்து
பூரணமாய் சற்குருவைத் தியானம் பண்ணி
நாட்டியதோர் வாசிதனை புருவத்தேத்தி
நங்கிலி அஞ்சனாதேவி யென்று
தாட்டிகமாய் புருவமதின் சுழினைப் பற்றித்
தன்னறிவை மெய் அறிவில் சாரப் பண்ணே. (49)

சார்வான மூலமதில் கனலைத்தூண்டி
சங்கையுள்ள வாசியினால் சிகரத் தேகி
நேரான புருவமதின் சுழினைப் பற்றி
நின்றால் அங்கு கர்ப்பூர தீபந்தன்னில்
பேரான தீபமதில் அமர்ந்து கொண்டு
பெருமையுடன் சிவயோகத்திருந்தால் மைந்தா
ஆனாலும் உன்னுருவைக் காணமாட்டார்
அவையடக்கம் இருகருவை அடக்கம் பண்ணே. (50)

அடக்கமுடன் இன்னமொரு கருவைக் கேளு
அருமையுடன் உனது உருவைக் காணவென்றால்
அடக்கமதாய் மைவிழித்தி நீருசாத்தி
அப்பவல்லோ உன்னுருவைக் காணலாகும்
அடக்க மென்றால் அடக்கமதாய் இருக்க வேண்டும்
ஆனந்த மதியமூர்தம் கொள்ள வேணும்
விடக்கெடுத்த நாய்போல திரிந்தாலென்ன
வேதாந்த பூரணத்தில் விரும்பி நில்லே. (51)

நில்லென்ற நிலையறியா மாயாவீடு
நிட்டூரமானதொரு நிலையாத தேகம்
ஜில்லென்ற புழு கிருமி சேர்ந்த பாண்டம்
செத்த சவம் போலவே தான் திரியு மஞ்சனம்
மல்லென்று மதம்பிடித்து வாய் வீண் பேசி
மார்க்க நிலை அறியாமல் மாண்டார் கோடி
கள்ளென்ற கள்ளர் வரவு ஆகாதய்யா
கண் மூக்கு மத்தியிலே கருதிப்பாரே. (52)

பாரப்பா இன்னமொரு கருவைக் கேளு
பரம குரு திருமூலர்ப் பாதம் போற்றி
காரப்பா கருவழலை கருவான
நாதவிந்து என்னும் பேராச்சு
நேரப்பா கருவழலை நாதம் நாதம்
நிதமான குருவழலை விந்து விந்து
பேரப்பா நாதமென்ற தைலம் வாங்கி
பேசாத குருவழலை உப்புச் சேரே (53)

சேரப்பா நாதமதில் அமுரி உம்பு
சேர்த்திடவே நாதமங்கே தெளியும் பாரு
யாரப்பா அறிவார்கள் தெளிவைக் காணார்
அத்தெளிவை அறியாமல் உலகத்துள்ளே
பாரப்பா நாதமதை வாங்கி மைந்தா
பாசமதை அகற்றாமல் பாவிமார்கள்
நேரப்பா கொண்டு திடப் பித்தம் மீறி
நினைவு தப்பிக் காசங் கொண்டு செத்தார் பாரே (54)

பாரப்பா முன்னர் சொன்ன தெளிவை மைந்தா
பக்தியுடன் குருபரனைத் தியானம் பண்ணி
காரப்பா புருவநடுச் சுழினை போற்றி
கருணையுடன் அமுர்தரசத் தெளிவைக் கொள்ளு
யாரப்பா உனக்கீடு சொல்லப் போறேன்
அருளான தேகமடா அமுர்த தேகம்
மேரப்பா அண்டர்பதம் கண்டதேகம்
வேதாந்த மென்ற தேகமாச்சே. (55)

ஆச்சப்பா மாதமொரு தண்டக்கந்தான்
அப்பனே ஆண்டொன்று கொண்டால் மைந்தா
மூச்சப்பா முன்னிலையாம் விந்து ஏறும்
முடங்காது சதைநரம்பு இறுகிப் போகும்
பேச்சப்பா உன்வசனம் பலிக்கும்
சித்திபெரு லகில் நடத்தை யெல்லாம் மனதில் தோணும்
காச்சப்பா மனக்கசடை மூலத் தீயால்
கசடகத்தி அமுர்தரசம் கனிந்து கொள்ளே. (56)

கனிந்தரசம் தன்னுடனே அண்டம் சேர்த்து
கூரல் சிவமாலையதாய் நின்றாயாகில்
பணிந்துவிடும் வாசியது தன்னுள் மைந்தா
பாலகனே கர்ப்பூரத் தேகமாகும்
துணிந்து வரும் யமதூதாள்அகன்று போவார்
தூரதிருஷ்டி நடத்தையெல்லாம் சொல்லலாகும்
பணிந்து மனக் கண்ணாலே அறிவைப் போற்றி
பக்தியுடன் இன்னமொரு கருவை கேளே. (57)

கேளப்பா நீலகண்ட வித்தை சொல்வேன்
கிருபையுள்ள திருமூலர் கடாக்ஷத்தாலே
கேளப்பா செம்பி ரிம் சிம்யென்று
கெணிதமுடன் அந்திசந்தி உருவே செய்தால்
கேளப்பா நீலகண்ட கெதிகொண்டாடும்
கேசரத்தில் சதாசிவனும் நர்த்தனஞ் செய்வார்
கேளப்பா தேகம் வச்சிரகாய மாகும்
கேள்வியென்ன புருவமையச் சுடரைப் பாரே (58)

பாரப்பா இன்னமொரு கருவைக் கேளு
பார்தனிலே விள்ளாதே பதனஞ் சொன்னேன்
காரப்பா சந்தனத்தின் கட்டை வாங்கி
கருணையுடன கட்டையிலே தங்க ஊசி
நேரப்பா கட்டையிலே தமர்கள் போட்டு
நினைவாகக் கட்டையிலே ஊசி சேர்த்து
சேரப்பா ஊசியென்ற ஆணி வைத்து
செம்மையுடன் சாணைவிலே அரைத்துக்கொள்ளே. (59)

அரைக்கிறது முலைப்பாலால் அரைத்துக் கொண்டு
உத்தமனே திலகமிட்டு உறுதியாக
திரத்துடனே நீ இருக்கும்போது மைந்தா
சிவசிவா மனிதர்முதல் மிருகமெல்லாம்
வரத்துடனே உனது பதம் பணியும் மைந்தா
மார்க்கமுடனுதலதில் குழைத்துப் போட்டால்
கருத்துடனே கணங்களெல்லாம் புத்தி கேழ்க்கும்
கருணையுடன் நீலகண்ட வித்தை கேளே. (60)

வித்தையென்ன நீலகண்ட மந்திரத்தை
விபரமுடன் அமாவாசி தன்னில் மைந்தா
சுத்தமுடன் நூத்தெட்டு உருவே செய்தால்
சுருக்காக சித்திக்கும் நீலகண்டம்
பக்தியுடன் ஆயிரமாம் உருவே செய்தால்
பாலகனே உனதுடைய நாமஞ் சொல்ல
புத்தியுடன் விசனங்களெல்லாம் தீர்ந்து போகும்
பொல்லாத அவமிருந்து ஓடும் பாரே. (61)

பாரப்பா தலைகாலாய் மாறினாக்கால்
பார்விஷம் ஏறுமிடம் இரக்கமில்லை
நேரப்பா கால்தலையாய் மாறினாக்கால்
நின்ற விஷயம் இறங்குமடா நிஜமாம் வித்தை
காரப்பா விச வித்தை புண்ணியமேயாகும்
கருத்து வைத்து உருவேரக் கருணை தங்கும்
யாரப்பா அறிவார்கள் நீலகண்டம்
அறிவான விந்தையடா அதீதமாமே. (62)

ஆமப்பா இன்னமொரு கருவைக் கேளு
ஆச்சரியம் சொல்லுகிறேன் அதீத மார்க்கம்
நாமப்பா சொல்லுகிறோம் கருங்கல் தன்னில்
நன்மையுடன் பிரமஞ்சூலம் போட்டு
தாமப்பா நீலகண்ட அயத்தகட்டில்
சுமையுடன் விந்தெழுதி விந்துக்குள்ளே
ஓமப்பா நீலகண்ட மந்திரத்தை
உண்மையுடன் தானெழுதி உறுதிகேளே. (63)

கேளப்பா அயத்தகட்டைக் கையில் வாங்கி
கிருபையுடன் மானதமாம் பூசை செய்து
கேளப்பா சாந்தத்தினால் நன்றாய்க் கட்டி
கெணிதமுடன் ஓம் சிவாவென்று சொல்லி
கேளப்பா அத்தகட்டை நிலத்துள் வைத்து
கிருபையுள்ள சூலக்கால் மேலே நாட்டி
கேளப்பா அபிஷேகம் செய்தாயானால்
கிருபையுள்ள சூலக்கல் களையுண்டாச்சே. (64)

ஆச்சப்பா களைபொருந்தும் சூலக்கல்லை
அந்திசந்தி கைதொழுது கொண்டோர்க்கெல்லாம்
மூச்சப்பா கொண்டதொரு நோய்கள் தீரும்
மூர்க்கமுள்ள பிசாசுகள்தான் ஓடிப்போகும்
வீச்சப்பா விஷங்களெல்லாம் விலகிப்போகும்
வேதாந்த நீலகண்ட விசையினாலே
வாச்சப்பா தலைமுழுகி சூலக்கல்லை
வந்து கண்டால் சகல விஷம் மாண்டுபோமே. (65)

போமப்பா இன்னமொரு கருமானங்கேள்
முகிதலத்தில் தெய்வமெல்லாம் புத்தி கேழ்க்க
நாமப்பா சொல்லுகிறோம் மைந்தா கேள்
ஓம் கிலி சிவா வெனவே அம்உம் என்று
ஓமப்பா குருத்தோலை தனில் எழுதி
உத்தமனே மானதமாய் பூசைசெய்து
ஆமப்பா பிடாரி அம்மன் துர்க்கை கோயில்
தான்கட்ட நினைத்தபடி ஆடுந் தானே. (66)

ஆடுமப்பா நினைத்தபடி நடந்துகொள்ளும்
அரகரா சீட்டு கேட்டிராமய்யா
ஓடுமப்பா உனதுடைய சீட்டைக் கண்டால்
உலகத்தில் பேய்க்கணங்கள் ஒதுங்கிப் போமே
நாடுமப்பா உனதுடைய ஏவல் கேழ்க்கும்
நன்மையுள்ள குருபதியில் நாட்டமாய் நில்
கூடுமப்பா பிலக்குமடா அந்தக் குரட்டில்
குடியிருந்து ஆடிப்படையைத் தீர்க்கம் பண்ணே. (67)

பண்ணப்பா நவக்கிரகம் பூசை பண்ணி
பதிவான திருவாசி தன்னில் ஏறி
முன்னப்பா நிறைஅந்த அனுக்கிரக வீட்டில்
முழங்கி நின்ற சிலம்பொலியைக் கண்டுதேறி
கண்ணப்பா மனக்கண்ணால் தன்னைப்பாரு
கருணையுள்ள மூலமதில் இறங்கி மைந்தா
உண்ணப்பா மதியமுர்தம் நன்மையாக
உறுதியுடன் கர்ப்பூரத் தீபம் பாரே, (68)

பாரப்பா தீபமென்ற காசி தன்னில்
பதிவான சக்தியென்ற சேதிதானும்
நேரப்பா நின்றதொரு சோதி தானும்
நிலையான குருவிருந்த வீடு தன்னில்
பேரப்பா பெத்ததொரு வீட்டிலேதான்
பலமான ரவிமதியும் இருந்தார் பாரு
யாரப்பா அறிவார்கள் சொல்லக் கேளு
அந்த விட சுழிமுனையை அறிந்துகொள்ளே. (69)

அறிந்து கொண்டு மதிஅமுர்தம் அந்திசந்தி
அருள் பெருகும் பூரணத்தில் மனது வைத்து
வருந்தி அந்த வாசியை நீ புருவத் தேத்தி
மார்க்கமுடன் கர்ப்பூரத் தீபங் கண்டால்
நெரிந்ததொரு வாய்வுயெல்லாம் நேரதாகும்
நின்றதொரு பீடையெல்லாம் ஒடிப்போகும்
பரிந்து மனங்குவிந்து சிவயோகஞ் செய்தால்
பாரு ஞானகேசரி உன்வசம் தானே. (70)

தானென்ற வந்நியடா முக்கோணத்தில்
சார்ந்து நின்ற ரவிமதியை என்ன சொல்வேன்
கோனென்ற குருவருளாங் கேளு கேளு
குவிந்து இடை பின்னாகி சுழினைக் கேகி
வானென்ற அண்டமதில் தீபமாகி
வளர்ந்து சுடர்பிரான சிவயோகந்தானும்
தேனென்ற சிவயோகம் செய்யலாச்சு
தேவி மனோன்மணி அமுர்தம் இயலைப்பாரே. (71)

பாரப்பா மூலிகையில் சித்துக் கேளு
பதிவான காந்தியடா விஷ்ணு காந்தி
நேரப்பா காந்தி நின்ற இடத்தில் மைந்தா
நீ மகனே வடமுகமாய் இருந்து கொண்டு
காரப்பா நம நம சிவ என்றே தான்
கருணையுடன் வேரெடுத்து மஞ்சள் பூசி
சேரப்பா நூல் அதனால் சுத்தி மைந்தா
சிசுக்களுக்குக் கட்டினால் செம்மையாமே. (72)

செம்மையென்ன சுரதோஷம் விட்டுப்போகும்
தீராத தேகவலி வாங்கிப் போகும்
தன்மையுடன் இன்னமொரு கருவைக் கேளு
சங்கையுள்ள சூரியடா நத்தைச்சூரி
உண்மையுடன் சமூலமதை வாயில் போட்டு
ஒதுக்கி நன்றாய் இருபுறமும் மென்றாயாகில்
நன்மையுடன் தந்தமெல்லாம் இறுகிப் போகும்
நயனமதில் தெளிவுதரும் நன்மையாமே. (73)

ஆமப்பா இன்னமொரு கருவைக் கேளு
அப்பனே நெல்லியடா கீழ்க்காய் நெல்லி
தாமப்பா சமூலமதை வாங்கி மைந்தா
தன்மையுடன் நறுக்கி நன்றாய் வாய்நீர் விட்டு
நாமப்பா சொல்லுகிறோம் கண்ணிலே தான்
நயமாகத் தான் பிழிந்து ஊதிப் போட்டால்
ஓமப்பா சதைபடரும் நெரிசூலை
ஓடிவிடும் கணம் தெளிவுடனே ஆகும் (74)

ஆமப்பா இன்னமொரு சூட்சஞ் சொல்வேன்
அரிதரிது பொடுதலையை வாயில் போட்டு
தாமப்பா தின்றுவிடு ஈரைஞ்சு நாள்
பக்தி கெட்டு ஓடுமடா பவுத்திரந்தான்
நாமப்பா சொல்லுகிறோம் நல்ல பிரயோகம்
நாட்டமுடன் இக்கருவை வெளிவிடாதே
ஓமப்பா ஒருமனதாய் மூலம் பார்த்து
உறுதியுடன் நின்றதினால் உறுதியாமே. (75)

உறுதியுடன் இன்னமொரு கருவைக் கேளு
உத்தமனே வெள்ளருகு கொண்டு வந்து
உறுதியுடன் உணர்த்தி நன்றாய்த் தூளாய்ப் பண்ணி
உத்தமனே அந்தி சந்தி இருபொழுது உண்ண
உறுதியுடன் நின்றதொரு மூலமெல்லாம்
முடிந்து போகுமடா உண்மை உண்மை
உறுதியுடன் மனதறிவாய்ச் செய்தாயாகில்
உத்தமனே நவமூலம் ஓடிப்போமே. (76)

போகுமடா இன்னமொரு சூட்சங் கேளு
புத்தியுடன் கள்ளியுடப் பட்டை வாங்கி
வாகுடனே மிளகு வெள்ளைப் பூண்டு கூட்டி
அரைத்துருட்டிப் பத்து நாள் கொள்ள மைந்தா
நோக்கி நின்ற அஷ்டகுன்மம் ஓடிப் போகும்
உண்மையுள்ள வைத்தியமடா சிமிட்டு வித்தை
பாருடைய குரு நான் சொன்ன வித்தை
பக்குவத்தை நன்றாகப் பணிந்து செய்யே (77)

செய்யவே இன்னமொரு சூட்சங் கேளு
செம்மையுடன் கிராம்புதனை பழச்சாத்தாலே
நைய்யவே அரைத்துருட்டி மைந்தா கேளு
நாட்டமுடன் சுண்டக்காய் வீதமாகப்
பெய்யவே அந்தி சந்தி கொண்டால் மைந்தா
பரக்குமா கிராணியென்ற தெல்லாம் போகு
கையாற் கண்ட இந்தப் படிதான் மைந்தா
கருணையுடன் நதிர்த்துச் சித்துக் கேளே. (78)

கேளடா உந்தியிலே சிவமும் சக்தி
கெணிதமுடன் நின்ற இடம் துரியவீடு
கேளடா அவ்வீட்டில் மனதை வைத்து
கிருபையுடன் புருவ நடுச் சுழியில் நின்று
கேளடா சிவயோகம் செய்யும் போது
கேள்வியென்ன மானிடர்கள் வருத்தமென்றால்
கேளடா சொன்னவனைப் பார்த்து மைந்தா
கீழும் மேலும் பார்த்து மெல்ல ரேசித்தூதே. (79)

ரேசித்து ஊதிடவே வியாதியெல்லாம்
நிமைக்கு முன்னே ஓடிவிடும் மைந்தா கேளு
நேசித்து வாசியுட காலால் மைந்தா
நெடுந்தூரம் சென்று விளையாடலாகும்
பூசித்து வாசியை நீ அறிய வேணும்
புத்தியுடன் சிவயோகம் செய்ய வேணும்
வாசித்த நூல்முறைகள் அறிய வேணும்
வகையுடனே மரணத்தில் மருவிநில்லே. (80)

மருவயிலே ரவி மதியும் சுழினை மூன்றும்
வாய் அதிர்ந்து பேசாத மனதில்காணும்
அருவையிலே சகலமெல்லாம் ஒன்றுக்குள்ளே
அகண்ட பரிபூரணமாய் நிற்கும்கால்
திருவையிலே பளிச்சென்று ஒளிதான் வீசும்
திருவாகி வாசியென்ற இயல்தான் மைந்தா
பருவமுடன் ஆதார மூலம் பார்த்து
பக்தி கொண்டு புருவமதில் பணிந்து நில்லே (81)

பணிந்து நின்ற மூலமதில் நாதன் கண்டு
பதிவான நாதமென்ற ஒளியில் சென்று
கனிந்து தனையிருந்ததொரு சிகார வீட்டில்
சாராமல் ரவிமனையில் சார்ந்து கொண்டு
துணிந்து மனகனிவதனால் அமுர்தம் கொண்டால்
குறைவின்றி வீரமென்ற தேகமாமே (82)

ஆமப்பா தேகமதைக் கண்ட பேர்கள்
அருளான போதமென்பார் பிரமமென்பார்.
தாமப்பா சச்சிதானந்த மென்பார்
சார்வான வெளியென்பார் ஒளியேயென்பார்
ஓமப்பா பிரம்மாதி லோகமென்பார்
....
வாமப்பால் கடந்த பூரணமே யென்பார்
சுத்த ஜோதியெனவே மகிழ்வார் பாரே (83)

பாரப்பா பூரணத்தின் பெருமை சொல்ல
பதிவான கதிரேது மதியங்கேது
நேரப்பா தீயேது அப்புவேது
நிறைந்த தொரு வாய்வு ஆகாசமேது
சாரப்பா மண்ணேது விண்ணங்கேது
சார்வன ஒளியேது வெளியங்கேது
பேரப்பா பெருகியெங்கும் தானாய்
பெருகி நின்ற பூரணத்தின் பெருமைதான். (84)

தானான பூரணத்தை அறியவேணும்
தன்மையுடன் அதில் மனதை நிறுத்தவேணும்
தேனான குருவருளைக் காணவேணும்
குவிந்தமர் அமுர்தரசம் கொள்ளவேணும்

தேனான அமுர்தரசங் கொண்டு மைந்தா
திருவான போதையிலே தீர்க்கவேணும்
ஊனான போதையில் திரமாய் நின்று
உடல் உயிரை அறிந்து மனங் கொடுக்கும் பாரே (85)

பாரப்பா மனங் கொடுக்கும் நிலையில் நின்று
பருதிமதி சுடர்தனைப் பார்த்து மைந்தா
நேரப்பா நின்றதொரு வாசியாலே
நீ மகனே ருத்திரனார் பதியில் சென்று
சாரப்பா மயேஸ்பரத்தில் வலக்கால் நீட்டி
சார்வான இடக்காலை சுழினைக் கேத்தி
காரப்பா அச்சுழியில் நின்று கொண்டு
கண்ணடங்காத் தீபமதைக் காண முத்தே. (86)

காலாங்கி நாதர் பூஜாவிதி முற்றும்.

காலாங்கிநாதர் தீட்சை விதி – 36

ஆதியந்தம் நிறைந்த பூரணமே காப்பு
அருள்பெருகும் சதாசிவன் மயேசன் காப்பு
நீதியுள்ள ருத்திரனும் மாலும் காப்பு
நிரஞ்சனமாய் நின்றதொரு பிரமன் காப்பு
ஓதியதோர் தீட்சைவிதி தன்னைக் காண
உசந்ததொரு ரவிமதியின் சுடரே காப்பு
சோதியென்ற ஆதாரமூலந் தன்னில்
துலங்குகின்ற வல்லபை கணேசன் காப்பே. (1)

காப்பேடும் கடையேடும் நன்றாய்ப் பார்த்து
கலந்து நின்ற அட்சரத்தைப் பார்க்கும் போது
ஒப்பான அட்சரந்தா னொன்றே சூட்சம்
முதலான சூட்சமடா மூச்சே சத்தம்
வாப்பான சத்தமடா ஆதியந்தம்
வகையான அண்டமடா பிரம்மாச்சு
நாப்பான பிரும்மமது நின்ற சூட்சம்
சாதகமாய் வாசியினால் ஏறிப்பாரே. (2)

ஏறிப்பார் அண்டமதில் ஏறிப் பார்க்க
ஏகாந்த பிரம்மவெளி யென்ன சொல்வேன்
நேரப்பா அவ்வெளியில் ஒளிதான் மைந்தா
நிரந்தரமாய் நின்றதொரு தீபம் தீபம்
யாரப்பா அறிவார்கள் தீபமென்றால்
அறிவான மெய்ஞ்ஞான போதம் போதம்
காரப்பா கருணையினால் போதம் தன்னை
கால்வாசி கொண்டு கரையேறினேனே. (3)

ஏறினேன் வாசியினால் ஆறாதாரம்
இருந்து மனதறிவாலே மூலாதாரம்
தேறினேன் கைவாசி குளிகையாலே
சென்று மெல்ல அடுக்கையிலே மூலநாயன்
வாறியே எடுத்து மடி மீதில் வைத்து
மனமகிழ்ந்து எட்டு ரெண்டும் சொன்னாரப்போ
மாறியென்ன எட்டு ரெண்டு அறிந்து கொண்டு
மார்க்கமுள்ள காலாங்கி வாவென்றாரே. (4)

வாவென்ற மகிமையினால் அடுத்தேனப்போ
மனந்தெளிந்து போதையிலே மனது கரைந்து
ஆவென்ற நவக்கிரகந் தன்னைக் கட்டி
ஆதியென்ற அனுக்கிரக நிலையுஞ் சொல்லி
கூவென்ற நாதஒலி நிலையுங் காட்டி
குருவான பதிகாட்டி மௌனஞ் சொல்லி
பூவென்ற ஆயிரத்தின் மலருங் காட்டி
புனிதமுடன் தீசதீட்சை வைத்தார் பாரே. (5)

பாரப்பா திசதீட்சை என்ன வென்றால்
பதிவான ரவிமதி சென்றிருக்கும் வீடு
நேரப்பா நிறை அனுக்கிரக வீடு
நிலையான வீடதுதான் பிரம்ம பீசம்
காரப்பா கமலரசம் ஜொலிக்கும் வீடு
கருணையுள்ள மணிவீடு கமலவீடு
தூரப்பா அடிமுடியாய் நின்ற வீடு
சுழியான புருவமடா தொடுத்துக்காரே. (6)

தொடுத்துமிகக் காக்கிறது புருவமத்தி
தொடுகுறியும் வழிதுறையும் இதுதானப்பா
அடுத்துநின்ற வழிதுறையில் நின்று கொண்டால்
அமுர்தரச பானமது அருவி பாயும்
எடுத்து அந்த அமுர்தரசங் கொண்டால் மைந்தா
ஏகாந்த நவக்கிரகம் உறுதியாச்சு
தடுத்தடுமை கொண்ட அனுக்கிரக மீதில்
சதாகாலம் பூரணமாயிருந்து காணே. (7)

இருந்துகொண்டு நவக்கிரகம் தன்னை மைந்தா
இன்பமுடன் அறிந்து அனுக்கிரகமீதில்
வருந்தி மிக்கனிவதனால் மனதை வைத்து
மார்க்கமுடன் நவக்கிரகம் பார்த்தாயாகில்
தெரிந்ததொரு கிரகமெல்லாம் பாசம் பக்தி
திருவிருந்து தீபமது தோணாதய்யா
விரிந்ததொரு வாசியது நிலை நில்லாது
வேதாந்த நவக்கிரகந் தன்னை வேண்டே. (8)

வேண்டுவது என்னவென்றால் மைந்தா கேளு
விசையான நவக்கிரகம் ஒன்பதுக்கும்
பூண்டுகொண்ட அனுக்கிரக நிலையைப் பார்த்து
புத்தியுடன் மனதறிவாயிருந்து கொண்டு
ஆண்டதொரு அஞ்செழுத்தும் மூன்றுங் கூட்டி
ஆதியென்ற ஓங்காரம் முன்னே வைத்து
நின்றதொரு வாசியிலே மூலத் தேகி
நிலையறிந்து ரேசகபூரகமும் பண்ணே. (9)

பண்ணப்பா கும்பகத்தின் மலர்கள் சாத்தி
பதிவாக நவரசம் சொலித்துக் கொண்டும்
விண்ணப்பா தான்நோக்கிக் கண்ணைப் பாரு
வேதாந்த அமுர்தரசம் அருவிபாயும்
உண்ணப்பா அந்த அமுர்தங் கொண்டு தேர்ந்தால்
உருவான நவக்கிரகம் சுத்தியாச்சு
முன்னப்பா அனுக்கிரகந் தோன்றும்போது
முக்தி தரு தீபமது சுத்தந் தோன்றும். (10)

சுத்தமுள்ள பீடமது மந்திர பீடம்
சுகமான தீபமடா ஞானபோதம்
சித்தமுட ஞானநெறி பெற்றுக் கொண்டு
சிவசிவா சிவயோகத்திருந்து மைந்தா
பக்தியுடன் சற்குருவைத் தியானம் பண்ணி
பதிவான நவக்கிரகந் தன்னிலேதான்
புத்தியுடன் தானிருந்து அந்த வீட்டைப்
பூரணமாய் காக்க ஒரு வகையைக் கேளே. (11)

கேளப்பா வகையிபரம் என்னவென்றால்
கிருபையுள்ள மூலகுரு உபதேசித்தார்
கேளப்பா உபதேசம் என்னவென்றால்
கிருபையுள்ள ஞானமடா ஞானி அண்டம்
கேளப்பா அண்டமதில் இரண்டுண்டு அய்யா
கேள்வியென்ன கருஞானி அண்டம் வாங்கி
கேளப்பா வாங்குவது முதலாம் அண்டம்
கெணிதமுடன் கேசரியே வாங்கு வாங்கே. (12)

வாங்கினதோர் அண்டமதைக் கட்டுதற்கு
வகைவிபரம் சொல்லுகிறேன் மைந்தாகேளு
ஓங்கியதோர் இள நீரும் தண்ணீர்தானும்
உத்தமனே கமலையுடப் பாலுங் கூட்டி
பாங்குடைய வெள்ளையடா தகரின் பாலும்
பக்குவமாய் நாலும் ஒன்றாய்க் கூட்டி மைந்தா
தாங்கியதோர் பாண்டமதைச் சுத்தி பண்ணி
தன்மையுடன் நாலுகருவும் ஒன்றாய்ச் சேரே. (13)

சேர்த்து நன்றாய் அடுப்பேற்றி மைந்தா கேளு
திருவான பதிநோக்கித் தியானம் பண்ணி
பார்த்திபனே கருவான அண்டம் வாங்கி
பக்தியுடன் சிவமெனவே பாண்டத்திலிட்டு
போர்த்திநன்றாய்த் தீயெரிப்பாய்க் கமலம் போலே
புத்தியுடன் வைத்துநீர் பாதி சுண்ட
கார்த்துநன்றாய் சுண்டினபின் இறக்கிமைந்தா
கருணையுடன் குளிரவைத்துக் காரு காரே. (14)

காரப்பா குளிரவைத்து அண்டந்தன்னை
கருத்துரவே வாங்கி மேல்த்தோடு போக்கு
நேரப்பா நாதவிந்தை நன்றாய் மைந்தா
நினைவாக வெவ்வேறே பீங்கான் சேர்த்து
பாரப்பா பீங்கான்தன்னில் மலைத்தேனப்பா
வார்த்துநன்றாய் ரவிதனிலே நவனாள்போட்டு
பேரப்பா பெலத்ததொரு நாதவிந்து
பலமான அமுர்தரச வர்க்கமாமே. (15)

ஆமப்பா அமுர்தரச வர்க்கம் ரெண்டும்
அரகரா நாதவிந்து யென்றும் பேராம்
தாமப்பா நாதவிந்தை அறியாமல்தான்
தாரணியில் பெண்களுட சையோகித்து
நாமப்பா வென்ற மதம் தன்னை வாங்கி
நாய்போலத் தின்று செத்தார் கோடாகோடி
தாமப்பா வெறிபிடித்துக் கொண்டோர் கோடி
காசினியில் பலவிதமாய் இருந்தார் பாரே. (16)

பாரப்பா அமுர்தரச வர்க்கந் தன்னைப்
பக்தியுடன் குருபரனைத் தியானம் பண்ணி
நேரப்பா நேர் நிலைப் பெற்றுக் கொண்டு
நேமமுடன் அந்திசந்தி கொண்டு தேர்ந்தால்
பேரப்பா வெக்குந்தோறு வாசி தானும்
பிசகிறது கண்டமதில் அங்கென்றூணு
சாரப்பா புருவநடுக் கமல மீதில்
சத்தியமாய்த் தீபவொளி காணலாமே. (17)

காணலாம் நவக்கிரகம் தன்னிலேதான்
கலந்துநின்ற பாசமது காணுந்தோறும்
பேணவே வாசியது இலக்கும் பாரு
பலமாகுங் காயமது கல்போல் மைந்தா
பூணவே சுழிமுனையில் தீபங் காணும்
புகழான வசியமதுதானே உண்டாம்
தோணவே வாசியது சுழுனைக் கேற்றி
சுகமாகச் சிவயோகத்தில் இருக்குமாமே, (18)

ஆமப்பா இன்னமொரு தீட்சை கேளு
அவையடக்கம் சொல்லுகிறேன் மைந்தா பாரு
தாமப்பா தானவனாய் தானே வாங்கி
தாரா வின்னமுதைத் தானேநின்று
ஓமப்பா முன்போலே யாகஞ் செய்து
உறுதியுடன் சற்குருவைத் தியானம் பண்ணி
நாமப்பா உறுதியுடன் சொல்லுகிறோம் அங்சிங்கென்று
நன்மையுடன் அந்திசந்தி கொண்டு காரே (19)

காரப்பா அந்திசந்தி கொண்டு மைந்தா
        கைலாசத் திருமூலர் கடாட்சத்தாலே
நேரப்பா நின்றதொரு வாசி தன்னை
        நீ மகனே நடுவான சிகார வீட்டிலே
சேரப்பா சேர்ந்து நின்று புருவம் பாரு
        சிவசிவா தீபவொளிக் கண்ணில் காணும்
மேரப்பா அண்டரண்ட பதங்கள் தோணும்
        வேதாந்த தேகமது சித்தியாமே. (20)

சித்தியாம் தேகமது கெட்டியாகும்
        சிவசிவா தசை நரம்பு வலுத்துப் போகும்
புத்தியுடன் குலகெதி யுண்டாகும்
        பொருந்தி நின்ற வாசியது அகலாதப்பா
சுத்தமுடன் பூரண விலாசமாகி ஜொலிக்குமடா
        வசீகரம் நின் முகத்தில் மைந்தா
பக்தியுடன் குருபரனைத் தியானம் பண்ணி
        பரம பதத்தில் கையினாலேப் பதிவாய் நில்லே. (21)

பதிவாக இன்னமொரு தீட்சை கேளு
        பாலகனே வான்கோழி அண்டம் வாங்கி
கெதியாக முன்போலே பாகஞ் செய்து
        கிருபையுடன் பதனமாய் வைத்துக் கொண்டு
விதியான எழுத்தறிந்து குருவைப் போற்றி
        மேலான அண்டரசம் கையில் வாங்கி
மதியாக அங்கிலியென்று உருவே செய்து
        மார்க்கமுடன் அந்திசந்தி கொண்டு தேரே. (22)

தேருவதால் வாதபித்தம் சிலேர்ப் பனத்தால்
        சேர்ந்துநின்ற வியாதியெல்லாம் சிதறிப்போகும்
கருவுடைய தேகமதில் காந்தி காந்தி
        குணமாக வாசியது சுழுனைக் கேகும்
வீருடைய போதநெறி ஞானதேகம்
        வேதாந்தமான தொரு தேகம் போலாம்
பேருடைய நவக்கிரகம் பலத்துப் போகும்
        பலக்குமே தேகம் வச்சிரகாயமாமே. (23)

காயமென்ற தேகமது மாயாரூபம்
கவலை குடிகொண்டதொரு காமவீடு
மாயமென்ற ஜீவநிலை நிலையாத வீடு
மதிபெருகி ரவி தேய்ந்து மாளும் வீடு
நேயமென்ற நேமமது இல்லா வீடு
நேர்நிலைகள் அறியாமல் நின்ற வீடு
தாயகமாய் அவ்வீடு நிலைக்கவேதான்
தன்மையுடன் இன்னமொரு கருவைக்கேளே. (24)

கருவான மயிலுடைய அண்டம் வாங்கி
கருணைபெற முன்போல பாகஞ் செய்து
உருவான மேடுதனில் பதனம் பண்ணி
உண்மையுடன் மனோண்மணியைத்தியானம் செய்து
திருவான பதிநோக்கி சிமசிமயென்று
தினந்தோறும் அந்தி சந்தி கொண்டாயானால்
குருவான பதிதலத்தில் தீபங்காணும்
குண்டலியின் நந்தியொளி கூர்ந்துபாரே. (25)

பார்க்கையிலே தேகமதில் நின்றதோஷம்
பறக்குமடா மயிலுடைய மார்க்கத்தாலே,
சேர்க்கையுள்ள தேகமது வலுவுண்டாகும்
சிவசிவா வாசியது சிறக்கும் வீட்டில்
மார்க்கமுள்ள கண்கள் ரெண்டும் தெளிவுண்டாகும்
வாசி சிவயோகமது வருகும் சித்தி
தீர்க்கமுடன் நெடுந்தூரம் நடந்தாலுந்தான்
சிவசிவா தகையில்லாது இருக்கும் பாரே. (26)

பாரப்பா மயிலுடைய மயினத்தாலே
பகல்காலம் நட்சத்திரம் பதிவாய்க் காணும்
நேரப்பா தூரதிருஷ்டி வியனந்தோறும்
நிலையான கமலமதில்தீபங் காணும்
வீரப்பா கொண்டதொரு நாகம் தீண்ட
மேனிதனிலே அந்த விஷம் ஏறாதய்யா
மேரப்பா அண்டபதங் கண்ணில் காணும்
மேலான மயிலுடைய அண்டந் தானே. (27)

தானென்ற விஞ்சையடா அண்டமாச்சு,
சமரசமாய் நின்றதொரு அ ண்டந்தன்னை
கோனென்ற குருவருளால் காணவேணும்
கூர்மையுடன் கைமுறைகள் அறியவேணும்
ஊனென்ற உடலுயிரே அறிந்தாலுந்தான்
உண்மையுள்ள தீக்ஷையிலே உறுதிவேணும்
தேனென்ற அமுர்தரசம் அண்டத்தாலே
சிவகளை உண்டாச்சு தெளிந்து பாரே. (28)

பாரப்பா அண்டமதைப் பார்க்கச் செய்து
பக்தியுடன் நவகோணம் பூசைபண்ணி
நேரப்பா பூசையிலே வைத்துக் காரு
நீ மகனே அந்திசந்தி கொண்டு தேறு
பேரப்பா கொண்ட நவக்கிரகந் தானும்
பலமாக நின்றிலங்கும் ஜீவன்மைந்தா
யாரப்பா அறிவார்கள் அண்டபிண்டம்
அமர்ந்துநின்ற நாதவிந்து ஆதிதானே. (29)

ஆதியென்ற அண்டமதைக் காணாமல்தான்
அரகரா ஜீவநிலை அகண்டு போச்சு
நீதியுடன் சொன்னவகை நாலும் ஒன்றாய்
நேமமுடன் கைமுறையாய்ப் பாகம் செய்து
ஜோதியென்ற நவகோணந் தன்னிலே வைத்து
சுத்தமுடன் வாசியை நீ சுழுனைக் கேத்தி
ஓதியதோர் மந்திரத்தை உருவே செய்து
உத்தமனே அந்திசந்தி கொண்டு தேரே. (30)

கொண்டுநிதம் தேருவதால் மைந்தாகேளு
கூர்மையுடன் நின்றதொரு வாசிதானும்
அண்ட பதந் தன்னிலேறிச் சேதிகாணும்
அப்பனே தேகமது வலுத்துப் போகும்
விண்டதொரு மந்திரங்கள் சித்தியாகும்
விசையான நவக்கிரகம் சித்தியாகும்
மண்டலங்கள் சுத்திவரக் கெவுனமுண்டாம்
மார்க்கமுடன் சிவயோகம் வலுவுண்டாமே. (31)

ஆமப்பா தீட்சைவிதி கர்ப்பக் கூறு
ஆதியென்ற கர்ப்பமடா ஆதிகர்ப்பம்
தாமப்பா தன்னிலையாய் நின்றவர்கள்
தயவான அண்டமடா ஞானமார்க்கம்
நாமப்பா கண்டபடி இங்கு சொன்னேன்
நாதாந்த திருமூலர் நன்மையாலே
சோமப்பால் கொண்டதொரு தன்மையாலே
சொன்னேனடா தீக்ஷைவிதி சுருக்கந்தானே. (32)

சுருக்கமுள்ள அண்டவித்தை யார்தான் செய்வார்
சுரூபநிலை பெற்ற ஒரு சித்தன் செய்வான்
உருக்கமுள்ள சிவயோகி மவுனயோகி
உண்மையுடன் அறிந்துமனம் ஒடுங்கி நிற்பான்
திருக்கரியா அந்த யோகி செய்யும் மார்க்கம்
செகத்திலே ஜனித்த தொரு பிண்டந் தன்னை
பெருக்கமுடன் கொண்டுவந்து பூசைபண்ணி
பிணம் பிடிங்கினாற்போல் திரிவான் பாரே. (33)

பாரப்பா கருத்த மடையர் மெத்த
பதிவான ஞானநெறி அறியாருண்டு
நேரப்பா அவர்களிடம் இந்த நூலை
நிச்சயமாய் நீ மகனே காட்ட வேண்டாம்
காரப்பா தீக்ஷையோடே பூசை யிரண்டும்
கருவான நூலெனவே அடக்கம் பண்ணி
மேரப்பா பூசையிலே வைத்துப் பாரு
வேதாந்த சுருதியடா இந்த நூலே. (34)

நூலான நூல் முறையில் பலவும் சொன்னேன்
நுணுக்கமிகுந்த இந்நூல்தான் வெளிவிடாதே
பாலான ருசியுடைய மூலநாயன்
பதிவாக ரகசியமாய்ச் சொன்ன மாக்கம்
காலான காலறிந்து வாசியூட்டி
கமலமென்ற அண்டமதில் கருத்தை வைத்து
மேலான மார்க்கமென்ற பானம் பண்ணி
வேதாந்த பூரணமாயிருந்தேன் பாரே (35)

இருந்து நிலைபெற்றவனே ராஜயோகி
இல்லறத்தைக் காத்தவனே ஜீவன் முக்தன்
வருந்தி மனக் கருவதனால் மௌனம் பெற்ற
மந்திர பஞ்சாட்சரத்தை மனதில் கொண்டு
திருந்த அந்த வாசியிலே மனது பூண்டு
சிவயோகம் சிந்தையிலே தினமும் நோக்கி
அருந்தவமாய்க் குருவினுட பாதங்களை
அனுதினமும் மனதில் வைத்து துணிந்தேன் முற்றே (36)

காலாங்கிநாதர் தீட்சைவிதி - 36 முற்றும்

சூதமுனி சூத்திரம் – 110

மூலமுத லாதார முச்சுடராம் பொருளை
முதறிவி னாலறியும் முக்கோணப் பொருளைக்
காலமிது தலையுமிது காரணமாம் பொருளைக்
கருத்துணர்வுக் கெட்டாத காட்சிதரும் பொருளைச்
சூலமுறு நந்தீசர் சூதமுனிக் கன்று
சொன்னவுப தேசமென்று சுந்தரமாம் பொருளை
ஞாலமுற எவ்வுயிர்க்கு நடுவில் நின்ற பொருளை
நாதவிந்து சிவப்பொருளை நாவிலுணர்ந் திடுவாம். (1)

நந்தீசர் வேதமுனி சூதமுனி யிவர்கள்
நாதனடி போற்றிசெய்து நயந்திருக்கும் வேளை
இந்திரமா லோகமென்ன இரதவித்தை செய்ய
ஏதுவகை யென்றருளி வேதமுனி கேட்கத்
தந்திமுகன் றனைப்பணிந்து உரைத்திடுவார் நந்தி
தாரணியில் உள்ளவர்க்கு சாகாத வரமும்
மந்திரத்தால் அட்டசித்தி யாகும் வரலாறும்
மாற்றதிகம் வருத்துகின்ற வளமாதிபகர்வாம். (2)

திருநீலகண்டவாலை

ஆதியர னாருமையாள் தன்னுடனே அன்பாய்
அருளியசொல் வேமுனிக் கறிவித்தார் நந்தி
சாதிலிங்கந் தன்னிலிரு பதுகழஞ்சு வாங்கித்
தரமாகச் சிறுபயறு போலவே நறுக்கி
நீதிநெறி இலுமிச்சம் பழச்சாறு விட்டு
நேராக வொருசாமம் வெய்யிலிலே வைத்து
சூதில்லாக் கொடிவேலி வேர்கொண்டு வந்து
தூளாக இடித்ததனை வேறாக வையே. (3)

வைத்தபின்பு தனித்தகன்ற வாய்சேரும் பானை
வகைசெய்து இரண்டுகொண்டு வந்ததிலே ஒன்றில்
மெய்த்திடவே கொடிவேலிப் பொடிபாதியிட்டு
மேலாகச் சாதிலிங்கப் பொடியதன்மேல் வைத்து
சித்தாக அதின்மேலும் கொடிவேலிப் பொருளைச்
சிறப்பாகப் பரப்பியதின் மேற்பானை தனக்குக்
கைத்திடாத் தலைவாழைப் பழுப்புமதுவுடனே
காரணமாம் முருக்கிலையும் கைசேர்த்து இடியே (4)

இடித்துஇரு வகைஇலையும் தனிச்சாறு வாங்கி
இதமாக மேற்பானைத் தூரிலே தடவி
வடித்தந்தப் பானைகொண்டு வாய்சேர்த்து மூடி
வாகாகச் சந்துவாய்க் கெழுசீலை செய்து
பிடித்துநீ யுலர்த்தியே வெடித்தவிடந் தனக்குப்
பின்னுமந்த மண்தடவி உலர்த்திவலுச் செய்து
படித்ததொரு அஞ்செழுத்தால் முன்னவனைப் பணிந்து
பாங்காக வுபதேசஞ் செய்தடுப்பி லேற்றே. (5)

ஏற்றியந்தக் கமலம்போல் முப்பதுநா ழிகைதான்
எரியிட்டே யாற்றியதை எடுத்துநீ வைப்பாய்
பாத்திரத்தில் சீலைமண்ணைத்திறந்த தனை நன்றாய்ப்
பார்க்கவே மேற்பானைத் தூரிலே இரதம்
வேற்றுமையாய் இருக்குமதைப் பன்றிமுடி யதனால்
மெதுவாகத் துடைத்தனை வாங்கிவைத்துக் கொண்டு
நாற்றிசையும் புரக்கவே எடுத்தவைக் கெல்லாம்
நன்றாகக் கூட்டும்வகை பேர்சொல்லி நாட்டே. (6)

நாட்டுவேன் திருநாமம் நீலகண்ட வாலை
நந்தியுரைப் படியறிந்து சேர்க்கும்வகை கேளு
கூட்டுவாய் கண்டங்கத் திரியினுட பழத்தைக்
கொண்டுவந்து இடித்தனைத்தனிச் சாறாயெடுத்து
வீட்டில்வைத்துக் கொண்டதற்கு முன்னமே யுரைத்த
வேதாந்தச் சாதிலிங்க இரதத்தை நிறுத்து
ஊட்டுநீ கழஞ்சிக்குக் காற்படிசா றளந்து
உறைஉறைய விட்டதனை வற்றுமட்டு மரையே (7)

அரைத்தெடுத்து மொன்றிலே யடைத்துக் கொண்டே
அன்பாகச் சிவகாமிக் கருட்பூசை செய்து
உரைப்பாக வைத்தவெள்ளித் தகடாக்கி யதிலே
உருவாக நீலகண்ட வாலைதனைப் பூசி
இரைதுவளர்ந் திடுங்கோழிப் புடம்போடத் தானும்
இடுந்தங்கம் மிகுமாற்றுப் பத்தரையே காணும்
வரைத்துயர வைத்தசெம்புத் தகடதிலே பூசி
வார்க்கோழிப் புடம்போட மாற்றுமா றரையே. (8)

ஆறரையுங் காணுமதில் பின்னுமதில் வகைகேள்
அவனிதனில் மானிடர்க்கு மானகற்பம் சொல்வேன்
மாறடைந்த விடத்தலையின் வடக்கான வேரை
வாகாகக் கொண்டுவந்து சாணைதனி லுரைத்து
வீறான நெல்லிக்காய் அளவிலே உருட்டி
மேலான வாலைரசம் பணவெடைகால் கூட்டித்
தேறாத பிணியாளர்க் கேழுநாள் கொடுக்கத்
தீருமெனும் பிணிக்குவகை செப்பிடவு மாமே. (9)

ஆமென்று பிணிக்குவகை சொல்வதுகேள் அப்பா
ஆக்கைதனி லேயெழுந்த வாதம் எண்ப துடனே
நாமென்று வருவாத சூலையறு பதுவும்
நாயினுங்கே டாக்குமந்தக் கிரந்திபதி னெட்டும்
தாமென்ற ஆண்மைகெடுங் குட்டம்பதி னெட்டும்
தரமழிக்கும் மகத்தான பவுந்திரமோ ரெட்டும்
ஏமென்ற அண்டவாத முதல்மூவா றுக்கும்
இதுவாலை கற்பமென இயம்பவிண்ணில் போமே. (10)

விண்ணில்போம் விடுமூல வியாதியா றுடனே
வேகமாய் எழுந்தகுன்மம் பதினாறுங் கூட
மண்ணில்தான் பிறப்பவர்க்குச் சயரோக மனைத்தும்
மாயமென்ன வந்திருக்கும் சன்னிபதி னெட்டும்
கண்ணில்கா ணாதுதவ றுண்டுதான் பீடை
கவுசிக நோய் கிராணிஎட்டும் காமலை சுரமும்
எண்ணித்தான் முடியாத ஈசுரனார் பதத்தில்
இருக்குமுசல் கண்டன்வலி பதினெட்டும் ஏகும் (11)

ஏகுமே பலபிணியுஞ் சகலவியா திகளும்
என்றுரைத்த நந்திபின்னும் இயம்பியதைக் கேளாய்
வாகுடைய மானிடர்கள் ஆக்கையெடுத் தோர்க்கு
வகையாக முன்சொன்ன வாலைதனைச் செய்தால்
பாகுடைய நிதிகோடி திரவியமுண் டாகும்
பண்பாகப் பின்னுரைத்த வாலைகற்பம்கொண்டால்
போகுமே எண்ணமுற்ற நோயான எல்லாம்
பொய்யாது கற்பத்தில் இன்னம்வகை சொல்வோம். (12)

வகைசொல்வோம் கற்பத்தைச் சமாதியிலே யிருந்து
வாகாகக் கொண்டவர்க்கு நரைதிரையு மாறித்
திகையவே மூன்றுகற்ப காலமட்டும் மதன்போல்
செகமுழுதும் புரக்க அருன் அரசராயிருப்பார்
நகையாதே நந்திசொன்ன வாக்கிதுதப் பாது
நாதனா ராணைநிசம் இன்னும்வகை கேளாய்
தசையாதே முன்சொன்ன விடத்தலையின் இலையைத்
தரமாகப் பறித்துவந்து சாந்தெனவே அரையே. (13)

சாந்தெனவே அரைத்ததிலே நெல்லிக்காய் அளவு
சகலகுணம் உனக்குச்சொன்ன நீலகண்ட வாலை
கூர்ந்தரைக்காற் பணவெடையும் கூட்டியா வரையின்
குணமுடைய அஞ்சுவகை மருந்தெடுத்து உலர்த்தி
நேர்ந்துபொடி ஆக்கியதில் வெருகடியும் சேர்த்து
நிறையாகப் பசுவின்வெண்ணெய் அனுப்பானந்தனிலே
காந்தல் நீ நிரிவெடுத்தோர்க் கிருபோது எழுநாள்
கையாரக் கொடுக்கநிற்கும் காசினியோர்க்குரையே. (14)

கங்காளி இரதபற்பம்

காசினியெல் லாம்புரக்கப் பின்னுமந்த முனிக்குக்
கங்காளி இரதபற்பம் வகைசொல்வார் நந்தி
தேசிகனே முன்னுரைத்த சாதிலிங்க இரதம்
சிறக்கவே அரைக்கழஞ்சு குழிக்கல்லில் இட்டு
மாசில்லாக் கண்டங்கத் திரிப்பழச் சாறதிலே
வாகாய்முக் காற்படியும் மூன்றுவட்ட மாகத்
தூசிநீ ராகவிட்டு வற்றுமட்டும் அரைத்துச்
சுருளவே யெடுத்துநல்ல குகைதனக்கு ளாக்கே (15)

ஆக்கியந்தக் குகைக்குள்ளே மணற்றவளை நெய்யை
அரைமட்டும் விட்டுவாய்ச் சில்லாலே மூடி
நோக்கியந்த மாயேழு சீலைமண் செய்து
நொய்தாக எருவடுக்கிச் சேவற்புட மாக
தாக்கியதில் தீமூட்டி ஆறவிட் டெடுத்தால்
தப்பாது படிகநிறப் பற்பமாயிருக்கும்
வாக்கியஞ் சொல் கணபதிக்கும் எள் பயறு தேங்காய்
வடையப்பந் தோசையொடு பூசனையுஞ் செய்யே. (16)

பூசனைகள் செய்தபின்பு இரதபற்பந் தன்னைப்
பூராய மாகவொன்றி லடைத்துவைத்துக் கொண்டு
காசெனவே வெளுத்திருக்கும் வெள்ளீயம் பலந்தான்
கடுகவே உருக்கியது தெளிந்திருக்கும் வேளை
வாசனைசேர் இரதபற்பம் மஞ்சாடி கொடுக்க
மாற்றுயர்ந்த வெள்ளியது காசினிலு மதிகம்
நேசனே தப்பாது கங்காளி பற்பம்
நேராக மானிடர்க்குப் பின்னுமதில் கேளே. (17)

பின்னுமதில் வகைகேளு மானிடரா னவர்க்குப்
பிணிவந்தால் திரிகடுகு சூரணமே செய்து
உன்னும்வெரு கடியளவே சூரணத்தைக் கூட்டி
உறவாக இரதபற்பம் பணவெடைகால் கூட்டித்
தன்னுள்ளே அநுப்பானந் தேனிலா கினுமோ
தாயான பனைவெல்லந் தன்னிலா கினுமோ
மின்னுநோ யாளருக் கேழுநாட் கொடுக்க
மிகுபிணியுந் தீருமிந்தப் பாகந்தா னறியே. (18)

பாகந்தா னறியும்வகை எப்படியோ கேளு
பலபிணிக்குத் தகநீயே அநுப்பானம் எடுத்து
வேகஞ்செய் யிரதபற்பம் பணவெடைகால் கூட்டி
விதமாக விருபொழுது ஏழுநாள் கொடுக்கத்
தாகந்தான் அறவொழிந்து சகலவியா திகளும்
தணியுமே கற்பத்தின் இன்னம்வகை கேளு
தேகந்தான் பழுப்பேறித் தளர்ந்த மானிடர்கள்
சிறுவாலை மதனன்போல் சிறப்பதற்கு மாமே. (19)

மதனன்போலாக வென்றால் சமாதியிலே யிருந்து
வளமான இரதபற்பம் பணவெடைகால் கொள்ள
அதமீறும் புளிப்புடனே கைப்பெல்லாம் நீக்கி
ஆவின்பா லுடன்குறுவை யரிசிச்சோ றுண்ணு
நிதம் பெறவே எழுந்தநரை திரையுமே மாறி
நீணிலத்தில் நூறுகற்ப காலம்வரை இருப்பார்
சுதன்போலவே இரு நூறு ஆனைவலு வுண்டாம்
சோதிதிரு வாணைநந்தி சொன்னபடி செய்யே (20)

சீர்ராமச் செந்தூரம்

செய்யவே நந்திபின்னும் வேதமுனி தனக்குச்
செப்புவார் சீர் ராமச் செந்தூர வகைதான்
வையகமெல் லாம்புரக்கச் சுத்திசெய்த இரதம்
வகையாக அறுபது கழஞ்சிதான் எடுத்து
வெய்யதொரு கெந்தகமும் எடைமுன்போல் கூட்டி
மலான சாதிலிங்கம் பதினைந்து கழகஞ்சி
ஐயமென்று நினையாதே பொன்னரிதா ரத்தை
அன்பாக ஐம்பது கழஞ்சியதில் சேரே. (21)

களஞ்சி ரெண்டு தனித்தஎடை மனோசிலையுங் கூட்டிக்
கடிதான நாகத்தை ஈரஞ்சு வட்டம்
வளஞ்செய்து இலுப்பையெண்ணெய் தனிலுருக்கிச் சாய்த்து
வகைபாகம் நாற்பது களஞ்சியதில் சேர்த்து
உளஞ்செய்த தங்கமது ஒருகளஞ்சியாக
ஒக்க இருநாற்றிருபத் தெண்களஞ்சி எல்லாம்
தளஞ்செய்த எருக்கலம்பால் தன்னிலொரு சாமம்
சாகவே அரைத்துமறு சாறுபுர சிலையே. (22)

புரசிலையும் தும்பையுடன் செருப்படி செம் முள்ளி
புகழாக மாதளையின் பூவுடனே யஞ்சும்
விரசாகக் கொண்டுவந்து வெவ்வேறே யிடித்து
வேறாகத் தனித்தனியே சாறெடுத்துக் கொண்டு
திரசமுற இச்சாறு விட்டொவ்வொரு சாமம்
தீர்க்கமுறச் சொல்முறையாய்ச் சாமம் ஐந்து அரைத்து
கரசமுறப் பின்னுமந்த மாதளையின் பூவும்
கானமுருக் கம்பூவும் கலந்துசமன் கூட்டே (23)

கலந்துசமன் கூட்டியபூ இடித்ததின்சா றெடுத்துக்
கைசேர வொருச்சாமம் பின்னுநன்றா யரைத்துப்
புலர்ந்தநிழற் குள்ளுலர்த்திப் பொடியாக்கி யெடுத்துப்
பூசமுடன் கெங்காசலக் குப்பியது தனக்கு
நிலந்தெரியா தேயேழு சீலைமண்ணுஞ் செய்து
நேராக வேயுலர்த்தி வெடித்திடமும் பார்த்துப்
பெலன்பெறவே பின்னுமதில் அரைத்தமண்ணைப்பூசிப்
பிசகாமல் குப்பிக்குட்பேணிமருந் தடையே (24)

மருந்தான பொடிவகையைக் குப்பியரை மட்டும்
வாகாக அடைத்த தந்த வாய் பலப்பக் கல்லால்
திருந்தவே மூடியதை மேலும் அரை மண்ணைத்
திறமாகப் பூசியொரு தாழிதனை யெடுத்து
பொருந்தியதற் குள்நாலு விரற்கனம தாகப்
பொடிமணலை யிட்டதின்மேல் குப்பிதனைவைத்துக்
குருந்தமாய்ப் பின்னுமந்த மணல்தனையே கொட்டிக்
குப்பிக்குள் மறையஇட்டு ஒட்டியடுப் பாக்கே. (25)

ஒட்டியதோர் அடுப்புமிட்டுத் தாழியதன் மேலே
உள்ளாகப் புதையவைத்து முன்னவற்குப் பூசை
கிட்டியன்பாய்ச் செய்தபின்பு தீபமொரு சாமம்
எரியவிட்டுப் பின்கமலம் இருசாமம் எரிப்பாய்
கெட் டியதாய்க் கடுகளரி ஒருச்சாமம் அதற்குக்
[illegible]கணிதமாய் இப்படியே சாமம்நால் எரித்து
விட்ட[illegible]பு ஆறவைத்து மறுநாளில் அங்கே
[illegible]கமோக வயிரவனைப் பூசைசெய்து கொள்ளே. (26)

வயிரவனைப் பூசைசெய்து குப்பிதனை யெடுத்து
வாகாக வுடைத்துள்ளே பார்க்கவேசெந் தூரம்
ஒயிலான முருக்கம்பூ நிறமாக விருக்கும்
ஒன்றிலே பத்திரமாய் அடைத்துவைத்துக் கொண்டு
கயிலாச கிரிதனிலே ஓர்கழஞ்சி யுருக்கிக்
கடுகவதில் மஞ்சாடி செந்தூரம் கொடுக்கப்
பயிலரிய நிறைமாற்று ஒன்பதரை காணும்
பத்தர் வைத்த செம்புக்கு ஆறுகுறை யாதே. (27)

குறையாது செந்தூர விளைவதிகங் கண்டால்
கொடுப்பதுதான் கண்டறிந்து குறைவுசெய்ய வேண்டும்.
நிறையாக விளைவுசற்றே குறைந்துவிட்டு தானால்
நிறையிலேகால் மஞ்சாடி கூட்டுவது நலமாம்
மறைநாலும் ஆராய்ந்து நந்திவகை யுரைத்தார்
வாக்கிதுதப் பாதுநிசம் அரனாணை யுண்மை
திறமான வாதி யென்றும் மாறாம லேதான்
செய்வதுநற் கருமமென்று செப்பியதொப்பனையே. (28)

உப்புக்கட்டு

ஒப்பரிய சூதமுனி நந்தியுரை கேட்டு
உண்மகிழ்ந்தங் கவனுரைப்பான் உப்பையது கட்ட
அப்புமிகுங் கடல் நுரையைப் பொடியாக்கி யதிலே
அரைப்படிக்கு மூன்றுபடி உப்பதனைக் கூட்டிச்
செப்பரிய வெள்ளாட்டுச் சிறுநீரு விட்டுச்
சேர்த்தரைத்தோர் சட்டியின் உள்ளாக்கிப் பின்பு
தப்பாமல் மறுஓடு தான்கவிழ்த்தி மூடித்
தட்டெருவில் புடம்போட்டுத்தா னெடுப்பதாமே (29)

எடுத்திடுபின் செம்புசுத்தி செய்யும்வகை கேளு
எப்படியென் றெண்ணாதே நீலமாம் பூவின்
கடுத்தகருங் காக்கணத்தின் இலையரைத்து வாங்கிக்
களங்கமறத் திறண்ட செம்பைத் தான்பொதிவு செய்து
அடுத்ததொரு அஞ்சுதிறம் முருக்கிலையே பின்னும்
அரியபுன்கம் வேரரைத்து அதனிலும்முன் போல
கொடுத்துருக்க ஈரஞ்சு திறத்திலே செம்பு
சுத்தியாம் சொன்னவகை சொல்லவுமொண்ணாதே (30)

கந்தகக் கட்டு

சொல்லரிய கெந்தகத்தைக் காட்டும்வகை கேளு
தோலையர்கை உகிர் தனிலே வர்ணமதுஏறும்
நல்லமயி லாஞ்சியிலை யிடித்த தனை யரைத்து
நாட்டாவின் தயிர்தனிலே கலக்கவது செய்து
வில்லைபோல ஒருஓடு வட்டமுடன் செய்து
வெளிநடுவில் நாலாறு துவாரமது இட்டு
கொல்லவே கெந்தகமும் அந்தவோட் டினிலே
குழிதனிலே ஓர்கலசம் மேல்வைத்துக் காணே. (31)

காணவைத்த கலசமதில் கவசமது செய்து
கால்விரல் குறையவிட்டுக் கலசமேல் வாயில்
தோணவைத்த கந்தகத்தை யோட்டில் இட்டுத்
தோணாமல் மறுவோடு கவிழ்த்தி மூடிக்
காணமற்ற குழிமறைய மண்ணுமே லிட்டுக்
காட்டாம லெருவடுக்கிக் கனலதனை மூட்டி
பூணவைத்து இப்படியே ஈரஞ்சு வட்டம்
புடத்திலிட்டுக் கட்டிய கந்தகத்தைச் சேரே (32)

சேரப்பா நாகமஞ்சு கழஞ்சு கொண்டு
செப்பனவே கிண்ணமொன்று செய்த பின்பு
தேரப்பா அரிதாரம் சாதி லிங்கம்
திறமான பச்சை நிறத் துரிசுடனே யிரதம்
காரப்பா கட்டிவைத்த கெந்தகத்தைக் கூட்டிக்
கண்டுகொள்ள வகைதனக்கு ஒவ்வொரு கழஞ்சு
சாரப்பா ஐங்கழஞ்சு குழிக்கல்லி லிட்டுத்
தளவாய்நீர் விட்டரைத்துக் குழம்பாகக் கூட்டே (33)

கூட்டியந்தக் குழம்புதனைக் கிண்ணமதி லுள்ளும்
குவிந்தபுறந் தனிலுமதைச் சாந்துபோல் பூசி
நாட்டியல்வாய்ச் சட்டிவைத்து மூன்றுபடி உப்பை
நாகபடம் போல்குவிந்த சட்டிக்கு ளிட்டு
வீட்டியல்வாய்ச் சட்டியது மேலாகக் கிண்ணம்
விளிம்புசற் றேகாண வெளிநடுவில் புதைத்து
தாட்டிமையாய் கிண்ணமதில் விளிம்புதான் மறைய
சார்வாகத் துணிமண் செய்து மணலடுப்பில் ஏற்றே. (34)

அடுப்பிலே வைத்தவுடன் ஐங்கரற்குப் பூசை
அன்பாகச் செய்துகொண்டு நலத்தேக்கின் இலையைக்
கடுகவே இடித்ததிலே நவச்சாரமிட்டுக்
கலப்பில்லாத் தனிச்சாறு மூன்றுபடியெடுத்துத்
தொடுப்பாக வனல்மூட்டி யெரியிடுமவ் வேளை
சுருக்காகச் சலமூன்று படிவற்றிப் பின்பு
வெடுப்பாக எரித்திடுநீ பதினைஞ்சு கடிகை
வெந்தாறி யெடுத்திடு செந்தூர மாமே. (35)

செந்தூரந் தன்னையெடுத்து முன்னாக வைத்துச்
சிவகாமி பூசனையும் அருச்சனையுஞ் செய்து
அந்தரங்க மாயொன்றில் அடைத்துவைத்துக் கொண்டு
ஆறவைத்த வெள்ளிபண வெடையேழு கூட்டிச்
சிந்தனையாய்ச் சுத்திசெய்த செம்புதனில் மூன்றும்
சேர்த்துஒரு கழஞ்சியதாய் உருக்கியபின்னெடுத்து
வந்தனையாய்ப் பின்னுமதை உருக்குமுகந் தெளிந்தால்
வைத்திருக்கும் செந்தூரம் மஞ்சாடி சேரே (36)

மஞ்சாடி சேர்த்திடமாற் றேழரையும் காணும்
மாதவத்தோன் சூதமுனி வாக்கிதுதப் பாது
அஞ்சாதே பரமகுரு ஆணையுண்டு நிசமே
அதுவறிந்தால் துரிசுசெம் பாகும்வகை கேளு
மிஞ்சுவே வெங்காரம் துரிசுமொன்றாய்க் கூட்டி
வெண்ணெய்தனி லேயரைத்துக் குடகரியில் வைத்துத்
தஞ்சவே உருக்கவந்தத் துரிசினிலே பாதி
சுத்தியுள்ள செம்பிருக்கும் சொல்ல இன்னங் கேளே (37)

கேளப்பா இன்னுமந்த நாகமதின் வகையைக்
கெடியாக இலுப்பைநெய் யதனைவைத்துக் கொண்டு
நாளப்பா இருக்குமந்த நாகத்தை உருக்கி
நாலுவட்டம் எண்ணெயிலே சாய்த்துப்பின் னெடுத்தால்
தூளப்பா லேகடந்து நாகம்வெளுத் துப்போம்
சுத்தியாய் இருக்குமதில் கழஞ்சுபதி னைஞ்சு
ஆளப்பா வில்லையின்காய்க் குடுக்கையுமூ டியுமாய்
அடைவாகச் செய்திரத மெடையொப்பா யடையே. (38)

அடைத்திடுநீ பத்திலொன்று தங்கந்தான் கூட்டி
அதற்கிணங்கக் குகைதனையுண் டாக்கியந்தக் குகைக்குள்
உடைத்தகல்லுப் பிந்துப்பு நவரச்சாரம் தானும்
உள்ளுறவே மூன்றெடையுஞ் சமனாகக் கொண்டு
புடைத்தெழுந்த வெலுமிச்சம் பழச்சாற்றி லரைத்துப்
பூணவே யொருபங்கு குகைக்குள்ளே பூசி
சடைத்திடா தேகுகையை வெயிலிலே வைத்துத்
தப்பாம லேகுகையை வேறுவைத் துணர்த்தே. (39)

உணர்த்தியெடுத் தம்மருந்தைப் பொடியாக்கிக் குகைக்குள்
ஒருவிரற் கனமாகப் பொடிபரத்தியிட்டு
இணக்கமாய்க் குடுக்கைதனை பொடியதன்மேல்வைத்து
இறையளவு மதின்மேலும் பொடியதனைப் பரப்பி
வணக்கமுடன் மண்சில்லால் வாயதனை மூடி
வகையாகக் குகைக்கேழு துணிமண்ணுஞ் செய்து
பிணக்கறவே குகையுணர்த்தி வெடித்தஇடம் தனக்குப்
பின்னுமந்த மண்பூசிப் பிடத்திடமுஞ் செய்யே. (40)

பிடமாக வொருமுழத்தில் தணிவாக நீளம்
பிந்தாதே குழியெடுத்துப் பாதிப் பிடம் எருவைப்
படமாக வடுக்கியதின் மேற்குகையை வைத்துப்
பாங்காக குழிமறைய மேலும்எருப் பொதிந்து
அடைவாக எரிமூட்டி யேழுநாள் வரைக்கும்
ஆறாதே புடத்திலிட் டாற்றிநீ யெடுத்துத்
திடமாகச் செந்தூர மிருக்குமதை யெடுத்துத்
தீர்க்கமுற வயிரவற்குப் பூசை மிகச் செய்யே. (41)

தீர்க்கமுற வயிரவற்குப் பூசை செய்த பின்பு
செந்தூரந் தனைப்பரணிசிமிழி வைத்துக்கொண்டு
ஆர்க்கமுடன் ஒரு கழஞ்சி வெள்ளிதனை உருக்கி
அதினிடமாய்த் தெளிவினிலே பணவெடைசெந்தூரம்
ஏர்க்கையாக் கொடுக்கையில்மாற் றெட்டரையுங் காணும்
ஈசுரர்மேல் ஆணையிது தப்பாது உண்மை
நீர்க்கமென்று நினையாதே சூதமுனி உரைத்தார்
நிசமாக வுண்டாகு மின்னவகை கேளே. (42)

கெந்தகத் தயிலம்

உண்டாகுங் கெந்தக்த்தைத் தயிலவகை கேளு
ஊரிலுள்ள ஞானியண்டம் ஐம்பதுதான் எடுத்து
விண்டந்த வெள்ளத்தை விட்டாவி யேத்தி
வெண்கருவை நீக்கி மஞ்சட் கருவாக வெடுத்து
தண்டாகுஞ் சட்டியிலே யிட்டடுப்பி லேத்தித்
தணிவாக வெரிமூட்டி ராவியினால் கருக்கப்
பண்டாதி யருளாலே வருந்தயிலந் தன்னைப்
பண்பாக வெடுத்தபின்பு கெந்தகத்தை வாங்கே. (43)

கெந்தகத்தை மூன்றுபங்கு பசுவினெய்யிற் பாலிற்
கெட்டியாக முன்போலே சுத்தியது செய்து
சிந்தாதே பொடிசெய்து சீலைதனிற் பரப்பித்
திரியாகத் திரித்தண்டத் தயிலத்திற் றுவைத்து
பந்தமாய் அனல்மூட்டித் தலைகீழாய்ப் பிடித்துப்
பாத்திரத்தைக் கீழ்வைத்துப் பாங்காக வேந்தி
வந்ததொரு தைலத்தை யொன்றிலே யடைத்து
வாகாகப் பின்னுமொரு வகைபகர லாமே. (44)

கருவாக இந்தமுறை யறிந்திருந்த பேர்கள்
களங்கமுடன் நிறுத்துமாத் துக்குறைந்தபொன்னை
உருவாக வேயிந்தத் தயிலமதிற் பொன்னை
உள்ளாக்கி யெடுத்துவைத்து ஒருதரம் தான் உருக்கத்
திருவாக நிறம்பசுமை யாகிமாற் றேறும்
செப்பினோம் பின்னுமதில் செய்யும்வகை கேளு
துருவான சொறிசிரங்கு நோய்வாதை தனக்குத்
துளசியிலை தனிற்கொடுத்துத் தொகுத்துநீ பாரே. (45)

வங்கச் செந்தூரம்

தொகுத்துநீ பார்க்கவென்றால் வங்கவகை தனிலே
சுருதியுள்ள செந்தூரம் சொல்லுவேன் கேளு
வகுத்தபடி வருடம்நூற் றிருபதுதான் சென்ற
வளமாக நிற்குமந்த வேம்பினுட பழத்தை
வெகுத்தமுடன் கொண்டுவந்து இடித்ததன்சாறெடுத்து
வேறுகலப் பில்லாமல் விரும்பி வைத்துக் கொண்டு
பகுத்ததிலே பின்னுமொரு பாத்திரத்தை வாங்கிப்
பாங்காகக் கருவங்கம் உருக்கியதில் சாயே. (46)

உருக்கியந்த வங்கத்தை மூவேழு வட்டம்
முன்சொன்ன சாறதிலே தானுருக்கிக் கொண்டு
தருக்கியே யெடுத்ததிலோர் சட்டியிலே யிட்டுத்
தாளகமுந் தான் கூட்டித் தனித்தடுப்பி லேற்றி
நெருக்கிநா யுருவிக்கம்பில் வறுத்துவங்கம் நீற்றி
நேர்குமரிச் சாற்றிலொரு சாமந்தான் அரைத்துத்
திருக்கிசைந்த குகைக்குளிட்டு எருவிலே வைத்துச்
சேவலின் புடமாக இடுவதுவு மாமே (47)

சேவலந்தப் புடமானத் தினமிரண்டு வட்டம்
திறமாக முன்சாற்றி லரைத்துமிரு பதுநாள்
ஏவலுடன் புடம்கெசம்பத் தொன்றுகுறை யாமல்
இட்டிடவே செந்தூரம் முருக்கம்பூ நிறமாம்
ஆவலுடன் ஒருகழஞ்சு வெள்ளிதனை யுருக்கி
அதுதெளிவில் பணவெடைசெந் தூரமது கொடுக்க
நீ வலிமை யாகாமற் றேழரையுங் காணும்
நின்மலமாந் திருவாணை வங்கவகை யிதுவே. (48)

ஆவரைப் பட்டைத் தயிலம்

இதுதனிலுஞ் சுருக்காக இன்னமொரு வகைகேள்
இந்நிலத்தி லாதிமருந் தாவரையின் பட்டை
ததிகொண்டு வந்துலர்த்திப் பானைதனி லிட்டுத்
தாழவே யக்கணந் தயிலமது தன்னை
மெதுவாக இறக்கியதை விரும்பி வைத்துக் கொண்டு
மேலான கோழிமுட்டை வெண்கருவை யதிலே
மதுவாக வுடைத்தபின்பு வடித்ததனைக் கலந்து
வசமாக்கிச் செய்தபின்பு அரிதாரம் வாங்கே. (49)

வாங்கியே அரிதாரம் தட்டத்தில் தயிலம்
வாகாகவே புரட்டி வெயிலில் வைத்தால்
பாங்கான செந்தூரம் ஆகுமதை யெடுத்துப்
பசுமையாய் வைத்தவெள்ளி தன்னிலொரு கழஞ்சு
ஏங்கியே யுருக்கியது பணவெடைசெந் தூரம்
ஏற்கனவே கொடுக்கமாற் றேழரைதப் பாது
நீங்காதே சூதமுனி உரைத்தமொழி யுண்மை
நிசமாகுங் கண்டறிந்து தெளிந்ததனைப் பாரே. (50)

கெந்தக மெழுகு

பாரப்பா கெந்தகத்தின் மெழுகதனைச் சொல்வேன்
பண்டிதமே பார்க்க வென்றா லிதையுந்தான் பாரு
வாரப்பா வெள்ளாட்டுக் கொழுப்பு நெய்யை
வாங்கியே அயக்கரண்டிக் குள்ளே யிட்டு
சேரப்பா கெந்தியது பலமும் மூன்று
தீயிலே வைத்தூதி யுருக்கி நன்றாய்க்
காரப்பா கண்டங்கத் திரிப்பழச்சாற் றாலே
கைமுறையாய்ப் பதினைந்து தரந்தான் சாயே. (51)

சாய்த்தபின்பு அதை நீ குட்டித் தக்காளிச் சாற்றில்
சாய்த்திடுவாய் முன்போலே பதினைந்து தரம்தான்
தோய்த்தெடுத்த பின்குமரிச் சாற்றிலுமப் படியே
தொகைநாற்பத் தஞ்சுதரம் மூன்றுவகைச் சாற்றில்
ஏய்த்திடவே சாய்க்கவே மெழுகாகுஞ் சொன்னேன்
இதையெடுத்துப் பரணிதனி லேயடைத்துக் கொண்டு
வாய்த்திடவே ரசிதத்தை ஐம்பதெடை யுருக்கி
மயனமோர் எடை கொடுக்க மாற்றுமே ழரையே. (52)

ஏழரையாம் இம்மெழுகில் பணவெடைகால் எடுத்து
ஏற்கவே பரங்கிப்பட்டைச் சூரணத்தில் நாளும்
நாளிருப திருபோதும் தவறாதே கொடுக்க
நாட்டோர்க்கு வருகிரந்திப் புண்சூலைப் புண்ணும்
பாழாகுங் கருங்குட்டம் தேகம்புள்ளி பூச்சி
பற்பாம்புத் தடிப்பும்வெடி சிரங்குசொறி யிவைகள்
தூளாகப் பறந்தோடும் பொன்போலாம் உடம்பு
தொடர்ந்துபுளி புகையிலையுந் தள்ளிவிடச் சொல்லே. (53)

கெந்தித்தயிலம்

சொல்லுவேன் சூதமுனி நந்தியுரைப் படியே
சுருக்காக இன்னமுந்தான் கெந்தகத்தின் தயிலம்
வல்லமையாய்ச் சுத்திசெய்த கெந்திபலம் எட்டு
மயங்காதே கல்வத்தில் பொடியாகச் செய்து
கொல்லவே ஈருள்ளிக் காய்ச்சாறா ழாக்குக்
கொடுக்கவே சுருக்காகக் குறுகவிட்டே யரைத்துச்
செல்லவே யொருச்சாமம் நன்றாக ஆட்டிச்
சிதறாமல் வைத்துவைத்து மறுநாளும் கேளே. (54)

மறுநாளும் சாமம் ஒன்று சாறாழாக்கு
வற்றவற்ற விட்டரைப்பாய் கையோ யாமல்
செறுகாலே தினந்தோறும் அரைப்புச் சாமம்
செப்பினேன் சாறாழாக்குக் கொண்டு
குறுகாதே யிப்படியே நாற்பத் தோர்நாள்
கூர்ந்தெடுத்துப் பதத்தோடே யரைத்துமெழுகெல்லாம்
வெறுகாமல் மெழுகெல்லாம் ஒரளவே யாக
மிளகளவாய் ஒழுங்காக வில்லையது கட்டே (55)

கட்டியே நிழலுலர்த்தாய் நாலு நாள்தான்
கதிரினிலும் காற்றினிலும் மூன்றுநாள் தான்
திட்டமாய்ச் சுக்காகக் காய்ந்த வில்லை
சிறுகலசத் தினிலடக்கிக் கவசவாய்க்கு
மட்டளவாய்ச் சிட்டிசெய்து வாயிணக்கி மூடி
மண்ணேழு சந்துவாய் மறையவே பூசிச்
சட்டமாய் மேல்கவிழ்க்குஞ் சட்டித் தூரில்
தமரொருமூன் றிட்டதற்கு தக்ககுழி கிள்ளே. (56)

குழிகிள்ளிக் குளிக்குள்ளே சேறும் பண்ணிக்
குழிவாய்க்கும் பீங்கானை நடுவே வைத்து
நெளியாமல் வாயோடு சட்டி தன்னை
நீங்கல்இல் லாமலே பதித்து மூடி
வளிப்பட்டாய் வாயோடு கழுத்து மட்டும்
மண்ணும் சாணமும் பிசைந்து ஏத்தித்
துளிவிழா வாயோட்டில் சிறிய சட்டித்
தூரிலே தமரிட்டுத் துரும்பை வையே. (57)

துரும்பிட்ட சிறுசட்டி வாயோட் டின்மேல்
சோராமல் மலர்த்திவைத்துச் சந்து வாய்க்குத்
திருந்தவாய் மண்பூசிச் சீலை செய்து
திறமாகச் சிறுசட்டிக் கழுத்து மட்டும்
பொருந்தவே சாணிமண்ணும் பிசைந்து ஏற்றிப்
புகைபொசியா மல்எங்குங் கெட்டி பண்ணி
மருந்தடைத்துச் சிட்டியிட்ட கலசந் தன்னை
மையத்தில் தமர்நிற்கக் கவிழ்த்து மூடே. (58)

மூடியே சிட்டியின்கீழ்க் கலச வாய்க்கு
முன்போலே சீலைமண்ணும் முறையாய்ச் செய்து
நாடியே சிட்டியின்மேல் கழுத்து மட்டும்
நன்றாகச் சாணிமண்ணும் ஏற்றிப் பூசி
போடு நீ பொடிமணலை விரற்கனமாய் எங்கும்
பூமிமட்டுஞ் சரியாகப் பரத்தி யிட்டுத்
தேடு நீ எருவுமியும் கலசந்தான் மறையச்
சிறுகவொடித் திட்டதின்மேல் தீயைப் போடே. (59)

*தீமூட்டித் தேவியைநீ பூசை பண்ணு
சிதம்பரத்தைத் தியானித்துத் தெண்ட மிட்டு
நேயவிரு சாமம்வரைப் புடமாய் வெந்து
நீறியே ஆறியபின் எடுத்துப் பார்க்கத்
தூயதொரு தேன்போல தயிலந் தானும்
துளைவழியே பீங்கானில் இறங்கி நிற்கும்
வாயமாய்க் குப்பிக்குச் சீலை செய்து
வாங்கியே தைலத்தை யடைத்து வையே.* (60)

*வைத்திருக்குந் தைலத்தின் மகிமை சொல்ல
வாயுமுண்டோ நாவுமுண்டோ மாணாக் காகேள்
பொய்த்திட்டம் போக்கியல்லோ தேவி நாதம்
பொருளாக வேணுமென்றால் பணவெடைதங்கத்தை
மெய்த்திடவே யுருக்குமுகந் தெளிவு பார்த்து
மேலான தைலமொரு துரும்பில் தோய்த்து
கைத்திட்ட மாக்கொடுக்கச் செம்பே யாகும்
கைலாச கிரிஎடைநாற் பதுக்குத் தாக்கே.* (61)

*தாக்கியே உருக்கியிடத் தசமாற் றாகும்
தாரணியோர்க் குக்கரிய சீரகச்சூ ரணத்தில்
தூக்கியே தைலமொரு பணவெடையுங் கூட்டித்
தொந்தித்து இருபதுநாள் இருநேரந்தான்
ஆக்கியே கொடுக்கவதில் தீரும்வியா திகேள்
ஆக்கைதனில் உள்ளபுழுப் பூச்சி குட்டம்
மூக்கிலே நின்றிருக்கும் மக்கிருமல் தேமல்
மொழிமொழிக்குக் கட்டியதோர் சூலையுமே போமே* (62)

*போகுமே விசக்கடிகள் விசநீர்ப் புண்கள்
பொல்லாத புற்றும்அரை யாப்புப் புண்கள்
ஏகுமே குறைகளெல்லாம் வெள்ளைக் குட்டம்
இந்திரகண்டி முயலகனும் மாதர்ப் புத்து
வேகுமே தைலத்தின் வாடை பட்டால்
வெகுதூரம் ஓடுமடா பத்தியமே வேணும்
நாகமே தரித்தசிவன் ஆணை சொன்னேன்
நந்தியுரை தப்பாது நவின்றிட் டேனே.* (63)

சூதக்குளிகை

நவின்றிடுவேன் சூதமுனி குளிகை யொன்று
நல்லோர்கள் தமக்காக வேண்டி யேதான்
கவின்றிடவே விளாங்காய் அளவி லேதான்
கரண்டக்மொன் றிரும்பாலே யுண்டு பண்ணி
சவின்றிடவே முன்சொன்ன வாலைரசம் தன்னைத்
தவிராது பதின்கழஞ்சு கரண்டகத்தி லிட்டு
உவின்றிடவே மணிப்பாலைப் பாதி மட்டும்
ஊட்டியே மேல்மூடி சேர்த்து மூடே. (64)

சேர்த்துநீ மூடியபின் சந்து வாய்க்குச்
சீலைமண் ணேழுசெய் துலர்த்தி நன்றாய்
பார்த்துநீ ஒரெருவிற் புடத்தைப் போடு
பதறாமல் ஆறியபின் சீலை மண்ணைப்
பேர்த்துநீ எடுத்துமுன் போல மணிப் பாலைப்
பின்னும்அரை வா யிட்டரைமண் பூசிக்
கோத்துநீ இரண்டெருவில் புடத்தைப் போடு
குளிரவே யாறவிட் டெடுப்ப தாமே. (65)

எடுத்தெடுத் திப்படியே புடந்தோ றுந்தான்
எரியேற்றிப் போடப்பா பத்து மட்டும்
அடுக்கடுக்காய் மணிப்பாலை விட்டு விட்டு
அஞ்சாதே புடம்போலச் சன்னிக் கும்பார்
முடுக்காகச் சன்னித்த பதத்தைக் கண்டு
மூட்டப்பா மணிப்பாலை முங்கவிட்டுத்
தொடுப்பாகக் கனபுடமே போடு சொன்னேன்
சூதமொன்றாய் உருகியுள்ளே மணியாம் பாரே (66)

மணியான தறியவென்றால் திரளும் போது
மதயானைக் கன்றதுபோல் வீறிட் டேசாம்
துணிவாக நில்லப்பா பயப்ப டாதே
சூடெல்லாம் ஆறியபின் கரண்ட கத்தைத்
தணியாகக் குலுக்கிப்பார் கடக டக்கும்
சச்சிதா னந்தமென்ற ரூப மாகும்
பணியாய்நீ கரண்டகத்தை யுடைத்தெ டுத்துப்
பராபரையைப் பூசைசெய்து மணியை வாங்கே (67)

வாங்கியதோர் மணியினுட மகிகை தன்னை
வல்லோர்கள் அறிவார்கள் மற்றோர் காணார்
ஏங்கியே திரியாதே மணியைத் தொட்டு
எட்டெட்டும் ஆடலாம் ஈச னாவாய்
ஓங்கியே வெண்ணாகம் உருகும் போது
ஊட்டிப்பார் நீர்வாங்கி மணிதான் துள்ளும்
தாங்கியே எடுத்துநீ பாலிற் போடத்
தகைதீரப் பாலெல்லாம் குடிக்குந் தானே. (68)

தானென்ற விம்மணியை வாயி லிட்டுத்
தணலிலே சுடாமல் நடக்க லாகும்
பானென்ற வஸ்துண்ணும் இரத்தம் உண்ணும்
படைமுகத்தில் சென்றிடிலோ குண்டே றாது
தேனென்ற மொழியாரைப் புணரும் போது
சிதறாது விந்துகட்டித் தம்பிக் கும்பார்
நானென்ற ஆண்மையுண்டாம் அம்பு சாய்க்கும்
நன்றாக மந்திரமும் சித்தி யாமே. (69)

கெந்தகச் செந்தூரம்

சித்திக்க வின்னமொரு முறையைக் கேளு
தேவியது நாதமப்பா கெந்தி கெந்தி
ஒத்தித்த செந்தூர மாகச் சொல்வேன்
ஒருபலமே சுத்தித்த கெந்தி வாங்கிப்
பத்திக்க அயக்கிண்ணிக் குள்ளே வைத்துப்
பாகமாய் மயிலெண்ணெய் நிரம்பவிட்டு
உத்திக்க அடுப்பிலிட்டுத் தீபங் கீழே
உண்மையாய்க் கிண்ணி நடு வெரிப்ப தாமே. (70)

எடுத்திடுநீ தீபமணை யாமல் நன்றாய்
எரித்திடவே உருகிவற்றிச் செந்தூ ரிக்கும்
பிரித்துநீ ஆறவிட்டுச் செந்தூ ரத்தைப்
பேணியே பரணிதனில் எடுத்த டைப்பாய்
தரித்திரம்போம் நவலோகம் பழுக்கும் பாரு
சத்தியமே குன்றிஎடை பாலிற் கொள்ள
விரித்தகதிர் ஒளிபோலக் காந்தி யுண்டாம்
வேண்டியே தினந்தோறும் சாதிப்பாயே. (71)

சாதிக்க மண்டலத்தில் தேக சித்தி
தப்பாது நோயெல்லாந் தட்டுண் டேபோம்
வாதிக்க வேண்டு மென்றால் செந்தூ ரத்தை
வாங்கியே யாடகம்பத் தினில் தாக்கு
பேதித்துச் செம்பாகும் பசுத்துப் போகும்
பிசகில்லை சகத்திரமாந் தொந்தம் ஏறும்
ஊதித்தான் பகுத்தறிநீ நவலோ கங்கள்
ஒன்பதிலும் ஓடுமிந்தத் தங்கம் தானே. (72)

தங்கமென்ற பசுந்தங்கம் பலமெ டுத்துத்
தாக்கடா செயநாகம் பலம தொன்று
பொங்காத சூதமது பலந்தா னொன்று
போடுகெந்திச் செந்தூரம் பலந்தா னொன்று
மாங்காதே இந்நாலுங் கல்வத் திட்டு
மாட்டியரை யரசன்பூக் கொன்றைப் பூவும்
சிங்கார மாதளம்பூப் புரசம் பூவும்
செப்பினேன் முருக்கம்பூச் சாறிதஞ்சே. (73)

அஞ்சான சாற்றா லே யஞ்சு நாள்தான்
அரைத்தெடுத்து உலர்த்தியே குப்பிக் கேற்றித்
துஞ்சாதே வாலுகைதாம் எந்திரத்தில்
சேராதே மூன்றுநாள் தீபம் மூன்று
மிஞ்சாதே எரித்திடு நீ நாற்பத்துமுக் கோண
வீடுநடுத் தேவிதனைப் பூசை பண்ணி
நெஞ்சாரத் தியானித்துக் குப்பி தன்னை
நிதானமாய் ஆறவிட்டு உடைத்து வாங்கே. (74)

உடைத்துப்பார் செந்தூரம் மாதளம்பூ
ஒப்பல்ல சிமிழிலடை உமையாள் மெய்க்கப்
படைத்தசதா சிவன்மெய்க்க நூல்கள் எல்லாம்
பாடிவிட்ட நாதாக்கள் மனது மெய்க்கக்
கிடைத்தநந்தி சூதமுனி வேதா மெய்க்கக்
கிருபைபெற்ற மன்னோர்கள் மனது மெய்க்கக்
கொடைகமழும் வீசமெடைச் செந்தூரந்தான்
கொடுத்துப்பார் ஒன்பதிலும் கோடிபரி யாமே. (75)

பரிகோடி யாகுமிதிற் றீப தூப பரிசலே
பணவேதை நான்குங் காணத்
தெரிசனமாய்ச் சூதமுனி சொற்போகாது
சிந்தையுள்ளே அகண்டவெளிசோதிகண்டால்
கரிசனமாய்ப் பெரியோர்க்குத் தொண்டு பண்ணிக்
கள்ளமின்றிச் சொன்னபடி கேட்டுநில்லு
பிரிசமதாய்-வாக்குரைப்பார் கருவுஞ் சொல்வார்
பிரட்டானால் சாபமிட்டுப் போடு வாரே. (76)

போடுவார் சாபத்துக் காளா காமல்
பொன்னடியே தெண்டனிட்டு வாக்குங் கேட்டுத்
தேடுதள செந்தூரம் பாலிற் கொள்ளச்
சிவத்தியானம் மறவால் எடைவீ சந்தான்
நாடியொரு போதுண்ணத் தேக சித்தி
நரைபோகும் திரைபோகும் ஒருச்சாமத்தில்
ஓடுமே பழவினைகள் எல்லாம் தூளாய்
உகமுடிந்து போச்சுதடா உண்மை தானே. (77)

உண்மையாந் தேகசித்தி யாக வென்றால்
உப்போடு புளிபுகைகள் ஒன்று மாகா
வண்மையாங் கருங்குருவைச் சோறா
வின்பால்மற்றொன்றும் ஆகாது சீனி யாகும்
தண்மையாய் மண்டலமே கொண்டா யானால்
சதாசிவன்போல் கற்பாந்த காலம் காண்பாய்
பண்மையாய் நோய்கொண்ட மாந்தர்க் கெல்லாம்
பாலோடு காரசாரவுப்பு மாமே. (78)

ஆகாது புகையிலையும் புளியும் ரெண்டும்
அகற்றினால் மண்டலங்கால் தேனிலேதான்
வாகான செந்தூரம் எடைவீ சந்தான்
மத்தித்துக் கொண்டிடநோய் மாண்டு போச்சு
ஏகாநா லாயிரத்து நானூற்று நாற் பத்தெட்டு
நோயும் பறந்தெங்கே போச்சு
பாகான பண்டிதம்பார் நந்தி சொன்ன
பரிச்செந்தூ ரங்கருவாய்ப் பார்த்துச் செய்யே. (79)

சகலசரக்குங் கட்ட

செய்திட்ட வைத்தியன்மகன் வாதி யாவான்
சேருகிற சரக்கையெல்லாங் கட்டக் கேளு
வைத்திட்ட அடிமுடியின் வெடிநீர் தன்னை
மடக்கியே மூன்றுதிரம் வற்ற நீராம்
உய்த்திட்ட உமியோட்டில் தோய்த்து வாட்ட
உறவான சரக்கெல்லாம் கட்டிப் போகும்
கைத்திட்டம் சவ்வாது காரம் கூட்டிக்
கைமுறையாய் உருக்கிப் பார்புகைந்தி டாதே. (80)

புகையாத சரக்கெடுத்து நவலோகத்தில்
பூட்டடா உருகுமுகந் தெளிவு பார்த்துத்
தொகைசெய்து அஞ்சாறு மாற்றுக் காணும்
சொன்னமுறை பொய்யாது சுரோணிதத்தா லாட
வகையீதென் றறிந்துசெய வல்லீ ராகில்
மாற்றதிக மாகுமிது சத்திய வாக்கு
திகையாதே நாதவிந்தை மறந்தி டாதே
தீர்க்கமாய்ப் பரங்கிவைப்பு நிகழ்த்து வேனே. (81)

பரங்கி வைப்பு

நிகழ்த்தலாங் கல்லுப்புப் படியிற்பாதி
நினைவாக வாங்கியொரு பாண்டத் திட்டு
மகத்துவமாம் இரதமொரு விராகன் பத்து
வளமாகக் குகையிலிட்டு நடுவேவைத்து
பகத்தவள வல்லிதனை நீற்றி மற்றோர்
பாண்டத்தில் தடவியதின் மேலே மூடித்
தகப்படவே அடுப்பேற்றி யெரிநேரப்பா
சாமம் மூன்றினில் தவள பற்பமாமே, (82)

ஆகியதோர் பற்பமது விராகன் நாற்பான்
அடைவான வெடியுப்பு விராகன்பத்து
பாகமுறும் படிக்காரம் வீராகன் அஞ்சு
பரிவான நவச்சாரம் விராகன்ரெண்டு
மேகநிறம் போற்றுரிசு விராகன் ரெண்டு
வெள்ளை யொரு விராகனிவை யெல்லாங்கூட்டி
யோகமுடன் கல்வத்தி லரைத்துப் பீங்கான்
ஊட்டியோர் பகல்முழுதும் உலரவையே. (83)

உலரவைத்த மருந்ததனை யினிதின் வாங்கி
ஓரேழ்மண் ணாடையிட்ட குப்பிதன்னில்
நிலவியிடப் படுபாதி யடைத்துக் கொண்டு
நீடியதோர் வள்ளவாய்ச் சட்டி தன்னில்
நலமுடைய வாலுகா எந்திரங்கள்
நால்விரல்மண் ணிட்டதன்மேல் குப்பிநாட்டி
இலகுகழுத் தளவும்பொடி மணல்மேல் கொட்டி
எடுத்ததனை யடுப்பேற்றி யெரிப்பதாமே. (84)

எரியிடுந் தீவிபரம் சொல்கிறேன்கேள்
இலங்கியதீ பாக்கினியோர் எட்டுச்சாமம்
உரியகம லாக்கினிநா லிரண்டு சாமம்
உற்றகா டாக்கி னியோர் எட்டுச்சாமம்
பிரிவுறவே மூன்றுநாள் எரிநே ரப்பா
பிசகாமல் தீயெரிக்கப் புகைமே லோடிக்
கருவாகிக் கழுத்துமுதல் பாதி மட்டும்
கனதேங்காய் போலவுந்தான் கட்டுந்தானே. (85)

கட்டியிடும் நேரம்பார்த் திறக்கி வைத்துக்
கலங்காமல் குப்பிதனை யெடுத்துக்கொண்டு
திட்டமுடன் சீதளமாய் ஆறவிட்டுத்
திறமாக வுடைத்தெடுத்த வீரந்தன்னை
மட்டறவே தராசிலிட்டு விராகன் நாற்பான்
வளமாக நிறுத்துமோர் கல்வத்திட்டு
இட்டமுட னாங்கதனிற் சேர்க்கும்
பஞ்ச பாசாண வகைவிபரம் இயம்புவேனே. (86)

இயம்பியதோர் தெட்டிப் பாசாணம் விராகனோ ரைந்து
துரிசுசிலை யோரைந்து வெள்ளையோ ரைந்து
நயம்பெறவே கெவுரியைந்து தார மைந்து
நன்றாக வேயைந்தும் வீரத்தோடு
பயந்தவிர அரைத்ததையோர் பீங்கானி லூட்டிப்
பங்கய நாயகன் கிரணம் படர்ந்து பாய்ந்து
தயக்கமுறும் நாள்முழுதும் உலர வைத்துத்
தவறாமல் முன்போல குப்பிக் கேத்தே. (87)

ஏத்தியெரி வாலுகா யந்தி ரத்தில்
எரியிடுந்தீ விபரம் முன்போல் எரிப்பதாகும்
சாத்தியே சாமமிரு பத்து நான்கு
தவறாமல் எரித்தெடுக்கப் பரங்கி யாகும்
ஏத்தமிகும் பாசாணம் பதினெட்டுக்கும்
ஏத்தமிதாம் ஆடகத்தை எளிதிற்கொல்லும்
மாத்தறி வாகடம்போல் குருவினாலே
மகாலோக பற்பமந்த வண்ணமாமே. (88)

தங்கக்குரு

வண்ணமாம் ஆடகத்தைக் குருவாய்ச் செய்ய
வாங்கியே தங்கமொரு பலத்த கட்டில்
சொன்னதோர் சவ்வீரம் காற்ப லந்தான்
துஞ்சவே வெண்கருவில் அர்க்கன்பால் விட்டு
மன்னவே கல்வத்தி லரைத்தெ டுத்து
மத்தித்துத் தகடெல்லாம் மறையப் பூசி
கன்னவே ரவிகாட்டி யஞ்சு சுண்ணம்
கருவாலே யரைத்தெடுத்துப் பூசை பண்ணே. (89)

பண்ணியே வில்லையதை யிணக்கம் செய்து
பகலவன்கண் பார்க்கவிட் டெடுத்துவைத்துக்
கிண்ணிவாய் மேல்மூடிச் சந்து செய்து
கிட்டியதோர் உவர்ப்பூவும் கற்சுண் ணாம்பும்
உண்ணவே சில்லிட்டு நன்றாய் மூடி
ஒரேழு சீலைசெய்து உணர்த்திமகிழ்ந் தெடுத்துச்
சண்ணியே முழுக்குழியில் புடத்தை போடு
சத்தியமே நந்தியுரை தங்கந்தான் குருவே. (90)

குருவாகும் பதிகருகித் தகடு நின்றால்
கூசாதே பின்னொரு கால் புடத்தைப் போடு
தருவாகத் திரிபுடமே போட்டா யானால்
சாம்பலாய் வெண்மைநிறக் குருவே யாச்சு
உருவாகும் குருவெடுத்துப் பரணி தன்னில்
ஊட்டியே யடைத்துவைத்து வாம பூசை
அருவாக உருவாகும் திருவு மாகும்
ஆதிகுரு பதத்தையுள்ளே அர்ச்சிப் பாயே. (91)

அர்ச்சிப்பாய் பால்பழங்கள் பலகாரங்கள்
அட்டியில்லா அவல்பொரிகள் பரமான்னங்கள்
நிர்ச்சித்த கெந்தபுட்பம் தீப தூபம்
நேர்வைத்த வத்துவுட கடத்தை வாங்கிக்
கொர்ச்சித்துக் கேசரத்தி லோடித் தாண்டிக்
கிருபைபெற்ற நாதாக்கள் சாபம் தீர்த்து
நற்சித்த னாயிருந்து சகத்திர கஞ்ச
நடுநின்ற குருபதத்தில் நாட்டமூணே. (92)

ஊணியே பராபரைதான் சென்னி சூட்டி
உத்தமியே சத்தமியே உமையே யென்னே
ஆணியாய்ச் சக்கரமெல் லாமு ருண்ட
அண்டவெளி குண்டலியின் தீயாய் என்னே
காணியாய் எவ்வுயிர்க்கும் பிரமப் புள்ளாய்க்
காரணியே கண்ணொளியே கனியே என்னே
பாணியாய் நாதவிந்து மயமாய் நின்ற
பார்பதியே சரசுபதியே அம்மே என்னே. (93)

அம்மையே நால்வேதம் பலகை யாக
ஆறுசாத்தி ரங்கயிறா யமைத்து மேருக்
கொம்மை நடுக் கதிர்மதியைக் காலாய் நாட்டிக்
கொண்டுசிவ கரங்களெல்லாங் குறுக்கே போட்டு
செம்மையொளி மண்டலமூன் றடரு மூலச்
செழுஞ்சுடரே சுழிமுனையாய்ச் சேர்த்துத் தூக்கிப்
பொம்மையாம் இராசிமேற் கட்டி கட்டிப்
பூத்தொடருந் தாரகையாய்ப் பூண்டா ளென்னே. (94)

பூணவே யலங்கரித்த பொன்னூஞ்ச லவர்க்குப்
போதமெல்லா மொழியாக வேதி ரட்டிப்
பாணவே பதினெண்பேர் பாடும் நூலின்
பயனெல்லாம் பஞ்சுமெத்தை யாகச் சேர்த்துத்
தோணவே யந்திரஇந்து வண்ணஞ் சாரந்
துகிலாக வேவிரித்துத் தூவு புட்பம்
ஊணவே நவலோகங் கண்ணொளியை யெல்லாம்
ஒக்கவே நிறுத்தியதி லிருந்திட் டாளே. (95)

இருந்திட்டா ளவளோடு சிவனு மாகி
ஏகபரமாகி எங்கு மாகி
பொருந்தட்ட போக்கியமும் சித்தோ டெட்டும்
புத்திரற்குப் போதிக்கப் பூண்வல் லாயி
திருந்திட் டேகாசமிட்டு விழித்துப் பார்த்து
தெட்சணமும் உத்தரமும் திசைபா ரெட்டும்
அருந்திட்ட ஆகாச சராச சங்கள்
அத்தனையுங் குலுங்கவசைந் தாடீ ரென்னே. (96)

ஆடீர் ஆடீர் துவாத சாந்த மெல்லாம்
அகண்ட விராட் டுங்குலுங்க வசைந்தசைந்து
சூடீர்பே ரொளியுமிழு மருண காந்திக்
கொடிசுடரும் இரத்தினமணிக் கிரீடம் சாத்தி
சேடிமா ராபரணம் சாத்தீர் கோடி
சித்தர்நவ கோடிநவ நாதி கோடி
கூடீர் கூடி நின்று ரிசிகள் தேவர்
கொண்டாட என்தாயா ராடீ ரூசல். (97)

தாயே யாறாதார மோராறுந்தான்
தாண்டிநின்ற சிவசோதி யென்று கூவு
ஓயாத மதியமுத மள்ளி யள்ளி
ஊட்டுகிற மோகினியே யென்று கூவு
மாயோனு மிந்திரனு மயனும் போற்றும்
மலர்ப்பீடத் தியாகமே யென்று கூவு
சேயபேயோ டாடியுடன் ஆடி வென்ற
சிற்பரையே பொற்பொதுவி லாடீர் ஊசல். (98)

ஊஞ்சலிலே கொலுவிருக்கு மென்னம் மாயி
உம்மாயி அம்மாயி ஓங்கா ராயி
சாஞ்சசிரி காராயி சிரிங்கா ராயி
சங்காயி ஐயும்கிலியும் சவ்வு மாகித்
தோஞ்சபிர ணவமுதலாய் வங்சிங் குள்ளாய்த்
துதிப்போருக் குள்ளொளியாய்த் துலங்கு மாயி
வாஞ்சையொடு செவிக்கவரும் ஆனந் தாயி
வருவாள்பின் கேட்டதெல்லாம் வழங்கு வாளே (99)

வழங்குவாள் பொன்னூஞ்சல் கொலுச்சே வைக்கே
மணிக்கயிற்றைப் பூட்டி நீ யறிவா லாட்டி
உளங்களிக்க வகிலசரா சரங்க ளெல்லாம்
ஒக்கஅசைந் தாடீரென் றுள்ளே யாட்டு
பழங்கிளவி இளங்குமரி வாலைக் கன்னி
பச்சைமவுனி பரமானந்தி என்னே
முழங்கு மானாதி தாண்டவாயி
மூவரையும் படைத்தருள் முக்கண்ணி யென்னே. (100)

என்னவே நினைத்ததெல்லாம் ஈவாள் பேச்சி
இகபரம் இரண்டுமமைத் தளிக்குந் தேவி
தன்னையே யுன்னுள்ளே கீழ்முக் கோணம்
தந்த வட்டவிந்து இதழ் நடுவி லேதான்
உன்னியே நமகுருவே நமச்சி வாய
என்றோது பிழையாமல் மவுனந் தாக்கு
மன்னியே பரமகுரு பாத்திர மேந்தி
மந்திரம்ஓம் அரிகூம்சிரிம் சங்கென் றூட்டே. (101)

ஊட்டுவாய் அவல் திருச்செம் பவழ வாய்க்கே
உண்டருள முன்வைத்து நீவே றாகிப்
பூட்டிமனம் பொறிபற்றிப் பாய்ந்தி டாமல்
புண்ணியசிவ லட்சுமியைப் பூசி பூசி
நாட்டமாய்க் குருபதத்தில் அறிவுபரை யிடமாய்
நன்றாகப் போகர்முறைப் படியே பூசி
தேட்டமாய்க் கடங்கொடுக்கும் உமையாள் வைத்த
சேஷமுண்ணப் பாத்திரந்தான் கொடுத்து வாங்கே. (102)

வாங்குவாய் ஆனந்தி மகமாயி கூடும்
மயேசுரர்க்குப் பாத்திரங்கள் வழங்கிப் பின்பு
பாங்குதூய அன்னபலா திகள் அருந்தப்
பார்பதிபோ சனிமாயி பயந்து செய்து
தாங்கியே பற்றுதலாய் நிறுத்தி வெவ்வேறு
தவசிருக்குஞ் சாதிக்க மந்திரம் பேசி
ஓங்கியே சமாதி சிவ யோகம்
உரைத்திருந்து வாமகுரு பூசை பண்ணே. (103)

பூசையிந்த விதிப்படியே செய்தோர்க் கையா
        பொய்யாது தொட்டசரக் கெல்லாம் நீறும்
தேசம்மெய்க்க வைத்தியமெல்லாம் செயமே யாகும்
        தேகசித்தி யோகசித்தி வாத சித்தி
ஆசைதரும் ஞானசித்தி யெல்லாம் ஆகும்
        ஆனந்த வயிரவனை மறந்தி டாதே
நேசமிகும் பொருளாகும் செந்தூ ரங்கள்
        நிசமாகும் வாமம்மற வாது செய்யே. (104)

தங்குக்குரு முறையில் தாமரை வெள்ளை

மறவாமல் பரிக்குருவில் ஒருகழஞ்சி எடுத்து
        மாசற்ற நவலோகம் உருக்கி யிட்டால்
உறவாகிப் பேதித்துத் திசைமாற் றாகும்
        உற்றுப்பார் தாம்பிரமிந்த முறையே செய்தால்
நிறமான வெண்மைநிறம் தாம்பிர வெள்ளை
        நீறினால் உம்மைவினை நீறிப் போச்சு
துறவான பரிநீற்றால் சயநோய் போய்ச்சு
        துட்ட ரோ கங்களெல்லாம் தூளாய்ப் போமே (105)

தூளாகப் பறந்தோடும் காய சித்தி
        சொர்ணமுண்ண மண்டலத்தில் காந்தி வேறாம்
மாளாமல் மன்மதன்போல் கற்பகால மெல்லாம்
        மதியறிந்து நவசித்த னாவாய் ஆவாய்
ஆளாவாய் நாதாக்கள் ஆடிய தாக்கும்
        அடியானா கியேவணங்க அருளுண் டாவாய்
கேளாதி வேதமுனி கேட்க நந்தி
        கிருபையினால் சூதமுனி இன்னம் சொல்வேன். (106)

குப்பிவைப்புச் செந்தூரம்

சொல்லுவேன் தொட்டிப்பா சாணம் வீரம்
        சொக்கலிங்கம் திருநீல கண்ட வாலை
எல்லவே நீலகண்டன் கெந்தி ரெண்டு
        எடையொவ்வொன் றேகாலாய் விளங்கத் தூக்கி
நல்லகுழிக் கல்லிட்டு நாத விந்தால்
        நாற்சாமம் அரைத்துரவித னிலு லர்த்தி
வல்லகுப்பி தனிலடைத்துக் கடிகை தோண
        வாலுகையில் எரித்திடச்செந் தூரந் தானே. (107)

தானென்ற செந்தூரம் கருவங் கத்தில்
        தாக்கப்பா நூற்றுக்கொன் றுருகுமுகந் தெளிவில்
வேனென்று நொறுங்குமது ஓட்டி லிட்டு
        வேண்டியே கலிப்படங்க வூதிப் போடு
கோனென்ற மாத்தென்ன தசமாற் றாகும்
        குன்றியெடை மண்டலந்தான் தேனிற் கொள்ளே
நானென்ற நரைபோகும் திரையும் போகும்
        நாதனென்று கற்பகாலம் இருத்தி டுமே. (108)

இருத்துமல்லால் மானிடருக் கனுப்பா னத்தில்
        எள்ளளவு செந்தூரம் பத்தியமாய்க் கொடுக்க
பொருத்துகால் மண்டலத்தில் தீரும் நோய்கள்
        பொல்லாத குறைநோவு வெள்ளைக் குட்டம்
வருத்தமுறும் அட்டகுன்மம் அட்ட காசம்
        மாறாத நீரிழிவு கர்ம நோய்கள்
ஒருத்தரிட முந்துஞ்சப் போகாதே யென்று
        ஓடுமே காதவழிக் கப்பா லோதும். (109)

ஓதுமிந் நூல்நூற்றுப் பத்தை யுந்தான்
        சற்புத்தி ரர்க்குநீ யோது சொன்னேன்
வாதுசெய்யுந் துன்மார்க்கர் கிதுகாட் டாதே
        வைத்தியமுறைக் கருக்குருவும் வகைபே சாதே
நீதிகுரு நாதனிணை யடிநீங் காதே
        நீளவுன்னைக் காத்ததுபோல் குருவைக் காரு
பாதுசெய்து சாற்றிடுவா ரிந்த நூலைப்
        பாருகெதி மோட்சமுண்டாம் நூற்றுப்பத்தே. (110)

சூதமுனி சாமியாரருளிச் செய்த
சூத்திரம் 110 முற்றும்.

தாமரை
நூலகம்